பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | மார்கழி 20 | வியாழக்கிழமை 04.01.2018 | கதிர் 60

**கல்விக்கதிர்**
பிரபல முன்னணி ஆசிரியர்
**வே.அன்பழகன்**
தயாரித்த புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் நாளை (05.01.2018) வெள்ளிக்கிழமை முதல் காலைக்கதிரில் வெளிவரும்.
பிரதிக்கு முந்துங்கள்

## இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி;
# குற்றவாளிகள் சகலருக்கும் தண்டனை!

### மைத்திரி அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஜன.04
இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள். அவர்கள் ஒருபோதும் தப்பிக்கவே முடியாது.இதில் நான் ஒருபோதுமே பின்வாங்கமாட்டேன்.

இவ்வாறு நேற்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

மத்தியவங்கி பிணைமுறிமோசடிவிசாரணை அறிக்கை கடந்த சனிக்கிழமை ஜனாதிபதியிடம்கையளிக்கப்பட்டது.அந்த அறிக்கை தொடர்பில் தனது நிலைப் பாட்டை விசேட உரை மூலம் ஜனாதிபதி நேற்று அறிவித்தார்.

பாரிய ஊழல் மோசடி ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள விசாரணை அறிக்கையையும் இந்த வாரத்துக்குள் சட்டமா அதிபரிடம் கையளிப்பேன் என்றும், அவை தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்என்றும்ஜனாதிபதிகூறினார்.

(அவரின் உரையின் முழு விபரம் 4ஆம், 17ஆம் பக்கங்களில்)

---

## 2020ஆம் ஆண்டுவரை கூட்டு அரசு நீடிக்கும்

### அறிவிப்பை வெளியிட்டார் தயாசிறி



கொழும்பு, ஜன.04
சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கியதேசியக்கட்சிக்கும் இடையிலான தேசிய அரசு உடன்படிக்கை 2020ஆம்ஆண்டுவரை

பக்கம் 18 >>>

## மஹிந்த அறிவித்தால் தகுந்த நடவடிக்கை

### கூறுகின்றார் தயாசிறி

கொழும்பு, ஜன.04
தனது புகைப்படத்தைச் சுதந்திரக்கட்சிபயன்படுத்தக்கூடாதுஎனமுன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடிதம் மூலம் அறிவித்தால், அதற்கு உரிய

பக்கம் 18 >>>

---

### தமிழரசுச் செயலாளருக்குப் பதிலடி

# தமிழரை ஏமாற்றவே இடைக்கால அறிக்கை

### அதனால் அதனை நிராகரிப்பதில் தவறில்லை என்கிறார் முதல்வர் விக்கி



யாழ்ப்பாணம், ஜனவரி 04
"ஒற்றையாட்சிக்கான ஆங்கிலச் சொல்லை (unitary) நீக்கி அதற்குப் பதிலாக 'ஏ கிய' என்ற பதத்தையும் தமிழில் கூட்டாட்சிக்கு ஒப்பான 'ஒருமித்த' என்ற பதத்தையும் அறிக்கையில் பாவித்ததன் மூலம் மக்கள் மீது திணிக்கப் படவிருக்கும் மோசடி புலப்படுகிறது.

தமிழ் மக்களை ஏமாற்றும் வகையிலேயே இடைக்கால அறிக்கை அமைந்துள்ளது. ஆகவே அதனை நான் நிராகரித்ததில் தவறில்லை.

இவ்வாறு அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண முதலமைச்சர் தமக்குக் கிடைக்கும் கேள்விகளில் ஒன்றை தேர்ந்தெடுத்து வாரா வாரம் பதில் தந்து வருகிறார். இந்த வாரம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கடந்த வாரம் தமிழரசுக் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம் வெளியிட்ட அறிக்கைக்குப்பதிலளிக்கும் வகையில் முதலமைச்சரின் கேள்வி–பதில் அமைந்துள்ளது.

(அதன் முழு விவரம் 09ஆம், 10ஆம் பக்கங்களில்)

---

## இடைக்கால அறிக்கையால் மூவினங்களும் ஏமாற்றம்

### யாழ்ப்பாணத்தில் ரிஷாத் சாடல்



யாழ்ப்பாணம், ஜன.04
புதியஅரசமைப்பைஉருவாக்குவதற்கான இடைக்கால அறிக்கையைப் பார்க்கும்போது, சில விடயங்கள் ஒழித்து வைக்கப்பட்டுள்ளன.சிங்களமொழி

பக்கம் 18 >>>

## கூட்டணியின் விஞ்ஞாபனம் நேற்று நல்லூரில் வெளியீடு



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஜன.04
தமிழர் விடுதலைக் கூட்டணியின்உதயசூரியன் சின்னத்தில்போட்டி

பக்கம் 18 >>>

## முல்லைத்தீவில் காய்ச்சல் பூரண கட்டுப்பாட்டுக்குள்

### மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்கிறார் வைத்திய நிபுணர் கேசவன்

முல்லைத்தீவு, ஜன.04
முல்லைத்தீவில் ஏற்பட்ட காய்ச்சல் முல்லைத்தீவு வைத்தியசாலை நிர்வாகத்தின் சிறந்த செயற்

பக்கம் 18 >>>

---

## மைத்திரிக்கு ஆதரவளித்ததால் ஏமாறவில்லை கூட்டமைப்பு

### உறுதிபடக் கூறினார் சம்பந்தன்



புதுடில்லி, ஜன.04
ஆட்சி மாற்றத்துக்காக மைத்திரிபால சிறிசேனவைஆதரித்தமையைநாங்கள்ஏமாற்றமாகக் கருதவில்லை. நல்லாட்சி அரசு மீது எமக்கு எந்த விரக்தியுமில்லை. ஆனாலும், அரசு தமிழ் மக்களுக்குஇன்னும்நிறையச்செய்யவேண்டியுள்ளது.
இவ்வாறு தெரிவித்துள்ளார்

பக்கம் 03 >>>

## கிளிநொச்சி மைதான சீரமைப்பு இராணுவத்திடம்

கொழும்பு, ஜன.04
கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தைச் சர்வதேசத் தரம் வாய்ந்த மைதானமாக அமைக்கும் பொறுப்பு இராணுவத்திடம்வழங்கப்படவுள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
வடக்கு மாகாணத்தில்

பக்கம் 03 >>>

## இது ரகசியம் அல்ல!



இலங்கைத்தமிழர்களைப்பொறுத்தவரை இரண்டு தலைவர்கள் இன்று மூத்தவர்கள். ஒருவர் சம்பந்தன். மற்றையவர் முதல்வர் நீதியரசர்

பக்கம் 18 >>>

---

## வவுனியா நகரில் நேற்று கடையடைப்பு பிசுபிசுப்பு




வவுனியா, ஜன.04
வவுனியா பழைய பஸ் நிலைய வர்த்தகர்கள் மேற்கொள்ளும் கடையடைப்புக்கு ஆதரவாக

பக்கம் 03 >>>

## சபையை அவசரமாக கூட்டும் அதிகாரம் பிரதமர் ரணிலிடம்

கொழும்பு, ஜன.04
நாடாளுமன்றத்தை அவசரமாகக்கூட்டும்அதிகாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பகிரப்பட்டுள்ளதாகச் சபாநாயகர் அலுவலகம்தெரிவித்துள்ளது.

பக்கம் 18 >>>

## வடக்கு இ.போ.ச. போராட்டம்; முரண்பட்ட தகவலால் குழப்பம்

### புறக்கணிப்பு இன்றும் தொடரும் என அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஜன.04
வடக்கு இ.போ.சவின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தால்கடந்த3தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த பணிப்புறக்

பக்கம் 03 >>>



# அரசுக்குச் சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை 57 ஆயிரத்து 961 என்கிறார் கயந்த கருணாதிலக!



கொழும்பு, ஜன. 04

அரசுக்குச் சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை 57 ஆயிரத்து 961 என்று கணக்கிடப்பட்டுள்ளது என நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவைத்துணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத்தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசின் சொத்துக்கள் மற்றும் செலவினங்கள்முகாமைத்துவகண்காணிப்பு நோக்கில் 2017 மார்ச் மாதம் 07ஆம் திகதி முதல் அதற்கான பணியகம் ஒன்று நிதி மற்றும் ஊடக அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டது.

அரசின் அனைத்து நிதி அல்லாத சொத்துக்களை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்து ஆவணப் பட்டியலை முன்னெடுப்பதே இந்த அலுவலகத்தின் முக்கிய பணியாகும்.

இந்த பணியகத்திடம் 2017 டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைவாக அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் குறித்த எண்ணிக்கைய நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார்.

அமைச்சரவை இந்தத் தகவல்களை கவனத்தில் கொண்டுள்ளது. இந்த தகவல்களுக்கமைவான சொத்துவிவரங்கள் பின்வருமாறு, அரசிற்கு சொந்தமான மொத்த வாக னங்களின் எண் ணிக்கை 57 ஆயிரத்து 961 ஆகும். இதில் பயன்படுத்தக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 238.

மத்திய அரசிற்குச் சொந்தமான வாகனங்கள் 26 ஆயிரத்து 732. அரச பணிகளுக்கான வாகனங்கள் 23ஆயிரத்து 506.

அவற்றில் பயன்படுத்த முடியாத வாகனங்களின் எண்ணிக்கை 7ஆயிரத்து 723. மத்திய அரசு 5 ஆயிரத்து 922, அரசபணிகளுக்கான வாகனங்கள் 1,801 ஆகும்.

இவற்றில் பயன்படுத்த முடியாதுள்ள வாகனங்கள் குறித்துத் தேவையான நடவ டிக்கைகள் மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சரவை ஆலோசனை வழங்கியுள்ளதாக அமைச்சரும் அமைச்சரவைத்துணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார். (க)

## வவுனியா பழைய பஸ் நிலையத்தில் கிரிக்கெட் விளையாடும் இளைஞர்!




வவுனியா பழைய பஸ் நிலையத்தில் இளைஞர்கள் சிலர் கிரிக்கட் விளையாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

பஸ்கள் இன்றியும் வியாபார நிலையங்கள் பூட் டப்பட்டுள்ளமையாலும் மக்கள் இன்றியும் வெறிச்சோடிக் காட்சியளிக்கும் அரச பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை வியாபார நிலையத்தில் பணியாற்றும் இளைஞர்கள் சிலர் கிரிக்கட் விளையாட்டில் ஈடுபட்டு வருவதைக்காணக் கூடியதாக இருந்தது.

வட மாகாண முதலமைச்சரால் பழைய பஸ் நிலையம் மூடப்பட்டு புதிய பஸ் நிலையத்தைப் பயன்படுத்துமாறு அறிவித்தல் விடுவிக்கப் பட்டது. புதிய பஸ் நிலையத்திற்கு செல்ல மறுப்பு தெரிவித்த இ.போ.ச சபையினர் மூன்றாவது நாளாக நேற்றும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தங்களது வர்த்தகம் பாதிப் படைந்துள்ளதாகத் தெரிவித்து பழைய பஸ் நிலைய கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள 130இற்கு மேற்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் வர்த்தக நிலையங் களுக்கு முன்பாகக் கறுப்பு கொடிகளைப் பறக்க விட்டு கடையடைப்பு செய்து தங்கள‌து எதிர்ப்பை வெளி யிட்டு வருகின்றனர்.

இந்த நிலையிலேயே இந்தப் பகுதி வெறிச்சோடிப் போயுள்ளமையால் இளைஞர் கள் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். (க-100)

## வவுனியாவில் ஈ.பி.டி.பி. கட்சி வேட்பாளரின் தாயார் மீது தாக்குதல் நடத்திய மூவர் கைது!

வவுனியாமகாறம்பைக்குளம் பகுதியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா தெற்கு பிரதேச சபையின் மகாறம்பைக்குளம் வேட்பாளரான தர்மகுலசிங்கம் சுஜீவன் என்பவரது தாயார் மீது நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இனந்தெரியாத நபர் மூவர் தலைக் கவசத்தால் தாக்குதல் மேற்கொண்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தாயார் தர்மகுலசிங்கம் சத்தியதேவி (வயது- 56) என்பவர் கருத்து தெரிவிக்கையில்-

இரவு 7 மணியளவில் மூவர் வீட்டிக்கு வந்து உங்களது மகன் எங்கே எனக் கேட்டனர். நான் அவர் வீட்டில் இல்லை வெளியே சென்றுவிட்டார் எனத் தெரிவித்தேன். அவர் என்ன தேர்தலா கேட்கின் றார். அவனை வர சொல்லுங்க வெட்டமல்விடமாட்டேன்னக் கூறி விட்டு என்னை தகாத வார்த்தையால் பேசினார்கள்.

அப்போது அவ்வாறு கதைக்க வேண்டாமென நான் தெரிவித்தபோது எனக்குத் தலைக் கவசத்தால் அடித்து விட்டு, வீதியில் உங்கள் மகனைக் கண்டால் வெட்டுவோம் வீட்டுடன் கொளுத்துவோம் என அச்சுறுத்தி விட்டு தப்பித்து சென்று விட்டனர் என தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளதுடன் இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் மூவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். (க-100)

## முடங்கிப்போயிருக்கும் கைத்தறி நெசவு ஆலையை மீள இயக்குவது குறித்து வடக்கு அமைச்சர் ஆலோசனை!

யாழ்ப்பாணம், ஜன. 04

பல்வேறு இடர்பாடுகள் காரணமாகத் தொடர்ந்து இயங்க முடியாது முடங்கிப்போயிருக் கும்கைத்தறிநெசவு ஆலையை மீள இயக்குகின்றமை குறித்து வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் துறைசார் உத்தியோகத் தர்கள் மற்றும் தொழிலாளர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் தர்மபுரம் பகுதியில் தொழிற்துறைத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கைத்தறி நெசவு ஆலையை தொடர்ந்தும் இயக்குவதில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்து வருவதுதொடர்பாக வட மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன்கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் அவர் அங்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் அமைச்சர் ஆலோசனையும் நடத்தியுள்ளார்.

வடமாகாணதொழிற்துறைத் திணைக்களத்தால் தொழிற்திறன் அபிவிருத்தி நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த கைத்தறி நெசவு ஆலையில் 9 கைத்தறி கருவிகளைக் கொண்டு 17 தொழிலாளர்கள் இயங்கிவந்திருந்தார்கள்.

இந்த நிலையில் கெயார் நிறுவனத்தால் கைத்தறி நெசவு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தது. பயிற்சிக் காலத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவும் கெயார் நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்தது.



பயிற்சி பெற்ற நெசவாளர் களுக்குப் போதிய வருவாய் உறுதிப்பாடு இல்லாத காரணத்தினால் தொடர்ந்தும் கைத்தறி நெசவில் ஈடுபட முடியாமல் அவர்கள் வேறு தொழில்களுக்குச் செல்லும் நிலையேற்பட்டுள்ளமையால் முடங்கிப்போயிருக்கும் இந் தக் கைத்தறி நெசவு ஆலையை மீள இயக்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பொறுப்பு வகித்து வரும் தொழிற்றுறைத் திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் தொழிலாளர்களால் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக் கப்பட்டிருந்தமை குறிப் பிடத் தக்கது. (க)

## பனி மூட்டம் சாரதிகள் அவதி!

வவுனியா, ஜன. 04

வவுனியாவில் இன்று அதிகாலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாக னங்களைச் செலுத்துவதில் பெரும் இடையூறுகளைச் சந்தித்திருந்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்க ளிலும் காலை 9 மணிவரை அதிகள வான பனி மூட்டம் காணப் பட்டது.

இதன் காரணமாக பாட சாலை மாணவர்களும் சிரமங்களை எதிர்கொண் டிருந்தனர். அண்மைக் கால மாகக் குளிருடன் கூடிய கால நிலை வவுனியாவில் காணப் பட்ட போதிலும் நேற்றைய நிலை போன்றதான பனி மூட்டம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-100)

# மத்தி கொடுத்த பணத்துக்கு மேல் வடக்கில் செலவழித்துவிட்டோம்

## முதலமைச்சர் அறிக்கை

2017ஆம் ஆண்டுக்காக மத்திய அரசால் வடக்கு மாகாணத்துக்குக் கொடுத்த பணத்துக்கு மேலாகவும் உரியவாறு இதுவரை செலவழித்து விட்டோம். கொடுத்த பணத்தை நாம் செலவழிக்கவில்லை என்று அங்கலாய்க்கும் பேர்வழிகளுக்கு நாம் கூறுவது இதுதான், ஒதுக்கிய பணத்தை ஏன் முழுமையாகவிடுவிக்கவில்லைஎன அரசிடம் கேளுங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த ஆண்டுச் செயற்பாடு தொடர்பில் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு இன்று நடைபெறவுள்ள நிலையிலேயே அவர் இதனை வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சென்ற ஆண்டுகளில் எமது வடமாகாணசபையின் முன்னேற்றம் சம்பந்தமாக நாங்கள் எந்தவித விவரங்களையும் மக்களுக்குத் தெரிவிக்கவில்லை. அதனால் இல்லாததையும் பொல்லாததையும் அவன் இவன் என்று எவனெவனோ சொல்லி வைக்க, அவற்றைப் பத்திரிகைகள் எம்மிடம் கேட்டு உண்மை அறியாது பிரசுரித்ததால் பெரும் இடர்பாடுகளை நாம் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவின் அண்மைய கூற்றும் இவ்வாறான தவறான தகவல்களை முன் வைத்தே வெளிவந்தது.

இந்த வருடத்தில் நாம் அவ்வாறான முன்னைய சம்பவங்களை மனதில் எடுத்து எமது 2017ஆம் ஆண்டுக்கான மூலதன முன்னேற்றத்தை வருடத் தொடக்கத்திலேயே சுருக்கமாகக் கூறிவைக்கின்றோம்.

2017ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக உள்நாட்டு நிதி மூலங்களிலிருந்து ரூபா 6 ஆயிரத்து 13.48 மில்லியன் மத்திய திறைசேரியால் பல்வேறு வேலைத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதில் 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதி வரை மத்திய திறைசேரியினால் வடக்கு மாகாண திறைசேரிக்கு விடுவிக்கப்பட்ட கட்டுநிதி ரூபா 5 ஆயிரத்து 399.20 மில்லியன் மட்டுமே ஆகும். இது மொத்த நிதி ஒதுக்கீட்டின் 90சத வீதமாகும்.

கிடைக்கப் பெற்ற ரூபா 5 ஆயிரத்து 399.20 மில்லியனும் (முழுமையாக 100 சதவீதம்) அமைச்சுக்கள் திணைக்களங்களினூடாகச் செலவுசெய்யப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் 97 சதவிகிதமான பௌதிக முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே, 2017ஆம் ஆண்டின் மூலதன அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 614.28 மில்லியன் மத்திய திறைசேரியினால் வடக்கு மாகாணத்திற்கு இன்னமும் விடுவிக்கப்படவேண்டும்.

மேலும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு இணை நிதியளிப்புக்களுக்கூடாக அபிவிருத்தித் திட்டங்களுக்கென வடக்கு மாகாணத்திற்கு அனுமதிக்கப்பட்ட வேலைத் திட்டங்களில் பாடசாலைக் கல்வியை ஓர் அறிவுமையத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்றிட்டத்துக்காகவும் சுகாதாரத்துறை அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் ரூபா.675 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த ஒதுக்கீட்டில் மத்திய திறைசேரியினால் 2017 டிசெம்பர் வரை விடுவிக்கப்பட்ட கட்டுநிதி ரூபா 612 மில்லியன் ஆகும். இது மொத்த ஒதுக்கீட்டின் 91சதவீதம் ஆகும். இவ் ஒதுக்கீடு முழுமையாகச் செலவு செய்யப்பட்டு 97 சதவீதமான பௌதிக முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 63 மில்லியன் மத்திய திறைசேரியினால் இன்னமும் விடுவிக்கப்படவேண்டியுள்ளது.

இதேவேளை தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் கீழ் ரூபா 207.11 மில்லியன் ஒதுக்கீடு வெவ்வேறு காலப்பகுதிகளில் அனுமதிக்கப்பட்டது.

இதில் 64 சதவீதமான கட்டுநிதி அதாவது ரூபா 131.65 மில்லியன் டிசெம்பர் மாதம் வரை விடுவிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா.75.16 மில்லியன் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்திலிருந்து வடக்கு மாகாணத்திற்கு விடுவிக்கப்பட வேண்டும். இன்னும் விடுவிக்கப்படவில்லை.

ஆகவே கொடுத்த பணத்தை நாம் செலவழிக்கவில்லை என்று அங்கலாய்க்கும் பேர்வழிகளுக்கு நாம் கூறுவது இது தான். நாம் கொடுத்த பணத்திற்கு மேலாகவும் உரியவாறு இதுவரை செலவழித்துவிட்டோம். ஆனால் அரசுதான் எமக்கு உறுதி அளித்த மொத்தப் பணத்தையும் தராதிருக்கின்றது. ஆகவே அரசிடம் ஏன் எமக்குரிய பணத்தை இன்னமும் கொடுக்கவில்லை என்று இந்தப் பேர்வழிகள் கேட்கவேண்டும்.

மேலும் 2016ஆம் ஆண்டு நாங்கள் பெறவேண்டிய பணத்தில் ரூபா ஆயிரத்து 50 மில்லியன் 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலேயே அரசால் எமக்கு கொடுத்து முடிக்கப்பட்டது. – என்றுள்ளது. (ஐ)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீர, வீராங்கனைகளின் ஆற்றலை மேம்படுத்த வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கில் அமைக்கப்பட்டு வரும் கிளிநொச்சிவிளையாட்டுமைதானக் கட்டடத் தொகுதியின் பணிகள் தற்போது தடைப்பட்டுள்ளன.

இதனைத் துரிதமாக முழுமைப்படுத்தித் பொதுமக்களிடம் கையளிக்கும் நோக்கில் நிர்மாணப்பணிகளை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கவும், அதற்காக 14 கோடியே 19 இலட்சம் ரூபா மதிப்பீட்டுக்கான தொகையில் பணியை மேற்கொள்ளும் பொருட்டும் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணிப்புப் போராட்டம் முதலமைச்சர் தலைமையில் நடந்த பேச்சை அடுத்து நேற்றுடன் முடிவுக்குவந்ததுஎனநேற்றுக்காலை அறிவிக்கப்பட்டபோதும் –

தமது கோரிக்கைகள் முதலமைச்சரால் நிறைவேற்றப்படாமையால் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்றும் தொடரும் என வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கச் செயலாளர் அ.அருள்பிரகாசம் நேற்று இரவு காலைக் கதிருக்குத் தெரிவித்தார்.

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் 40:60 என்ற இணைந்த நேர அட்டவணை அடிப்படையில் பஸ்சேவைகளை முன்னெடுக்க வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் வடக்குத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கமும் நேற்று முதலமைச்சர் தலைமையில் நடந்த பேச்சில் இணக்கம் கண்டுள்ளன.

வடக்குக்கான சேவையில் ஈடுபடும் வெளிமாகாண பஸ்கள் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நிறுத்தாமல் சேவையில் ஈடுபட வேண்டும் என்ற இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

ஆயினும், வடக்கு மாகாண முதலமைச்சருடன் நேற்று இடம்பெற்ற பேச்சுக்களில் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. தொடர்ந்து பணிப்புறக்கணிப்பை தொடரவுள்ளோம். போராட்டத்தை விரிவுபடுத்தியாழ்ப்பாணம் மத்தியபஸ் நிலையத்தில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம் எனத் தொழிற்சங்கத்தின் செயலாளர் குறிப்பிட்டார்.

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் அரச மற்றும் தனியார் பஸ்கள் சேவையை ஆரம்பிக்க வேண்டுமென வடக்கு முதலமைச்சர் அறிவித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த முதலாம் திகதி முதல் வடக்கு மாகாணத்தின் சகல அரச பஸ் பணியாளர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக வவுனியா பழைய பஸ் நிலையத்தில் கடைகளும் மூடப்பட்டன.

இந்த நிலையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் கொழும்பில் நேற்று முன்தினம் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள், முதலமைச்சரை சந்தித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று நண்பகல் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது இடம்பெற்ற பேச்சுக்களின் பிரகாரம் பணிப்புறக்கணிப்பைக் கைவிடுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதோடு, வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இருந்தே சேவைகளை ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் தமது கோரிக்கைகளை முதலமைச்சர் நிறைவேற்றாமையால் போராட்டத்தைத் தொடரவுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் கூறியுள்ளது.

பேச்சில் எட்டப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் தாம் வவுனியாபுதியபஸ்நிலையத்துக்குச் சென்று பார்வையிட்டதாகவும், அங்குதாம் கோரியபடிவசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை எனவும், இதனால் தாம் போராட்டத்தைத் தொடரவுள்ளனர் எனவும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கச் செயலாளர் குறிப்பிட்டார். (ஐ-7)

## மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

அரசியல் தீர்வு விடயத்தில் விரக்தியடையவோவிடயங்களை கைவிட்டுவிடவோ முடியாது. தற்போதைய சூழ்நிலையில் எமது நோக்கங்களில் தொடர்ந்தும் விடாப்பிடியாக இருந்து, விரைவானதும் வெற்றிகரமானது மானமுடிவைக்காணவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய ஆங்கில ஊடகமான இந்துப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர்தனதுசெவ்வியில்மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்க, மிகவும் சரியான தீர்மானத்தையே எடுத்தோம் என்பதில் எள்ளளவிலும் சந்தேகம் கொண்டிருக்கவில்லை.

மஹிந்த அரசில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதோடு, நியாயமற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்பே தமிழ் அரசியலுடன் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தொடர்பிருந்தது. தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்கு ஆதரவளித்தவர்களுள் மைத்திரியும் ஒருவர்.

குறிப்பாக கடந்த 1994ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரை காலப் பகுதியில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா கொண்டுவந்த அரசமைப்பு முன்மொழிவுகளுக்கு மைத்திரிபால சிறிசேன ஆதரவளித்துள்ளார். இவ்வாறான விடயங்களை வைத்து நோக்கும் போது, தமிழ் மக்கள் சார்பாக ஜனாதிபதி மைத்திரிக்கு அளித்த ஆதரவில் எவ்விதசந்தேகமும் இல்லை.

இனப் பிரச்சினைக்குச் சாதகமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காகப் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக நியமிக்கப்பட்ட பிரதமர் தலைமையிலான 21 பேர் அடங்கிய வழிநடத்தல் குழு தொடர்ச்சியான சந்திப்புக்களை மேற்கொண்டு இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அது நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு உட்படுத்தப்படுகின்றது.

இந்தநிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர் (பெப்ரவரியில்) அரசமைப்புப் பணிகள் மிக விரைவாக முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றேன்.

சில அரசியல் கட்சிகளின் சில நிலைப்பாடுகள் காரணமாக இந்தப் பணிகள் ஓரளவு தாமதமாகிவிட்டன.

படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவித்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்பான கேள்விகளும் உள்ளன. இவை தொடர்பில் எதுவும் செய்யப்படவில்லை என நான் கூறவில்லை. ஆனால், இன்னும் அதிகமாகச் செய்யப்பட வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 40 முதல் 50 வீதமானோர் சிறையிலிருந்து வெளியே வந்துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான கேள்விகளுக்குச் சுமார் 20ஆயிரம் முறைப்பாடுகள் உள்ளன. இது எண்ணிக்கை அடிப்படையில் மிகப் பெரியதாகும்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பான தகவல்களே அவர்களின் குடும்பங்களின் அடிப்படைத் தேவையாக உள்ளன. அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றார்களா இல்லையா? என்பது தொடர்பில் முடிவுகள் தேவை. அவர்களுக்குச் சில ஆறுதல்கள் இருக்க வேண்டும். அவர்கள் யதார்த்தத்துடன் இணங்கக்கூடிய வகையில் தமது வாழ்க்கையை முன் கொண்டு செல்ல மறுசீரமைப்பு உதவிகள் அவசியமானதாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட – 2015ஆம் ஆண்டுதமது இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை அரசு தமது கடப்பாடுகளை இன்னும் நிறைவேற்றவில்லை.

பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்தக் காலதாமதத்தினால் தமிழ் மக்கள் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இதேவேளை –

எனக்குக் கிடைத்த தகவல்களின்படியும் நான் வாசித்த வரையிலும் வடக்கு மாகாண சபை மேலும் சிறப்பாகச் செயற்பட்டிருக்க முடியும். 13 ஆவது திருத்தம் தன்னகத்தே குறைகளைக் கொண்டிருக்கலாம். என்றாலும், அந்தக் கட்டமைப்பின் கீழும் மேலும் அதிகம் செய்யப்பட்டிருக்கு முடியும். ஆரம்பத்தில் ஆளுநர் இடைஞ்சலாக இருந்தார். அவர் இராணுவத் தரப்பினராக இருந்தார். ஆனால் 2015 இலிருந்து புதிய ஆளுநர்கள் வந்தார்கள். அவர்கள் தாராளத் தன்மையுடனும் முன்னேற்றகரமாகவும் செயற்பட்டனர்.

மக்கள் தொடர்பாக, அவர்களின் அன்றாடத் தேவைகள் தொடர்பாக, இப்போது செயற்பட்டிருக்கின்றமையை விட, மேலும் ஆக்கபூர்வமான வகையில் வடக்கு மாகாண சபை செயற்பட்டிருக்கலாம்; செயற்பட்டிருக்கவேண்டும். – என்றார். (ஐ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வவுனியா நகரம் முழுவதிலும் கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்புவிடுக்கப்பட்ட போதும், அது வெற்றியளிக்கவில்லை.

வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவரால் இந்தப் போராட்டத்துக்கான அழைப்புவிடுக்கப்பட்ட போதும் நேற்று நகர வர்த்தகர்கள் கடைகளைத் திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பஸ் நிலையம் வடக்கு மாகாண முதலமைச்சரின் உத்தரவை அடுத்துக் கடந்த முதலாம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது.

இதனால் பழைய பஸ் நிலையப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி கடந்த மூன்றுதினங்களாகக் கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவு தெரிவித்தே வவுனியா நகரம் முழுவதும் நேற்றுக் கடையடைப்பை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா பழைய பஸ் நிலையத்தைச் சூழவுள்ள கடைகள் மூடப்பட்டிருந்தபோதிலும் பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி, கொரவப் பொத்தானை வீதி, யாழ். வீதி ஆகிய வற்றில் உள்ள கடைகள் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றன.

தனியார் பஸ் சங்கத்தினரும் தமது சேவைகளை இரட்டிப்பாக்கிச் சேவையில் ஈடுபட்டமையினால் புதிய பஸ் நிலையத்தில் அதிகளவான பயணிகளையும் காண முடிந்தது. (ஐ-100)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சம்பந்தனின் மதிப்பீடு

**வடக்கு மாகாண சபையின் தற்போதைய ஆட்சிக் காலம் நான்கே கால் ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் எட்டு அல்லது ஒன்பது மாதங்களே மிச்சம் இருக்கின்றன.**

**இந்தச் சமயத்தில்தான் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையிலான மாகாண சபையின் செயற்போக்குக் குறித்து தமது மதிப்பீட்டை முதல் தடவையாக வெளியிட்டிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.**

***"எனக்குக் கிடைத்த தகவல்களின்படியும் நான் வாசித்த வரையிலும் வடக்கு மாகாண சபை மேலும் சிறப்பாகச் செயற்பட்டிருக்க முடியும். 13 ஆவது திருத்தம் தன்னகத்தே குறைகளைக் கொண்டிருக்கலாம். என்றாலும் அந்தக் கட்டமைப்பின் கீழும் மேலும் அதிகம் செய்யப்பட்டிருக்க முடியும். ஆரம்பத்தில் ஆளுநர் இடைஞ்சலாக இருந்தார். அவர் இராணுவத் தரப்பினராக இருந்தார். ஆனால் 2015 இலிருந்து புதிய ஆளுநர்கள் வந்தார்கள். அவர்கள் தாராளத் தன்மையுடனும் முன்னேற்றகரமாகவும் செயற்பட்டனர்.***

***"மக்கள் தொடர்பாக, அவர்களின் அன்றாடத் தேவைகள் தொடர்பாக, இப்போது செயற்பட்டிருக்கின்றமையை விட, மேலும் ஆக்கபூர்வமான வகையில் வடக்கு மாகாண சபை செயற்பட்டிருக்கலாம்; செயற்பட்டிருக்கவேண்டும்."***

**- இவ்வாறு 'த ஹிண்டு' நாளிதழுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்திருக்கின்றார் சம்பந்தன்.**

**தமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெற்றிகொள்ளப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வரும் வடக்கு மாகாண சபை குறித்து மதிப்பீட்டுக் கருத்து ஒன்றை இப்போதுதான் முதல் தடவையாக - வெளிப்படையாக - பகிரங்கப்படுத்துகின்றார் சம்பந்தன்.**

**மேலோட்டமாகப் பார்த்தால் இது சாதாரண ஒரு மதிப்பீடு தான். ஆனால், இதற்குள் அதிக அர்த்தங்கள் பொதிந்திருக்கின்றன என்பதுதான் உண்மையாகும்.**

**நீண்ட ஜனநாயகப் போராட்டங்கள் மற்றும் ஆயுதப் போராட்டங்களின் பெறுபேறாகக் கடைசியில் கிட்டியதுதான் வடக்கு மாகாண சபை. மலையயைக் கெல்லி எலியைப் பிடித்த மாதிரி கடைசியாகக் கைக்குள் கிடைத்தது அதுதான்.**

**அதை வைத்துக்கொண்டு 'மாயாஜாலம்' செய்து விடுவோம் என்ற மாதிரித்தான் வடக்கு மாகாண சபைத் தேர்தல் சமயத்தில் கூட்டமைப்புக் கூறியது என்பதை மறந்துவிட முடியாது.**

***"வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் வெற்றியைத் தாருங்கள். மாகாண ஆளுநரை மாற்றிக் காட்டுகின்றோம். ஆக்கிரமிப்பு நிலங்களிலிருந்து இராணுவத்தை அகற்றிக் காட்டுகின்றோம்"***

**- என்றெல்லாம் கூட்டமைப்பு கூறியது. ஏன் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட நீதியரசர் விக்னேஸ்வரன் கூட அப்படி எல்லாம் அப்போது கூறத் தவறவில்லை.**

**தமிழ் மக்கள் மூன்றில் இரண்டு அல்ல அதனையும் தாண்டிய வெற்றியைத் தந்தனர். ஏறத்தாழ ஐந்தில் நான்கு வெற்றியை வாரி வழங்கினர். முப்பத்தியெட்டு உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் முப்பது இடங்களைக் கூட்டமைப்புக்கு வழங்கினர். இத்தகைய வெற்றியைத் தந்தால் என்னென்ன சாதித்துக் காட்டுவோம் என்றெல்லாம் கூட்டமைப்புக் கூறியதோ, அதில் கணிசமாக அளவையேனும் அது செய்ததா என்பதே இப்போது பேசு பொருளாகும். ஆளுநரை மாற்றுவதும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களிலிருந்து இராணுவத்தினரை அகற்றுவதும் மாகாண சபைகளின் அதிகாரங்களுக்கு உட்பட்ட விடயங்கள் அல்ல. ஆகவே அவற்றை விட்டுவிடுவோம்.**

**1988இல் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் வாயிலாக கொண்டுவரப்பட்டது மாகாண சபை. ஆனால், வடக்கிற்கான தனியான மாகாணசபை தேர்தல் மூலம் நிர்வாகத்துக்கு வந்தது இருப்பத்தியைந்து ஆண்டுகள் கழித்து 2013இல்தான். இந்தக் கன்னி நிர்வாகத்தில் புதிய நிலையியல் சட்டங்களின் உருவாக்கம் உட்படப் பல விடயங்களை மக்கள் எதிர்பார்த்தார்கள்.**

**ஆனால் அதன் பெறுபேறு கடைசியாக எப்படி அமைந்தது என்பதைத்தான் சம்பந்தனின் மதிப்பீடு காட்டுகின்றது.**

**வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையில் அமைந்த சபை மீதான சம்பந்தனின் இந்த மதிப்பீடு - அல்லது குறை கூறல் - முதல்வர் விக்னேஸ்வரனையும் உள்ளடக்கியது என்றாலும், இந்த மதிப்பீட்டை முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எதிரான குற்றச்சாட்டாக கருதவேண்டியதில்லை என்பதுதான் எமது கணிப்பீடு.**

**இந்த மதிப்பீட்டை சம்பந்தன் இப்போது வெளியிட்டாலும் வடக்கு மாகாண சபை வினைத்திறனுடையதாகச் செயற்படவே யில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டே வந்திருக்கின்றது.**

**கண்ணியமான முதலமைச்சர், திறமையான அவைத் தலைவர் என்றெல்லாம் கொண்டிருக்கும் வடக்கு மாகாண சபை வெற்றியை எட்டாத நிலையில் இருப்பது ஏன்?**

**இவர்களோடு சேர்த்து ஒரு கோமாளிகள் குழுவையும் (Bunch of Jokers) மாகாண சபைக்கு அனுப்பியதுதான் காரணம். எதையும் செய்ய விடாமல் தடுக்கும் 'குறை கூறிகளை' கூட்டமைப்பு அரசியல் தலைமைப் பிரகிருதிகள் தங்களுடைய ஆள்களாக வடக்கு மாகாண சபைக்கு அனுப்பி, அங்கு பண்ணிய குசும்புகள்தாம் இந்தக் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் மூலகாரணம்.**

**அந்தப் பட்டறிவின் பின்னரும் - படிப்பினையின் பின்பும் - அனுபவப் பாடத்தின் முடிவிலும் - அதே பாணியில்தான் உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர் தேர்வுகளும் நடந்திருக்கின்றன போலப்படுகின்றது.**

**கடந்த தடவை உள்ளூராட்சி சபைகளுக்கு வந்த கதி - இந்தத் தடவைவடக்குமாகாண சபைக்கு நேர்ந்த அவலம் - இனித்தெரிவாகப் போகும் உள்ளூராட்சிசபைகளுக்கு வராமல் பார்த்துக் கொள்வது வாக்களிக்கப் போகும் நமது மக்களின் கைகளில்தான் உள்ளது.**

# குற்றவாளிகள் சகலருக்கும் தண்டனை!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்துக்கொண்டிருக்கும் ஒரு விடயமாக 2015/16 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி விவகாரம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையும் பொது மக்களின் கருத்தையும் கவனத்தில்கொண்டு, என்னால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை, அந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான முன்மொழிவுகள் ஆகியன உள்ளடங்கிய அறிக்கை 2017 டிசம்பர் 30ஆம் திகதி மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுவால் என்னிடம் கையளிக்கப்பட்டது.

2015 பெப்ரவரி முதல் 2016 மார்ச் 31 வரையிலான காலத்திற்கு உட்பட்ட பிணைமுறி வழங்கல் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கான அதிகாரமே இந்த ஆணைக் குழுவுக்கு கிடைக்கப்பெற்றது. அந்த ஆணைக்குழுவின் பொறுப்புகளாக

I சம்பந்தப்பட்ட விவரங்களை ஆராய்ந்து பார்த்தல்.

II திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களுக்கு வருவதும் அந்தத் தீர்மானங்கள் தொடர்பில் முன்மொழிவுகளை முன்வைப்பதுமே ஆகும்.

ஆணைக்குழுவின் ஆணையாளர்களாகச் செயற்பட்ட உயர் நீதிமன்ற நீதிவான்களுக்கும் ஆணைக்குழுவின் ஆணையாளராக கடமையாற்றிய அரச கணக்காய்வுத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் நாயகத்துக்கும் ஆணைக் குழுவின் செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கும், சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், பொலிஸ் திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவு மற்றும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற தகவல்களுக்கு ஒப்பான நிலைமை 2008 ஆண்டிலிருந்து இடம்பெற்று வந்திருப்பதாக ஆணைக்குழு கருதுகின்றது. அந்த விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு அதாவது, 2008ஆம் ஆண்டுமுதல் நடைபெற்ற ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பில் கணக்காய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென்றும் அதனை இலங்கை மத்திய வங்கியால் முன்னெடுக்கப்படவேண்டுமென்றும் அதற்கமைய கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் ஆணைக்குழு அறிவுறுத்துகிறது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியே அக்காலத்தில் அதிகளவில் மோசடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என ஆணைக் குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

2015/2016 காலப்பகுதிக்கான ஆணைக்குழுவின் அறிக்கை இடைக்கால அறிக்கை அல்லாது 1,257 பக்கங்களைக் கொண்ட முழுமையான அறிக்கையாகும். இந்தப் பணியை மேற்கொள்வதற்காக அவர்களுக்கு 10 மாத காலத்தை செலவிடவேண்டியிருந்தது.

இந்த அறிக்கையை ஏற்கனவே நான் சட்டமா அதிபரிடம் கையளித்திருக்கிறேன். எதிர்வரும் காலங்களில் அறிக்கையின் பரிந்துரைகளுக்கமைய குற்றவியல் மற்றும் சிவில் வழக்குகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தாலும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவாலும் முன்னெடுக்கப் படவேண்டுமென ஆணைக்குழுவின் அறிக்கை குறிப்பிடுகின்றது.

மத்திய வங்கியின் கட்டமைப்பு, அரச கடன் திணைக்களம், நேரடி பிணைமுறி வழங்கல், பிணைமுறி இறைமை மற்றும் பிணைமுறியை ஏலத்தில் விடுதல் ஆகியவற்றின் சாதக பாதக நிலைமைகளைத் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

அர்ஜுன மகேந்திரனதும் வங்கி உத்தியோகத்தினர்களினதும் வெளியிலிருந்து செயற்பட்ட நபர்களினதும் நிறுவனங்களினதும் பங்கேற்புடனும் பெர்பெச்சுவல் ட்ரஸீஸ் நிறுவனம் சட்டத்திற்கு முரணான வகையில் இலாபத்தை ஈட்டியுள்ளது என்பதை இந்த அறிக்கை கூறுகின்றது.

2015 பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தின் மூலம் பெர்பெச்சுவல் நிறுவனம் ஆகக்குறைந்த 688 மில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டியுள்ளது. இந்தத் தொகையானது இந்த விசாரணைக்கு உட்பட்ட காலப்பகுதியில் ஈட்டிய இலாபமாக இருப்பதால் இதைவிட கூடுதலான இலாபத்தை இந்த நிறுவனம் ஈட்டியிருக்கக்கூடுமென ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

விசாரணைகளிலிருந்து வெளிப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இரண்டாம் நிலைச் சந்தையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெர்பெச்சுவல் நிறுவனம் பெற்றுக் கொண்டுள்ள ஆகக்குறைந்த இலாபம் 11,145 மில்லியன் ரூபாவாகும். இதனால் ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட இதனுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நட்டம் 8,529 மில்லியன் ரூபாவாகும். அதாவது, 8.5 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் முடிவுகள் தொடர்பில் மத்திய வங்கியின் உயரதிகாரிகள் செயலிழந்த நிலையில் இருந்ததாகவும் அவர்கள் எந்தவித கேள்விகளையும் எழுப்பாது செயலிழந்த நிலையில் இருந்ததால் தவறான முடிவுகளை எடுக்கக்கூடிய வாய்ப்புகள் உருவாகியிருக்கலாமெனவும் ஆணைக் குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

அத்தோடு, அர்ஜுன மகேந்திரன் முறைகேடான முறையிலும் தவறான முறையிலும் தீர்மானங்களை மேற்கொண்டு பிணைமுறை ஏலம் தொடர்பான செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டிருப்பதுடன், உள்ளகத் தகவல்களை வெளித்தரப்பினருக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார் என்பதும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கு இலாபமீட்டக்கூடிய வாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் இந்த அறிக்கை கூறுகின்றது.

அர்ஜுன மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு நியமிப்பது தொடர்பான பிரதமரின் அதிகாரங்கள் முறையானது என்றும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்த பிரதமர், அர்ஜுன மகேந்திரன் மற்றும் சமரசிறி ஆகியோர் பற்றியும் அதிலும் குறிப்பாக, அர்ஜுன மகேந்திரன் கொடுத்த வாக்குறுதி மீது நம்பிக்கை வைத்து செயற்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார் என்றும், எனினும், பிரதமர் அப்படி நடந்திருக்கக்கூடாது எனவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இந்த விடயங்கள் கோப் விசாரணைக்குழுவின் முன்னிலையிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தபோதும் பிரதமரால் அர்ஜுன மகேந்திரன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

அலோசியஸ் குடும்பத்தினருக்குச் சொந்தமான அவர்களின் நிர்வாகத்தின் கீழிருந்த வோல்ட் அன் றோ நிறுவனத்தால் பென்ட் ஹவுஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான பென்ட் ஹவுஸ் மாடி வீட்டுக்கு மாதாந்த வாடகை செலுத்தியிருப்பதையிட்டு பொறுப்பேற்க வேண்டியவர் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவே என்பதும் இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதனால் அவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடுக்கப்படவேண்டுமெனவும், ஆணைக்குழுவின் முன்னால் பொய்ச் சாட்சியம் அளித்தமை தொடர்பில் அவருக்கு எதிராகக் குற்றவியல் சட்டத்தின்கீழ் வழக்கு தொடுக்கப்படவேண்டுமெனவும் இவ்வறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி முறைகேடான விதத்தில் உபயோகப் படுத்தப்பட்டிருப்பதாகவும் இவ்வறிக்கை தெரிவிக்கின்றது. அதன் உண்மையான தொகையை அறிவதற்கு சட்டரீதியான ஆய்வு (தடயவியல் தணிக்கைபரிசோதனை) (Forensic Audit Examination) மேற்கொள்ளப்படவேண்டுமென இவ்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினரின் செயற்பாடுகள் காரணமாகவே ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி தவறான முறையில் உபயோகப்படுத்துவதற்குக் காரணமாக அமைந்திருப்பதாகக் கூறும் இவ்வறிக்கை, சம்பந்தப்பட்ட தரப்பினரை இனங்கண்டிருப்பதுடன், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட்டுள்ளது.

தண்டனை பெற்றுக்கொடுப்பதற்காக பெர்பெச்சுவல் நிறுவனத்தின் அர்ஜுன அலோசியஸ், கசுன் பலிஹேன மற்றும் அறிக்கையில் பொறுப்புக் கூறவேண்டியவர்களாக இனங்காணப்பட்டிருப்பவர்களுக்கு எதிராகக் குற்றவியல் மற்றும் சிவில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டுமென்றும் இவ்வறிக்கை


17 ஆம் பக்கம் பார்க்க...

## நாளை

05.01.2018
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : ஆயிலியம் மு.ப. 9.12 வரை
திதி : சதுர்த்தி மு.ப 1.01 வரை
சுபநேரம் : 06.31 – 08.01 வரை
இராகுகாலம்: 11.01 – 12.31 வரை

## இலங்கையில் அபூர்வ அணில்!



கொழும்பு, ஜன. 04

இலங்கையில் அபூர்வமான அணில் இனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரணாநாயக்க, செலவ, பில்லேவ பிரதேசத்தில் அரிய வகை வெள்ளை நிற அணில் ஒன்று இனங் காணப்பட்டுள்ளது.

அந்த பகுதி வீடொன்றில் விழுந்து கிடந்த அணில் குட்டியை, வீட்டு உரிமையாளர் மீட்டிருந்தனர்.

அந்த அணில் குட்டியை வீட்டவர்கள் செல்லப்பிராணியாக வளர்த்து வருகின்றனர்.

இதற்கு முன்னரும் இந்த பிரதேசத்தில் வெள்ளைநிற அணில் குட்டி ஒன்றைக் காண முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சாதாரண அணில்கள் காணப்பட்டபோதும், இவ்வாறு வெள்ளை நிற அணில்கள் காணப்படுகின்றமை மிகவும் அபூர்வம் என வன ஜீவராசிகள் தொடர்பான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் வகுப்பு மாணவர் அனுமதி; முறையிட முடியும் - கல்வி அமைச்சு

முதலாம் வகுப்புக்கு புதிய மாணவர்களை அனுமதிக்கும் போது ஏதாவது முறைகேடுகள் ஏற்பட்டால் முதலில் அந்த பாடசாலையில் அல்லது மாகாணக் கல்வி அமைச்சில் அல்லது கல்வி அமைச்சில் முறைப்பாடு செய்ய முடியும்.

அதற்கு மேலாக இந்த நடவடிக்கைகள் தொடர்பில் மேன்முறையீடும் செய்ய முடியும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலாவது வருட மாணவர் அனுமதி பெயர் பட்டியல் தற்பொழுது பாடசாலைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர் அனுமதி தொடர்பில் பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளவர்களுக்கு உதவுவதற்காக விசேட பிரிவொன்று அமைத்து அதன் மூலம் குறித்த பிரச்சினைகளுக்குத்தீர்வைப்பெற்றுக் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம் என்று கல்வி அமைச்சின் பாடசாலை ஒருங்கிணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்திற்கான முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை அனுமதிக்கும் நடவடிக்கையை எதிர்வரும் 15 ஆம் திகதி மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் மூலம் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# டுபாய், சவூதியிலுள்ள இலங்கையரிடமும் இனி வற் வரி அறவிடுவதற்கு முடிவு!

டுபாய் மற்றும் சவூதி அரேபியாவிலுள்ள இலங்கையர்களுக்கு இந்த வருடம் முதலாம் ஆம் திகதி முதல் முறையாக வற் வரி செலுத்தும் நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என டுபாய் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு 5 வீத வற் வரி அறவிடப்படவுள்ளது. இந்த வரி அந்நாடுகளிலுள்ள சகல வெளிநாட்டவர்கள் மீதும் விதிக்கப்பட்டுள்ளது.

வரியற்ற நாடுகளாக நீண்ட காலமாக அடையாளப்படுத்தப்பட்டு வந்த டுபாய் மற்றும் சவுதி நாடுகளில் இலங்கை தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் உள்ளனர்.

இந்த வற் வரி எரிபொருள், உணவு, புடைவை, மின்சாரம், நீர் மற்றும் வாடகை அறை என்பவற்றுக்காக அறவிடப்படவுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் வேண்டுகோளுக்கிணங்க இந்த வற் வரி அறவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த நாடு அறிவித்துள்ளது.

இதேவேளை, டுபாயில் அதிவேகப் பாதையில் பயணிப்பதற்கான கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

டுபாயில் சுமார் 3 லட்சம் இலங்கையர்களும், சவூதியில் சுமார் 1 லட்சத்து 90 ஆயிரம் இலங்கையர்களும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகராக முன்னாள் றோ தலைவர் ரஜிந்தர் கன்னா நியமனம்!

கொழும்பு, ஜன. 04

இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகராக, இந்தியாவின் வெளியகப் புலனாய்வு முகவரமைப்பான றோவின் முன்னாள் தலைவரான ரஜிந்தர் கன்னா நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த, இந்திய வெளிவிவகாரச் சேவையின் முன்னாள் அதிகாரி அரவிந்த் குப்தா கடந்த ஓகஸ்ட் மாதம் ஓய்வுபெற்ற பின்னர், வெற்றி டமாக இருந்த இந்தப் பதவிக்கே, ரஜிந்தர் கன்னா நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஜிந்தர் கன்னா, 1978ஆம் ஆண்டு றோவில் இணைந்து கொண்டார். பாகிஸ்தான் மற்றும் இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிராக இவரது கண்காணிப்பில் பல தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்



பட்டுள்ளன.

ஒப்பந்த அடிப்படையில் இவரைப் பிரதித் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையின் நியமனக் குழு முடிவு செய்துள்ளது. எனினும் இவரது பணிக்காலம் அறிவிக்கப்படவில்லை.

ரஜிந்தர் கன்னா தற்போது, தேசிய பாதுகாப்புச் சபை செயலகத்தின், அயல்நாடுகள் கற்கைகள் பிரிவில் சிறப்புப் பணி அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

அவரது தலைமையின் கீழேயே, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் உள்ளிட்ட நாடுகள் தொடர்பான கொள்கை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், புலனாய்வு அமைப்புகளின் தலைவர் பதவியில் இருந்த ஒருவர் நியமிக்கப்பட்டிக்கின்றமை இதுவே முதல் முறையாகும். (க)

## தேர்தல் தொடர்பில் தெளிவூட்டல்



ஹட்டன், டிக்கோயா நகர சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தேர்தல் தொடர்பாக தெளிவூட்டும் கலந்துரையாடல் நிகழ்வு ஒன்று ஹட்டனில் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் தலைமையக பொலிஸ் இன்ஸ்பெட்டர் ஜெமில் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், உள்ளூராட்சி தேர்தலில் பிரசாரங்களை மேற்கொள்ளும் வேளையில், எவ்வாறான சட்ட திட்டங்களை கையாள வேண்டும் என சட்ட விதிகள் தொடர்பில் பொலிஸ் அதிகாரியால் வேட்பாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

மேலும், இந்தக் கலந்துரையாடலின்போது, இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட விருக்கும் ஹட்டன், டிக்கோயா போன்ற பிரதேசங்களில் உள்ள வேட்பாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (க)

# புத்தாண்டு நிகழ்வு பாதுகாப்பு அமைச்சில்!





கொழும்பு, ஜன. 04

பாதுகாப்பு அமைச்சின் புத்தாண்டை வரவேற்கும் வைபவ ரீதியான நிகழ்வுகள் பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன தலைமையில் நடைபெற்றன.

பாதுகாப்பு அமைச்சின் வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வு மத அனுஷ்டானங்களுடன் ஆரம்பமானது.

அதைத்தொடர்ந்து செயலாளரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு பின்னர் அமைச்சில் பணிபுரியும் அதிகாரிகளால் சத்தியப் பிரமாணமும் எடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய பாதுகாப்புச் செயலாளர், அர்ப்பணிப்புடன் தமது வேலைகளைச் செய்யும் அனைவருக்கும் நன்றி. ஜனாதிபதியால் இந்த ஆண்டு உணவு உற்பத்தி ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாம் சிவில் சேவையாளர்கள் என்ற வகையில் நாட்டின் தேசிய இலக்கை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

மேலும், வெற்றிகரமான மற்றும் வளமான ஆண்டுக்கான எனது புது வருட வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன் என்றார் அவர்.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுனில் சமரவீர, மேலதிக செயலாளர்கள், கடற்படைத் தளபதி, கடலோரப் பாதுகாப்புப் படை பணிப்பாளர், இராணுவ இணைப்பு அதிகாரி, அமைச்சின் அதிகாரிகள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் அமைச்சின் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க)

# விபத்தில் மூவர் படுகாயம்!




மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிப்பளை சந்தியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான விசாரணைகளை கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலையில் டெங்கு ஆபத்தா? அந்த அதிபருக்கே தண்டம்



டெங்கு ஆபத்துள்ள இடமாக பாடசாலை அடையாளம் காணப்பட்டால் அதிபரது பிரத்தியேக நிதியிலிருந்தே தண்டப்பணமாகச் செலுத்த வேண்டும் என சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் சஹூதுல் நஜீம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

பாடசாலைச் சூழலைச் சுத்தமாகவும், டெங்கு நுளம்பு பரவும் இடங்களை முற்றாக அகற்றி கற்றலுக்கான சூழலை அதிபர்கள் ஏற்படுத்த வேண்டும்.

தவறின் பிரதேச சுகாதார அதிகாரி குழு மூலம் டெங்கு பரவக்கூடிய இடம் அடையாளம் காணப்படின் அதற்கான தண்டப் பணத்தை அதிபரது பிரத்தியேக நிதியிலிருந்தே செலுத்த வேண்டி நேரிடும்.

பாடசாலை முதலாம் தவணை ஆரம்பிக்கும் நிலையில் பெற்றோர்களது பங்களிப்புடன் சிரமதானம் மேற்கொண்டு பாடசாலைச் சூழலைச் சுத்தமாகவும் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை முற்றாக அகற்றிக் கற்றலுக்கான சூழலை அதிபர்கள் ஏற்படுத்தியிருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ப)

# திருமலை மாணவர் ஐவர் படுகொலையின் 12 ஆவது ஆண்டு நினைவேந்தல்!



திருகோணமலை,ஜன.04

திருகோணமலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் 12 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

திருகோணமலை மாணவர்கள் ஐவரும் மிகக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலைக் கடற்கரையில் பிரதான நினைவு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

திருகோணமலை நகரத்தின் கடற்கரை வீதியிலுள்ள காந்தி சிலைக்கு முன்னால் 12 வருடங்களுக்கு முன்னர் இதே போன்ற ஒருநாளில் இலங்கை அரச படையினரால் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலைக்கு இது வரை நீதி நிலைநாட்டப்படாது இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வரும் நிலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினை வேந்தல் நிகழ்வொன்று நேற்று முன்தினம் திருகோணமலை வாழ் பொது மக்களால், ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தநிகழ்வில் மாணவர்களின் உறவுகள், நண்பர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

படுகொலை செய்யப்பட்ட மனோகரன் ரஜிஹர், யோகராஜா ஹேமச்சந்திரா, லோகிதராஜா ரோகன், தங்கதுரை சிவானந்தா, சண்முகராஜா கஜேந்திரன் ஆகிய ஐந்து மாணவர்களின் புகைப்படத்திற்கு முன்பாக விளக்கேற்றி மலர் தூவி மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு பல்கலைக்கழக தேர்வுக்காகக் காத்திருந்த 5 தமிழ் மாணவர்களும் திருகோணமலை கடற்கரையில் வைத்து கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி இலங்கையின் சிறப்பு அதிரடிப்படையினரின் மிலேச்சத்தனமான தாக்குதலில் கொலை செய்யப்பட்டிருந்தனர். எனினும் இந்தப் படுகொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அரசாங்கமும், இராணுவத்தினரும், பொலிஸாரும் தொடர்ச்சியாக மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

# விவசாய அபிவிருத்தியை அடைவதற்காக கிண்ணியாவில் விசேட நிகழ்ச்சித் திட்டம்



2018ஆம் ஆண்டு உணவு உற்பத்தி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நிலைபேறான விவசாய அபிவிருத்தியை அடைவதற்காகக் கிண்ணியாவில் விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு, கிண்ணியா நகர சபையின் செயலாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

நிலைபேறான விவசாய அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதை முதன்மையாகக் கொண்டு அனைத்து அரசாங்க அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்றத்தக்க மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளும் அவசியத்தை வலியுறுத்தித் தங்களது கடமைகளை நேற்றுமுன்தினம் ஆரம்பித்தனர்.

இதன்போது, தேசியக் கொடி ஏற்றப்பட்டதுடன், தேசிய கீதம் இசைக்கப்பட்டு படையினர் உள்ளிட்ட நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த சகலரையும் நினைவு கூர்வதற்காக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

# உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் திறப்பு







மட்டக்களப்பு,ஜன.04

மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சுயதொழில் ஊக்குவிப்பு திட்டத்தின் உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் 'உதயம்' என்ற பெயரில் திறக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணப் பெண்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையில் பெண்கள் சுயதொழில் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர் எம் .உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இந்த விற்பனை நிலையத்தை நேற்றுமுன்தினம் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் தேசிய நல்லிணக்க அமைச்சின் நிதி உதவியில் வழங்கப்பட்ட 10 லட்சம் ரூபா பெறுமதியான உணவு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களும் தளபாடங்களும் வழங்கப்பட்டன.

2011ஆம் ஆண்டு முதல் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களின் நிதியுதவி மற்றும் ஆதரவுடன் 2014 ஆம் ஆண்டுவரை இந்தியாவின் சேவா நிறுவனத்தின் இணைப்புடன் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இது செயற்பட்டது.

பின்னர் கிழக்கு மாகாணப் பெண்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பெண்கள் சுயதொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

# கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் புதிய சட்டம் நாடாளுமன்றுக்கு!



### பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு துறைமுக நகரம் தொடர்பாக புதிய சட்டம் நாடாளுமன்றத்தில் இந்த ஆண்டு முற்பகுதியில் கொண்டு வரப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரத் திட்ட வேலைத்திட்டங்களை நேற்று முன்தினம் பார்வையிடச்சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனா துறைமுக நிறுவனத்தால் கடல் நிலத்தை நிரப்பி 99வருடங்களில் இந்த இடத்தில் நகரம் ஒன்றை ஏற்படுத்துவோம். இந்த நகரம் பயன்படும்வகையில் முழு இந்து சமுத்திரத்துக்கும் பொருத்தமான நிதி வர்த்தக மத்திய நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

அதற்காக துறைமுக நகரமாகிய இந்தப் பிரதேசத்தில் பிரத்தியேகமாக நிதி மாவட்டம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம்.

அத்துடன், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் இந்தப் பிரதேசத்தில் இரண்டு லட்சம் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில் மிகவும் அழகான நவீன முறையில் நகரம் ஒன்றை நிர்மாணிப்போம். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருக்கும் வசதிகள் அனைத்தும் இந்த நகரத்துக்குப் பெற்றுக்கொடுப்போம். இது சீன துறைமுக நிறுவனத்தின் பிரதான முதலீடாகும்.

அத்துடன், இந்த வேலைத் திட்டம் நாட்டின் பொருளாதாரத்துக்கு புதிய தொரு சக்தியை ஏற்படுத்தும் வேலைத் திட்டமாகவே பார்க்கின்றோம்.

அத்துடன், இந்த இடத்தில் இருந்து கொண்டே எமது மக்களுக்கு வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் நிதிவசதிகளைப் பெற்றுக்கொள்ளத் தேவையான சட்ட மற்றும் வணிக சேவைகளைப் பெற்றுக்கொடுப்போம்.

இதற்கு அப்பால் இந்தப் பிரதேசத்தில் எமது மக்கள் பெருமைப்படும் வகையில் மகிழ்ச்சியாக இருக்க பெரிய பூங்காவொன்றை ஏற்படுத்த இருக்கின்றோம்.

அத்துடன், 2020 ஆம் ஆண்டு ஆகும் போது இந்தத் துறைமுக நகரத்தின் அடிப்படை வேலைத் திட்டங்கள் மற்றும் ஏனைய கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய இருக்கின்றோம். இதன் மூலம் நாங்கள் நினைத்தும் பார்க்க முடியாத நகரம் ஒன்று இங்கு அமையப் போகின்றது.

இது இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையத்துக்கான வேலைத்திட்டங்களில் ஒரு பகுதியாகும். துறைமுகம், விமான நிலையம் ஆகியவற்றின் சேவையுடன் உற்பத்தி தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது, நிதி சேவைகளை ஏற்படுத்துவது மற்றும் சுற்றுலா வேலைத்திட்டங்களை ஏற்படுத்தும் திட்டத்திலே அரசாங்கம் என்றவகையில் இந்த வேலைத்திட்டங்களை மேற்கொண்டு செல்கின்றோம்.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இந்த வேலைத் திட்டங்களை நாங்கள் பொறுப்பேற்றுள்ளோம். இதற்குத் தேவையான சட்டங்களை இந்த வருடம் முன்வைப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன், அனைத்தையும் ஒரே தடவையில் செய்து முடிக்க இயலாது. தற்போது நாங்கள் வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். இலங்கை கடனுக்குள் மூழ்கியிருந்ததற்குப் பதிலாக இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தி, சிறந்த முறையில் வாழ்வதற்கு முடியுமான, தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் பொருளாதாரத்தை ஏற்படுத்த நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி மைத்திரி தலைமையில் மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கும் திட்டம்



கொழும்பு, ஜன. 04

ஜனாதிபதி செயலக ஆளணியினருக்கு மரக்கன்றுகளை பகிர்ந்தளிக்கும் செயற்றிட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்றது.

மலர்ந்துள்ள புதிய ஆண்டில் சுற்றாடல் பாதுகாப்பிற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியதன் முக்கியத்துவம், தமது நாளாந்த நுகர்வுக்குப் பொருத்தமானவற்றைத் தமது வீட்டுத் தோட்டத்திலேயே பயிர் செய்து கொள்ளல் வேண்டு மென்ற செய்தியை அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் பொருட்டு ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஜனாதிபதி செயலக ஆளணியினர் 2018ஆம் ஆண்டில் கடமைகளை ஆரம்பித்தமையைத் தொடர்ந்து இந்தச் செயற்றிட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஹன கீர்த்தி திசாநாயக்க உள்ளிட்ட சிலருக்கு பழ மரக்கன்றுகளை வழங்கினார். பின்னர் ஜனாதிபதியின் செயலாளர் ஏனையோருக்கு பழக்கன்றுகளைப் பகிர்ந்தளித்தார். (க)

## விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 04

இடம்பெற்று முடிந்த கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நேற்று முதல் ஆரம்பித்துள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித்த தெரிவித்தார்.

வினாத்தாள் திருத்தும் பணிகள் இரு கட்டங்களாக இடம்பெறவுள்ளன.

அதன்படி நேற்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை முதல்கட்ட வினாத்தாள் திருத்தும் பணிகள் இடம்பெறவுள்ள நிலையில், இரண்டாம் கட்ட வினாத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளன.

இந்நிலையில், முதல்கட்ட வினாத்தாள் திருத்தப் பணிகள் இடம்பெறும் 57 பாடசாலை களினது முதலாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீப்பந்தத்துடன் சென்றவரை தாக்கியது சிறுத்தை!

பன்மூர் தோட்டத்தில் சிறுத்தையின் அட்டகாசம் தொடரும் நிலையில் இதுவரை சிறுத்தையின் தாக்குதலால் 7 பேர் பாதிக்கப்புக்குள்ளாகியுள்ளனர்.

பாதிப்புக்குள்ளாகிய எழுவருக்கும் சிறுத்தை தாக்குதலின் மூலம் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

சிறுத்தையின் அட்டகாசத்தைத் தடுப்பதற்காகத் துப்பாக்கிகளுடன் வருகை தந்த வனஜீவராசிகள், ஹட்டன் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் சிறுத்தையின் அட்டகாசத்தைத் தடுக்க முடியாது இருந்த நிலையில், மேலும் சிறுத்தை பாதுகாப்பு அதிகாரிகளின் முன்னாலே மீண்டும் ஒருவரை தாக்கியுள்ளது.

தாக்குதலுக்குள்ளான நபர் தீ பந்தம் ஒன்றை ஏந்திச் செல்லுகையில் சிறுத்தையால் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

மரங்களுக்கிடையில் தாவித் தாவி தாக்குதலை மேற்கொள்ளும் சிறுத்தையைப் பிடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் முடியாத நிலையில் பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட பொது மக்கள் அனைவரும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தங்களது வீடுகளுக்குச் சென்றால் சிறுத்தையின் தாக்கம் அதிகரிக்கும் என்ற அச்சத்தால் சிறுத்தையை பிடித்தே தீருவோம் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.



## அரசுக்கு எதிராக வாக்களித்து கிராமத்தை அபிவிருத்தி செய்ய முடியாது: துமிந்த!

கொழும்பு, ஜன. 04

நல்லாட்சி அரசே 2020 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருக்குமெனவும் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளதால் இத்தேர்தலில் அரசு அமோக வெற்றி பெறுவது உறுதியாகும் எனவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான துமிந்த திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அரசுக்கு எதிராக வாக்களிப்பதால் கிராமங்களை அபிவிருத்தி செய்யவோ மக்களுக்கு சேவை செய்யவோ முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(க)

## தினசரி ராசி பலன்

(04.01.2018)

*2017ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித்திங்கள் 20ஆம் நாள் வியாழக்கிழமை திரிருதியைத்திதி. இரவு 9.32மணி வரை. பின்னர் சதுர்த்தி.நட்சத்திரம். ஆயிலியம் பி.இ.3.53மணி வரை பின்னர் மகம். சித்தாமிர்த யோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல்01.41மணிமுதல் 03.08மணிவரை*

**சுபநேரம்** - *காலை 08.05 மணி முதல் 09.35 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மார்கழி மாத தேய்பிறை திருதியை*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *ஆயிலியம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** - யோசனையான நாள். பணவரவு குறையும். உத்தியோகத்தர்களுக்கு சகதொழிலாளர்கள் மத்தியில் போட்டி, பொறாமைகள் இருந்து வரும். வாகனப் பழுதும், வாகனங்களால் புதிய செலவுகளும் வந்துசேரும்.

**ரிஷபம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலையில் வரவும்,செலவும் வந்து போகும்.வியாபாரத்தில் முதலீடுகளில் ஆர்வம் குறையும். கடன் சிலருக்குத் தொல்லையைத் தரும்.

**மிதுனம்** - நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கம்,பாசம் அதிகரிக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தால் அதிக வருமானம் கிடைக்கும்.

**கடகம்** - இனிமையான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். சிலர் நண்பர்களுடன் சேர்ந்து சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வார்கள்.

**சிம்மம்** - அலைச்சல் மிகுந்த நாள். தொழில் விஷயமாய் வெளியூர்களுக்கு அலைய வேண்டி வரும். பணம் பற்றாக்குறையால் குடும்பச் செலவுகளைச் சமாளிப்பதற்கு கடன் தேடி அலைவார்கள்.

**கன்னி** - உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி அடையும். செய்யும் தொழிலில் உயர்வு கிடைக்கும். சுயதொழில் மேன்மை அடையும்.

**துலாம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும்,செலவும் சரிசமமாக இருக்கும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும்.உடலில் ரோகங்கள் உண்டாகி, மருத்துவ செலவுகள் உண்டாகும்.

**விருச்சிகம்** - மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் ஒற்றுமை உணர்வு வலுவடையும்.நண்பர் உறவினர் சகாயம் கிடைக்கும். வியாபாரத்தொழில் மேன்மை அடையும்.

**தனுசு** - கவலையான வாரம். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் பிரச்சினை அதிகரிக்கும். எண்ணிய காரியங்கள் நிறைவேறாமல் போகும். வியாபாரத்தில் பெரும் நட்டமுண்டாகும்.

**மகரம்** - மத்திமபலன்கள் காணப்படுகின்றன.பொருள்வரவு மத்திமமாக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். தொழிலில் கவனம் இருப்பது அவசியம்.மாணவர்கள் கல்வியில் அதிக ஊக்கம் எடுக்க வேண்டும்.

**கும்பம்** - கீர்த்தியான நாள். வாக்கு வன்மையினால் தனச் சேர்க்கை உண்டாகும். கவலைகள் கதிரவனைக் கண்ட பனிபோல் விலகும். மாணவர்கள் அறிவுத் திறனால் ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள்.

**மீனம்** - நன்மையான நாள். செய்தொழிலில் திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி அடைவார்கள்.பெண்களுக்கு தாய் வீட்டு உதவியும்,ஒத்தாசையும் கிட்டும். சகோதர வழி உறவு பலப்படும்

**சந்திராட்டமநாள்: மூலம்.பூராடம்.உத்தராடம் 1ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# ஜனாதிபதிக்குச் சர்வதேச விருது



கொழும்பு, ஜன 04

போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டி அவருக்குச் சர்வதேச விருதொன்று வழங்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள்களுக்கெதிரான அரச சார்பற்ற நிறுவனங்களின் சர்வதேச சம்மேளனம் இந்த விடே விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது.

சீனாவின் மெகாவோகியில் கடந்த நவம்பர் மாதம் 08ஆம் திகதி இடம்பெற்ற போதைப் பொருள்களுக்கெதிரான அரச சார்பற்ற நிறுவனங்களின்சர்வதேசசம்மேளனத்தில், உலகளாவிய ரீதியில் நாற்பது நாடுகள் மற்றும் 87 சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன பங்கேற்றன.

அந்த விருது நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, போதைப்பொருள்களுக்கெதிரான நிறுவனங்களின் ஒன்றிணைந்த சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் சரத் எம். சமரகேயால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அமைச்சர் தலதா அத்துகோரள, அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பேராசிரியர் ரவீந்தர பெர்னாண்டோ, போதைப் பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணி யின் பணிப்பாளர் டாக்டர் சமந்த கித்தலவ ஆராச்சி உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ஐ)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலை மீறி நியமனம்

## கிழக்குப் பாடசாலை ஒன்றின் அதிபர் பதவிக்கு

தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு முரணான வகையில், கிழக்கு மாகாணப் பாடசாலையொன்றுக்கு அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமை இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தேர்தல் ஆணைக்குழுவின்தவிசாளர்எம்.எம்.அஹமட் தெரிவித்தார்.

சம்மாந்துறைக் கல்வி வலயத்தில் உள்ள அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கானஅதிபரேஇவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார் எனக் கல்விக்கான மன்றத்தின் சம்மாந்துறைக் கிளை முறைப்பாடு செய்துள்ளது என அவர் மேலும் கூறினார்.

சம்பந்தப்பட்ட அதிபருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு, மாகாணக் கணக்காய்வு அதிகாரிகளால் விசாரணை நடத்தப்பட்டுவருகின்ற நிலையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

கணக்காய்வு விசாரணையின்போது குற்றம் சுமத்தப்பட்ட ஓர் அரச உத்தியோகத்தருக்கு முறைசார் விசாரணைக் காகத்தாபனக்கோவை ஏற்பாடுகளுக்கமைய குற்றப்பத்திரம் வழங்கப்படவேண்டும்.ஆனால் இந்த அதிபருக்குக் குற்றப்பத்திரம் வழங்கப்படாமல் குற்றம் மறைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

(ஐ)

# உரத்தை விநியோகிக்க விரிவான நடவடிக்கை



உரத்திற்குத் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களை இனங்கண்டு உரிய பகுதிகளுக்குத் தேவையான உரத்தை விநியோகிக்க விரிவான நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

யூரியா தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் தனியார் துறையிடமிருந்து யூரியா பெற்றுக் கொள்ளப்படவிருக்கிறது. 40 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிய கப்பல் விரைவில் இலங்கையை வந்தடையவிருக்கிறது என்று தேசிய உர செயலகம் அறிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய, பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு உரம் கிடைக்கவிருக்கிறது. பெரும்பாலான விவசாயிகளுக்குத் தேவையான உரம் வழங்கப்பட்டுள்ளது. பெரும்போக உரத்திற்கென இதுவரை 700 கோடியே50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக தேசிய உரச்செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

# நிறுவை, அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஜன.04

மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு, ஜனவரி 10,11, 12,16 மற்றும் 17 ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை அனைத்து தராசுப் படிகள், லீற்றர் அளவைகள், மீற்றர் கோல்கள் ஆகிய கருவிகளைப் பரிசோதித்துப் பார்த்து முத்திரையிட வுள்ளது.

முத்திரை பதிக்காத நிறுக்கும், அளக்கும் உபகரணங்களை வர்த்தகத்திற்குப் பாவிப்பது மாத்திரமல்ல, வைத்திருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, இதனைக் கருத்திற் கொண்டு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலகப் பிவுக்கு உட்பட்ட சகல வர்த்தகர்களையும் யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

(இ)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளி காலை 8 மணியிலிருந்து மாலை 5மணி வரை

**வவுனியா பிரதேசத்தில் -**

கணேசபுரம் கிராமத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

# தமிழரை ஏமாற்றவே இடைக்கால அறிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி:– சேர்! உங்கள் சென்ற வாரக் கேள்விக்கான பதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளரை பதில் தர வைத்துள்ளது. அதற்கு உங்கள் மறுமொழியை எதிர்பார்க்கின்றோம்.

பதில் :– ஏட்டிக்குப் போட்டியாக பதில்கள் இறுத்து பத்திரிகைகளுக்கு நல்ல தீனியைப் போட்டுக் கொண்டு இருக்கலாம். ஆனால் சமூகத்தில் பல சிக்கல்களை இது ஏற்படுத்தும். அதனால் நான் பொதுவாகத்தக்க, முக்கிய காரணங்கள் இருந்தாலே அன்றி இவ்வாறான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதில்லை. எனினும் நீங்கள் கேட்பதால் பதில் தருகின்றேன்.

முதலில் எனது மாணவர் கௌரவ துரைராசசிங்கம் அவர்கள் கிறிஸ்மஸ் தினத்தில் நான் ஓர் அரசியல் அறிக்கை விடுத்தேன் எனக் கூறியுள்ளார். அவர் வாராவாரம் மக்களின் கேள்விகளுக்கு நான் பத்திரிகைகளில் பதில் அளித்து வருவதை அறியாதுள்ளார் போல் தெரிகிறது. அரசியல் அறிக்கை விட வேண்டிய அவசியம் எனக்கிருக்கவில்லை. மக்களின் கேள்விகள் என்னை உசுப்பும் போது அவற்றிற்கே பதில் அளித்து வருகின்றேன். எந்த ஒரு கேள்வியும் யாரோ ஒருவர் எழுப்பிய ஐயப்பாட்டின் விளைவே. அந்த ஐயத்தைத் தீர்க்க முயன்று வருகின்றேன். இது கூட நண்பர் துரைராசசிங்கத்திற்குப் பதில் அளிக்கும் முகமாக நான் கூறும் கூற்று அல்ல. உங்கள் கேள்வி அவ்வாறான தாக இருப்பதால் பதில் தருகின்றேன்;.

நண்பரின் கூற்றை நான் கடந்த 30 ஆம் திகதி பத்திரிகையில் பார்த்தே பதில் இறுக்கின்றேன். அதில் கூறியிருப்பனவற்றைக் கவனத்திற்கு எடுத்து பதில் தருகின்றேன்.

முதலாவதாக நான் தமிழரசுக் கட்சியைப் பிரத்தியேகமாகக் கண்டித்திருந்தேன் எனக் கூறி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் மற்றைய கட்சிகளும் அங்கம் வகிப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அப்படி அல்ல.

தமிழரசுக் கட்சியினர் என்னை விமர்சனம் செய்வதாகவே சென்ற வாரக் கேள்வி அமைந்திருந்தது. அதனால் தான் அதற்குப் பதில் தர வேண்டியிருந்தது. அவ்வாறான கேள்வி என் மீது தொடுக்கப்படாதிருந்தால் நான் மௌனமாக இருந்திருப்பேன். என்னை விமர்சிப்பவர்கள் தமிழரசுக் கட்சியினரே என்றிருக்கும் போது அந்த விமர்சனங்களுக்குப் பதில் இறுக்காமல் வேறு யாருக்கு நான் பதில் அளிக்க வேண்டும் என்று கௌரவ நண்பர் அவர்கள் எதிர்பார்க்கின்றார்?

## நண்பருக்கு அழகல்ல

மேலும் தேர்தல் வரும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக அறிக்கை வெளியிடுவது வழமை என்றும் கூறியுள்ளார். இதுவும் தவறு. என்னைப் பற்றிய பல விமர்சனங்கள் தவணைக்குத் தவணை எழுவதால் தான் நான் பதில் கூறவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அவ்வாறான விமர்சனங்கள் தேர்தல்கள் வரும் போது எழுவதை வைத்து நான் வேண்டுமென்றே தேர்தல் காலங்களில் எதிர் அறிக்கைகளை விடுத்து வருகின்றேன் என்று கூறுகின்றமை சட்டத்தரணியான கௌரவ நண்பருக்கு அழகல்ல. ஏதோ காத்திருந்து நான் அறிக்கை விடுவதாக என்னைச் சித்திரித்துள்ளார். அவ்வாறு அறிக்கைகள் விட வேண்டிய அவசியம் எனக்கில்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன் கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும். மக்கள் கேளாது தட்டாது இருந்தால் நான் மௌனியாகி விடுவேன்.

அவர் கூறும் விடயங்களைப் பார்ப்போம்.

1. வவுனியாவில் என் பெயரை முன்மொழிந்தது தானே என்கின்றார். என் மாணவர் என்ற முறையில் அவ்வாறு செய்திருக்கலாம். அதற்கு நான் நன்றி கூற முடியாது. ஆறு மாதங்கள் அரசியலுக்கு வர முடியாது என்று தொடர்ந்து கூறியும் விட்டபாடில்லாததால் தான் எல்லோரும் சேர்ந்திருந்தழைத்தால் அவர்கள் கோரிக்கையைப் பரிசீலனை செய்வேன் என்று கூறி அவ்வாறு அவர்கள் கோரியதால்தான் நான் அரசியலுக்கு வர வேண்டியிருந்தது.

2. பேராசிரியர் சிற்றம்பலம், உண்மையில் வழிப்போக்கர்களைக் கட்சிக்குள் கொண்டுவராதீர்கள் என்று கூறினாரோ தெரியாது. அவ்வாறு கூறியிருந்தால் அதில் தவறென்ன? கட்சியின் ஆரம்பகால உறுப்பினர் அவர். படித்தவர். பண்புள்ளவர். அவரைப்புறந்தள்ளி வழிப்போக்கர்கள் குளிர்காயும் கட்சியாகத் தமிழரசுக் கட்சியை மாற்றியமை அவருக்கு ஆத்திரத்தை ஊட்டியிருக்கக்கூடும்.

நான் கட்சிகளின் அரவணைப்பில் வாழ்ந்தவன் அல்லன். என்னை கட்சிகளுக்குள் கட்டுப்பட வைக்கவும் சற்றுக் கடினமாக இருக்கும். காரணம் கட்சி அரசியலே எமது நாட்டைச் சீரழித்துள்ளது என்ற கருத்தைக் கொண்டவன் நான். தம்பி மாவை கூட அண்மையில் கட்சி பேதம் பார்க்காமல் வாக்களியுங்கள் என்று கூறினார் என பத்திரிகை செய்தியொன்றை வாசித்தேன். கட்சிகளின் போக்கு கவலை தருவதாக அமைந்துள்ளது.

## கட்சிகளின் போக்கு கவலை தருகிறது

3. என்னை விட அனந்தி கூடிய வாக்குகள் பெற்றுவிடுவார் என்ற கவலை அவர்களுக்கு இருந்தது என கௌரவ நண்பர் கூறுகின்றார். அனந்தி கூடிய வாக்குகள் அவ்வாறு பெற்றிருந்தால் தமிழ் மக்கள் பெண்களை எந்தளவு மதிக்கின்றார்கள் என்பது தெரியவந்திருக்கும். அதில் என் மதிப்புக் குறையை எதுவுமே இருக்கவில்லை. ஒரு வேளை ஒரு பெண்ணிற்கு முதல்வர் பதவி கொடுக்கக்கூடாது என்ற பயத்தில் நண்பரும் மற்றவர்களும் காரியத்தில் இறங்கினார்களோ தெரியாது. இன்று மிக முக்கியமான அமைச்சுப் பதவிகளுக்குப் பொறுப்பாக இருந்து அனந்தி தனது கடமைகளைப் பொறுப்புடன் செய்து வருகின்றார்.

4. அடுத்து உயர் மட்டப் பதவியில் இருந்து வந்ததால் மக்களுடன் மக்களாக நான் மாறமுடியாது போய் விடும் என்று யாரோ கூறியதாகக் கூறினார். அந்தக் கூற்று இன்று மெய்யாகி விட்டது என்றார். அவ்வாறு மெய்யானதால்தானா எனக்கு எதிராகத் தமிழரசுக் கட்சி நடவடிக்கைகள் எடுத்த போது, பொதுமக்கள் முண்டி அடித்துக் கொண்டு வந்து எனது வாசஸ்தலத்திற்கு முன் நின்று எனக்குச் சார்பாகக் குரல் எழுப்பினார்கள்? நான் எந்த மட்டத்தில் இருந்து வந்தவன் என்பது அவர்களின் கரிசனையாக அமையவில்லை. இவன் எப்பேர்ப்பட்டவன் என்பதை அவர்கள் அலசி ஆராய்ந்தே சதிகளில் இருந்து என்னைக் காப்பாற்றினார்கள். நண்பருக்கு ஒன்று கூற விரும்புகின்றேன். நெஞ்சத்தில் அன்பிருந்தால் அதனைப் பொது மக்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியும். கேவலம் பறவைகளும் விலங்கினங்களும் எமது அன்பை அடையாளம் காண்கின்றன. மக்களால் முடியாதா?

## மண்டியிட்டு மலர்மாலை பெற விரும்பாத பிரபாகரன்

5. அடுத்து கொழும்புடன் நல்லுறவைப் பேணவேண்டும் என்கின்றார் நண்பர். கொழும்பில் பிறந்து வளர்ந்தவன் நான். நாட்டின் பெரும்பாலான இடங்களில் நான் ஏதோ விதத்தில் சம்பந்தங்கொண்டிருந்தவன். நாட்டின் மூன்று மொழிகளுடனும் நான்கு மதங்களுடனும் ஓரளவு பரிச்சயம் பெற்றவன். எனவே தெற்குடன் நடந்து கொள்ள நண்பர் எனக்குச் சொல்லித் தரக்கூடாது. நண்பர் போன்றவர்கள் தெற்குடன் நல்லெண்ணங் கொள்ள வேண்டும் என்றால் அவர்களுக்குப் பணிந்து போக வேண்டும் என்ற கருத்தை உடையவர்களாகத் தென்படுகின்றார்கள். தெற்கிற்கு அடங்கிப் போகும் ஒருவரை முதலமைச்சர் ஆக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைத்திருந்தால் நண்பரைப் போன்ற ஒருவரையே முதலமைச்சராக நிறுத்தியிருக்கும். புகழ்பாடி, பணிந்து, இரந்து, எவரதும் பெரிய மனதின் பெறுபேறுகளைக் கொண்டு தமிழ் மக்களின் உரித்துக்களைப் பெற வேண்டிய அவசியம் எமக்கில்லை. தம்பி பிரபாகரன் அரசியல் சூட்சமத்தில் அனுபவம் முதிர்ந்தவர்களின் அறிவுரைகளைப் புறக்கணித்திருக்கலாம். அதனால் மரணத்தையுந் தழுவியிருக்கலாம். ஆனால் மண்டியிட்டு மலர் மாலை பெறவேண்டிய அவசியம் அவருக்கு என்றுமே இருந்தில்லை. நாம் இந்நாட்டின் மூத்த குடிகள். எமது தகைமை உலகறிந்தது. எனினும் அந்த உண்மையைக் கொழும்பு உதாசீனம் செய்து வருகின்றது. கொழும்புடன் முரண்படாது எவ்வாறு எமது உரிமையைப் பெற்றெடுப்பது? 2016இல் தக்க தீர்வைப் பெற்று விடுவோம் என்று முரண்படாது வாழ்ந்து வந்த எம் தலைவர் கூறினாரே! பெற்று விட்டோமா? ஆடுற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்;பாடுற மாட்டைப்பாடிக்கறக்க வேண்டும்!

தம்பி பிரபாகரன் அரசியல் சூட்சுமத்தில் அனுபவம் முதிர்ந்தவர்களின் அறிவுரைகளைப் புறக்கணித்திருக்கலாம். அதனால் மரணத்தையுந் தழுவியிருக்கலாம். ஆனால் மண்டியிட்டு மலர் மாலை பெறவேண்டிய அவசியம் அவருக்கு என்றுமே இருந்தில்லை. நாம் இந்நாட்டின் மூத்த குடிகள். எமது தகைமை உலகறிந்தது. எனினும் அந்த உண்மையைக் கொழும்பு உதாசீனம் செய்து வருகின்றது. கொழும்புடன் முரண்படாது எவ்வாறு எமது உரிமையைப் பெற்றெடுப்பது? 2016இல் தக்க தீர்வைப் பெற்று விடுவோம் என்று முரண்படாது வாழ்ந்து வந்த எம் தலை வர் கூறினாரே! பெற்று விட்டோமா? ஆடுற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்; பாடுற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும்!

6. என் செயற்பாட்டால் வடமாகாணத்தின் மீது வினாக்குறி எழுந்துள்ளதாகக் கூறுகிறார். அதனால் தான் கட்சித் தலைமைகளைக் கூப்பிடாது எமது வடமாகாண முதல்வரை அழைத்து மலேசியப் பிரதம மந்திரி கருத்துப்பரிமாற்றம் அண்மையில் நடாத்தினரா? அச்சந்திப்பை நிறுத்த சிலர் முயன்றதின் பின்னணி என்ன? வினாக்குறியா?

7. நான் மாகாண முதலமைச்சர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என்று யார் கூறினார்கள்? கலந்து கொண்டது மட்டுமல்லாமல் காத்திரமான கருத்துக்களையும் முன்வைத்ததைக் கூட்டக் குறிப்புக்கள் கூறுவன. ஏதோ ஒரு சில கூட்டங்களுக்குப் போக முடியாமற் போனதை ஒரு பொருட்டாகக் கருதி நண்பர் குற்றஞ் சுமத்துகின்றமை சிரிப்புக்கு இடமளிக்கின்றது.

## பல்லிளித்து பயன் பெறுவதா?

ஆனால் ஒன்று மட்டும் சட்டத்தரணியான நண்பர் கருத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அதிகாரங்களைக் கூட்டித்தர வேண்டும் என்று மற்றைய முதலமைச்சர்கள் கேட்பது ஒற்றையாட்சி அரசமைப்பின் உள்ளேயே. அது எமக்கு அப்போதைக்கு ஒரு சில நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தாலும் எமது இனத்தின் நீண்ட கால வாழ்க்கைக்கு நன்மை அளிக்காது. அல்பிரட் துரையப்பாவோ, குமாரசூரியரோ, டக்ளஸ் தேவானந்தாவோ கேட்டார்கள் கொடுத்தோம் என்றுதான் இருக்கும். தமிழர்கள் உரித்துடன் கேட்டதை நாம் அள்ளிக் கொடுத்தோம் என்றிருக்காது. இன்று நாம் தெற்கின் தயவிலேயே வாழ்கின்றோம். அதை நண்பர் உணராதுள்ளார். பல்லிளித்துப் பயன் பெறுவதென்றால் எந்தத் தமிழ்த் தலைவரிலும் பார்க்கக் கூடிய சலுகைகளை தெற்கில் இருந்து பெற விக்னேஸ்வரனால் முடியும். அவன் தெற்கில் பிறந்து வளர்ந்தவன். ஆனால் அவ்வாறு பல்லிளித்துப் பெற்றால் காலக் கிரமத்தில் எம்மவர் அடிமைகள் ஆகிவிடுவார்கள். சிங்களக் குடியேற்றங்கள், சிங்கள மொழி உள்ளீடல்கள், பௌத்த மதத்தினர் உள்ளீடல்கள் என்று எம்மை 25 வருடங்களில் இருந்த இடந் தெரியாது ஆக்கி விடுவார்கள். நாமும் வெளிநாடுகள் நோக்கித் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருப்போம். ஜெரூஸலேத்திற்கு நடந்துள்ளதைப் பாருங்கள். ஆகவே எமது தனித்துவத்தைப் பேணிக் கொண்டுதான் நான் தெற்குடன் உறவாடி வருகின்றேன். பல தெற்கத்தைய அமைச்சர்களுடன் கூடி பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றேன். என்னைப் பொறுத்த வரையில் அவர்கள் எனக்குச் சமமானவர்களே. எனக்கு மேலானவர்கள் அல்லர். கூனிக் குறுகி அவர்களிடம் யாசகம் பெறவேண்டிய அவசியம் எனக்கில்லை. பிரபாகரன் பிறந்த மண்ணில் இவ்வாறு யாசகம் பெற எத்தனிப்போர் வாழ்ந்து வருகின்றமை விந்தையே!

8. தமிழரசுக் கட்சியின் கூட்டங்களுக்கு எனக்கு அழைப்பு அனுப்பிய தாகக் கூறுகின்றார். கூட்டங்களில் நான் கலந்து கொண்டேன் என்றும் கூறுகின்றார். மதியத்துடன் எழுந்து சென்று விடுவார் என்றும் கூறியுள்ளார்.

கூட்டங்கள் உரியவற்றைப் பரிசீலித்தால், உரியன பற்றிப் பேசினால், உண்மையை உரைத்துப் பார்க்க முன் வந்தால் எவர் தான் பாதியில் எழுந்து போகப் போகின்றார்கள்? ஆனால் ஒன்றை மட்டும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். தமிழ் மக்கள் பேரவை தொடங்கிய நாள் தொடக்கம் எனக்கு அழைப்பு விடுக்கவில்லை என்பதை ஏற்றுள்ளார்.

உண்மையில் அதன் பிறகுதான் என்னை வலிந்து அழைத்திருக்க வேண்டும். அப்பொழுது எனது கருத்துக்களை அவர்களுக்கு வெளிப் படுத்தியிருப்பேன். தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் சார் குரல், கட்சி அல்ல என்பதை விளங்கப் படுத்தியிருப்பேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்ப காலத்தில் கொழும்பில் அதற்கான குழுக்கள் கூட்டப்பட்டன. அக் குழு உறுப்பினர்கள் சட்ட ரீதியான சில நன்மைகளை என்னிடம் பெற்றதுண்டு. அது பற்றி அவர்களிடம் கேட்டால் தெரிந்து கொள்ளலாம்.

என்னிடம் பெற்ற அந்த அடிப்படைத் தரவுகளை வைத்து கட்சி பதிவு செய்யப்பட்டதாகவே நான் எண்ணியிருந்தேன். அரசியலுக்குள் வந்த பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் பதிவு செய்யப்படவில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். அப்போது தான் TELO, EPRLF, PLOTE, நண்பர் ஆனந்த சங்கரியின் கட்சி ஆகியன தமிழரசுக் கட்சியின் சின்னத்திற்குக் கீழேயே தேர்தலில் ஈடுபட்டு வருகின்றன என்பதைப் புரிந்து கொண்டேன். தமிழரசுக் கட்சியின் சின்னத்தின் கீழ்த் தான் போட்டியிடப் போகின்றோம் என்று அறிவதற்கு முன் நான் எவ்வாறு அது பற்றி அறிந்திருக்கக்கூடும் என்பதற்கு நண்பர்தான் பதில் தர வேண்டும்.

9. போர்க்குற்றங்கள், இன அழிப்பு பற்றி நாங்கள் காரில் சுமந்திரனுடன் பேசி வந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.


நண்பர் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இன அழிப்பு என்பது உண்மை. அதை நீதிமன்றில் நிரூபிக்க முடியுமா என்பது இன்னொன்று.

(10ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir



# பல்லிளித்துப் பயன்பெறுவதென்றால் எந்தத் தலைவர்களிலும் பார்க்க கூடிய சலுகைகளைப் பெற்றிருப்பேன்



(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிரூபிக்க முடியாது போகும் என்று சுமந்திரன் கூறிக் காரணங்களை எடுத்தியம்பினார். அதில் இருந்த சட்டச்சிக்கல்களை உணர்ந்து கொண்டேன். ஆனால் வட மாகாணசபை இயற்றிய பிரேரணை மக்களின் கருத்தைப் பிரதிபலித்த ஒன்று. அது சமூகம் சார்ந்தது. உண்மை சார்ந்தது. அதனைச் சர்வதேச அரங்கில் நிரூபிக்க முடியுமா, அதில் உள்ள சட்டச் சிக்கல்கள் எவை என்பன வேறு விடயங்கள். ஆகவே சட்ட ரீதியாக நான் சுமந்திரனுடன் பேசியதை சமூக ரீதியாகக் கொண்டுவந்த பிரேரணையுடன் கலந்து நண்பர் குழப்பி அடிக்கக்கூடாது. ஒருவர் இன்னொருவரைக் கொன்றுள்ளார் என்று வைத்துக் கொள்வோம். சாட்சியங்கள் இல்லாதமையால் கொன்றவர் விடுதலைபெற்றுவிடுகின்றார். விடுதலை பெற்றமையால் உண்மையைப்பொறுத்த வரையில் அவர் கொலை செய்யவில்லை என்று ஆகிவிடுமா?

ஆயிரம் முரண்பாடுகளையுந் தன்னுள் அடக்கி தலை நிமிர்ந்து நிற்கக் கூடியது சத்யம் அல்லது உண்மை என்று சங்கராச்சாரியாரின் குருவின் குரு கௌடபாதர் அவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டார். இன வழிப்பு உண்மை. ஆனால் நிரூபிப்பது கடினம் என்பதால் உண்மை பொய்மை யாகாது. நிரூபிப்பது சிரமம் என்பதால் உண்மையை வெளியிடாது இருக்க வேண்டிய அவசியம் எமக்கு இருக்கவில்லை.

சிவாஜிலிங்கம் அவர்கள் வட மாகாண சபையில் இன அழிப்புப் பிரேரணையைக் கொண்டுவந்த போது அது முழுமையுடையதாக எனக்குப் படவில்லை. அதற்காக அதைக் கூடிய வலுவுடன் தயாரித்து சபையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறினேன். இதனை நாங்கள் அனைவருஞ் சேர்ந்தே செய்யலாம் என்று கூறி அவரின் பிரேரணையைத் தவணை போட்டேன். அதன் பின் சுமந்திரனின் துணையையே நான் நாடினேன். அவர் அதனை முழுமையாகத் தயாரித்துத்தருகிறேன் எனக்கூறி காலம் கடத்தி வந்தார். 2014ம் ஆண்டு இறுதி வரை அவர் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கடைசியில் சிவாஜிலிங்கம் எப்படியாவது தனது பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று 2014ஆம் ஆண்டு நவம்பர் அல்லது டிசெம்பர் மாதத்தில் கூட்டத்தின் போது வாதாடினார். அப்பொழுதுதான் நான் அதனை நானே உருவாக்கித் தருகின்றேன், கடைசியாக ஒரு தவணை போடும்படி கேட்டு பெற்றுக் கொண்டேன். புதிய அரசாங்கம் வந்ததற்கும் பிரேரணைக்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. புதிய அரசாங்கம் வந்ததால் இப்பிரேரணை கொண்டுவரவில்லை. இது ஒரு தொடர் நிகழ்ச்சி. வடமாகாண சபையில் நடந்த ஒரு தொடர் நிகழ்ச்சி. கட்சித் தலைமைக்குத் தெரிந்த ஒரு தொடர் நிகழ்ச்சி. கட்சித் தலைமைகள் அனுசரணை வழங்கவுமில்லை. எதிர்க்கவுமில்லை.

**மாறியது நான் அல்லன்! கட்சித் தலைமைதான்!!**

10. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனக் கொள்கையை ஏற்ற நான் திடுதிடுப்பென்று மாறிவிட்டேன் என்று கூறினார் நண்பர். அப்படியல்ல. மாறியது நான் அல்லன். கட்சித் தலைமைதான் மாறியது. அதை அவர்களுக்கு மக்கள் சார்பாக எடுத்துக் கூறவே தமிழ் மக்கள் பேரவை பிறந்தது.

11. அடுத்துக் கூறுவது தான் விந்தையிலும் விந்தையான கூற்று. தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி தம்பி மாவைக்குச் சென்றடைந்ததே எனது மன மாற்றத்திற்குக் காரணம் என்கின்றார். கட்சி அரசியலின் வெறுப்பு மிக்க செயற்பாடுகளைக் கண்டுவந்தவன் நான். அரசியலுக்குப் புதியவன். ஏற்கனவே நல்ல பதவிகளை வகித்திருந்தவன். கேவலம் ஒரு கட்சியின் தலைமைத்துவத்திற்காகக் கனாக்காண நான் என் சில மாணவர்கள் போன்றவனா?

**கனாக் காணுவது நானா, எனது நண்பரா..?**

அரசாங்கத்தால் ஒரு முதலமைச் சருக்கு வழங்கப்படும் கௌரவம் மத்தியின் முன்னணி அமைச்சர்களுக்கு வழங்கப்படும் கௌரவத்திற்கு இணையானது. கட்சித் தலைவர்களுக்கு அவ்வாறான கௌரவத்தை அரசாங்கம் அளிக்கவில்லை. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் பதவியில் இருந்து கொண்டு கட்சித் தலைவர் பதவியைப் பெற ஆசைப்பட்டதாகக் கூறுவது நண்பரினதும் நண்பருக்கு இந்தக் கடிதத்தை வெளியிடுமாறு பணித்தவருக்கும் இருக்கும் பதவி மோகத்தையே எடுத்துக்காட்டுகின்றது. தாம் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று கனாக்காணும் பதவி மேல் எனக்கு மோகம் இருந்தது என்று கூறுவது அவர்களின் வங்குரோத்து அரசியலையே வெளிக்காட்டுகின்றது. அவர்களுக்காக நான் அனுதாபப்படுகின்றேன்.

12. இரண்டரை வருடங்களே பதவியில் இருப்பேன் என நான் கூறினேன் என கூறுகின்றார் நண்பர்.

அப்படியல்ல. நான் அரசியலுக்குள் வரமுடியாது என்று முரண்டுபிடிக்க எம்முள் யாரோ ஒருவர் இரண்டரை வருடங்கள் நீங்கள் முதலமைச்சராக இருந்து விட்டுப் போங்கள். அதன் பின் வேறொருவரை நியமிக்கலாம் என்று கூறினார். அதற்கு நான் அரசியலே வேண்டாம் என்கின்றேன். நீங்கள் காலவரையறை அரசியலை என்மீது திணிக்கப் பார்க்கின்றீர்கள் என்றேன். இரண்டரை வருடங்கள் தான் நான் முதலமைச்சராக இருப்பேன் என்று நானோ, இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ எஞ்ஞான்றுங் கூறவில்லை.

**மாவை கட்சித் தலைவர் ஆனதும் மகிழ்ந்தவன் நான்**

தமிழரசுக்கட்சியின் தலைவராக மாவை வந்ததில் மகிழ்ச்சி அடைந்தவன் நான். அவர் எத்தனை முறை மக்களுக்காகச் சிறை சென்று வந்த ஒருவர் என்பதை நான் அறிந்திருந்தேன். அவரையும் காசிஆனந்தனையும் மட்டக்களப்பில் குற்றப் பத்திரிகை பதியாது தொடர்ந்து பல மாதங்கள் அரசாங்கம் சிறையில் அடைத்திருந்ததைக் கண்ட நான் நீதித்துறைக்கு வந்த சில மாதங்களிலேயே 1979ஆம் ஆண்டில் மட்டக்களப்பு ஒன்றிணைந்த மாவட்ட நீதிபதியாக அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தேன். அப்போதுதான் மாவை பல தடவைகள் மக்களுக்காகச் சிறை சென்றதை அறிந்து கொண்டேன். அதற்காக அவர் மீது ஒரு மதிப்பு இன்றும் எனக்குள்ளது. அப்பேர்ப்பட்ட பழுத்த அனுபவம் மிக்க ஓர் அரசியல்வாதி தமிழரசுக் கட்சியின் தலைவராக வருவதை நான் எப்படி வயிற்றெரிச்சலுடன் பார்க்க முடியும்? அவரின் தேர்வில் முழு மகிழ்ச்சி யடைந்தவர்களில் நானும் ஒருவன். நண்பர் துரைராஜசிங்கம் போன்றவர்கள் இவ்வாறான பதவிகளுக்காகக் கனாக்கண்டு வருவதை என்மேல் திணிக்கப்பார்க்கின்றார்கள். பதவிகளுக்காகக் கனாக்காணவோ அலையவோ எனக்குத்தேவையில்லை. முழுமையான வாழ்க்கையை ஏற்கனவே நான் வாழ்ந்து விட்டேன். எல்லாம் கிடைத்துவிட்டன. அமைதியான ஓய்வு நிலையொன்றே எனக்குத்தேவையாக இருந்தது. யாவரும் வலிந்து கேட்டமையால்தான் இப்பதவிக்கு வந்தேன். இப்பதவியின் பலவிதமான கடமைகளை, சுமைகளைப் போகப் போகத்தான் அறிந்தேன். அவ்வாறு இருக்கும்போது ஒரு கட்சியைத்தலைமை ஏற்று நடத்த வேண்டும் என்ற எண்ணம் என்னைப் போன்ற அகவை எண்பதை எட்டும் ஒருவருக்கு வரமுடியுமா? நண்பரின் குற்றச்சாட்டு நகைப்புக்கு உரியது. அவருக்கும் அவரை ஆட்டிப் படைக்கும் சிலருக்கும் இருக்கும் நித்திய கனாக்களை என் மீது திணிக்கப் பார்க்கின்றார்கள்.

13. ஊர்த் தேரைச் சேர்த்து இழுக்க வேண்டியது பற்றி நண்பர் கூறியுள்ளார். நாம் யாவரும் ஒன்றிணைந்து இழுக்க வரும் போது ஒரு சிலர் மட்டும் அமெரிக்கா நோக்கியும் கொழும்பு நோக்கியும் தேரை இழுக்க முயற்சிப்பது கவலை அளிக்கின்றது. அப்படி இருந்தும் நான் தேர் இழுப்பவர்களுடன் கூடி வடத்தில் கைவைத்துக் கொண்டே எனது கருத்தை வெளியிட்டுக் கொண்டு வருகின்றேன். வடத்தைக் கைவிட்டுச் செல்லவில்லை. தேரை நாம் நிர்ணயித்த இடம் நோக்கி நகர்த்துங்கள். கொழும்பு நோக்கியும் அமெரிக்கா நோக்கியும் நகர்த்தாதீர்கள் என்று தான் சொல்லி வருகின்றேன்.

14. கருத்து வெளியிடுமாறு பத்திரிகைகளால் கோரப்பட்ட போது நான் இடைக்கால அறிக்கையை முழுமையாக வாசித்திருக்கவில்லை என்று கூறியது உண்மை. அதன் பின் வாசித்தேனோ இல்லையோ ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். ஒற்றையாட்சிக்கான ஆங்கிலச்சொல்லை (Unitary) நீக்கி அதற்குப் பதிலாக சிங்களத்தில் ஒற்றையாட்சிக்கு ஒப்பான ‘ஏகிய’ என்ற பதத்தையும் தமிழில் கூட்டாட்சிக்கு ஒப்பான ‘ஒருமித்த’ என்ற பதத்தையும் அறிக்கையில் பாவித்ததில் இருந்து மக்கள் மீது திணிக்கப்பட இருக்கும் மோசடி புலப்படுகிறது. ஏகிய ராஜ்ய என்றால் ஒற்றையாட்சி. தமிழில் தரப்படும் ‘ஒருமித்த’ என்ற சொல் சிங்களத்தில் ‘எக்சத்’ என்று தரப்பட்டிருக்க வேண்டும். இல்லை என்றால் தமிழில் ஒற்றையாட்சி என்று தரப்பட்டிருக்க வேண்டும். மக்களை ஏமாற்றப் பார்க்கும் இடைக்கால அறிக்கையை நான் நிராகரித்ததில் என்ன தவறு? எவ்வாறு வடகிழக்கு இணைப்பு 18 வருடங்களுக்குப் பின் இல்லாமல் ஆக்கப்பட்டதோ, இவ்வாறான இரட்டை வேடந் தாங்கி வரும் அரசமைப்பை ‘ஏகிய’ என்ற ஒரு சொல்லை வைத்தே ஒற்றையாட்சி நடைமுறையில் நாடு இருந்து வருகின்றது என்று நீதிமன்றங்கள் தீர்மானித்து விடுவன. ஒற்றையாட்சி என்றால் பெரும்பான்மையினரின் ஆதிக்கம் என்று பொருள்படும். எமக்கு நேர்ந்த அரசியல் துயரங்கள் யாவும் இந்த ஆதிக்கத்தின் பிரதிபலிப்பே.

15. அரசமைப்பு புரிந்துணர்வோடு தயாரிக்கப்பட வேண்டியதொரு ஆவணம் என்று நண்பர் கூறுவதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. ஆனால் எந்த அளவுக்கு அவ்வாறு தயாரிக்கப்படும் அரசமைப்பு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றும் என்பதே கேள்வி. நல்லிணக்கம் என்ற பெயரில் நாம் பலதை யும் விட்டுக் கொடுத்து முதலில் தரப்பட்ட 13வது திருத்தச் சட்டத்திற்கு ஒப்பான ஒரு சட்டத்தை ஒற்றையாட்சியின் கீழ் உருவாக்குகின்றோம் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அதிகாரம் முற்றிலும் மாகாணத்திற்குப் பகிரப்படுமா, அதில் மத்தி தலையிடாதா, எமது மண்ணின் உரித்து எமக்குரியதாக்கப்படுமா இல்லையா, மத்தியின் உள்ளீடல்கள் எவ்வாறு அமையும், அதன் காரணமாக எமக்கு ஏற்படப்போகும் பாதிப்புக்கள் எவை என்பன பற்றியெல்லாம் நாம் சிந்திக்கும் போது அடிப்படை அதிகாரம் யார் கைவசம் இருக்கின்றது என்பதே முக்கியமாகக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியிருக்கும். எமது தேவைகள், நடவடிக்கைகள், எதிர்பார்ப்புக்கள் சம்பந்தமாக மத்திக்குத் தீர்மானம் எடுக்க வசதி செய்து கொடுத்தால் எமது தனித்துவம் அழிந்து விடும். எமது மண்ணுஞ் சுற்றியுள்ள கடலும் பறிபோய்விடுவன.

16. எமது அரசமைப்பு எழுத்திலான யாப்பு. பிரித்தானியாவின் யாப்பு எழுதப்படாததொன்று. அங்கு சர்வதேச எதிர்பார்ப்புக்களுக்கு, சர்வதேசச் சட்டத்திற்கு அமைய மக்கள் தமது கொள்கைகளை, நடைமுறைகளை மாற்ற முடியும். எழுத்திலான அரசியல் யாப்பு அவ்வாறான மாற்றங்களுக்கு இடங் கொடுக்காது. ஆகவே இவற்றை வைத்துக் குழப்பி அடிப்பது சட்டத்தரணிகளுக்கு கைவந்த கலையாக இருக்கலாம். யதார்த்தம் வியாக்கியானங்களுக்கு அப்பாற்பட்டதொன்று. எழுத்திலான அரசியல் யாப்பைப் பேசி மாற்ற முடியாது. அதனால்த்தான் எமது தனித்துவத்தைப் பேணும் முகமாக சமஷ்டி பற்றிக் கூறி வருகின் றோம்.

**நண்பரதும் அவரோடு சேர்ந்தவர்களினதும் அடிமை மனப்போக்கு**

17. சிங்களவர் பற்றிய என் கருத்துக்கள் கடுமையானவை என்கின்றார் நண்பர். ஒன்றை மறந்து விட்டார் நண்பர். பிழையான கருத்துக்களின் அடிப்படையில் தான் சிங்கள ஏகாதிபத்தியம் இன்று நாட்டை ஆள்கின்றது. அதனைச் சுட்டிக் காட்டாதீர்கள். அவர்களுக்குக் கோபம் வரும். ஒன்றும் தரமாட்டார்கள் என்கிறார். அங்கு தான் தவறு இழைக்கப்பட்டுள்ளது. பொய்மையின் அடிப்படையில் சிங்கள இனத்தின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டுள்ளது. அதனை ஏற்று அவர்கள் தருவதை பெற்றுக் கொள்வோம் என்றால் எமக்கு என்ன கிடைக்கப் போகின்றது? இந்த நாடு சிங்கள பௌத்த நாடு, நாம் கூறுவதை மற்றைய இனங்கள் ஏற்க வேண்டும். அதற்கு அனுசரணையாக மரத்தைச் சுற்றிப்படரும் கொடி போல் அவர்கள் வாழ வேண்டும் என்றால் காலாதி காலம் நாங்கள் பிச்சைக்காரர்களாகவே வாழ வேண்டிவரும். நினைத்த போது எமது பிச்சைப் பாத்திரத்தைக் கூடப் பறித்து விடுவார்கள். நண்பரினதும் அவருடன் சேர்ந்தவர்களினதும் அடிமை மனப்போக்கு வெளிப்படுகின்றது.

18. அடுத்து வித்துவச் செருக்கால் நாம் தருவதை ஏற்காதுவிட்டால் எமக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்கிறார் நண்பர். எமது அண்மைய அரசியல் வரலாறு பற்றிக் கூறியுள்ளார். அதற்காக என்ன செய்ய வேண்டும் என்கின்றார் நண்பர்? அங்கு தான் உதைக்கின்றது. எதை எதையோ பறிகொடுத்து வந்த நாங்கள் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கின்றார். அதாவது ஒற்றையாட்சியை ஏற்க வேண்டும்; சிங்கள ஏகாதிபத்தியத்தை ஏற்க வேண்டும்; பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்; தனித்துவத்தை நாடுவது தவறு. சுயமாக எம்மை நாம் ஆள விழைவது தவறு என்றெல்லாம் சொல்லாமல் சொல்கின்றார். இதை ஏற்றுக் கொள்வது எனக்கு மட்டுமல்ல பல புத்தி ஜீவிகளுக்கும் பாமர மக்களுக்கும் கடினமாகவே இருக்கின்றது. இதைக் கூறவே தமிழ் மக்கள் பேரவை உதயமாகிற்று.

19. நடப்பியல் அறிந்து தமிழரசுக் கட்சி இன்று நடப்பதாக நண்பர் கூறுகின்றார். கூட்டாட்சி பற்றி சுமந்திரன் சிங்கள

(19 ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 56

## பேச்சு மேடையில் எனது கெடுபிடிகள்

### இசை வேளாளர்களின் கோபம்

இதே போல், ஒருமுறை உடுப்பிட்டியிலும், நான் மங்கல இசைக்கலைஞர்களின் வெறுப்புக்கு ஆளாக வேண்டி வந்தது. முதன்முறை இராமாயணத் தொடர் சொற்பொழிவு நடைபெற்ற போது, அங்கு பெருங்கூட்டம் கூடியதைப் பற்றி முன்னரே சொல்லியிருக்கிறேன். ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் வந்து சொற்பொழிவைக் கேட்டனர். அயல் ஊர்களிலிருந்தெல்லாம் அவர்கள் வந்திருந்தனர். ஓர் உபயகாரர், எனது சொற்பொழிவின் பின், நாதஸ்வரக் கச்சேரிக்கு ஒழுங்கு செய்திருந்தார்.

அன்றைய பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்கள் அனைவரும், கச்சேரிக்காக வந்திருந்தனர். சொற்பொழிவு முடிந்தால் கூட்டம் கலைந்து விடும் என்பதால், சொற்பொழிவு முடியும் தருவாயில், அத்தனை தவில் நாதஸ்வர வித்துவான்களையும், வாத்தியங்களோடு கூட்டத்தினிடையே மேடை நோக்கி அழைத்து வந்தார். அத்தனை பெரிய வித்துவான்களும், எங்கள் கழகத்தின் மேல் அன்பு பாராட்டுபவர்கள். அவர்களைக் கண்டதும், அவர்களின் நிகழ்ச்சிக்கு இடங்கொடுக்க வேண்டும் என்னும் நினைப்பில், நான் எனது சொற்பொழிவினை நிறைவு செய்தேன். நான் சொற்பொழிவினை நிறைவு செய்தவுடனே, ஊர்க்காரர்கள் ஐம்பது அறுபது பேரைத் தவிர, சபையில் இருந்த அத்தனை பேரும் எழும்பிச் சென்று விட்டனர். உடனேயே சபை வெறுமையானது. இந் நிகழ்வாலும் ஒருசில வித்துவான்கள், என்மேல் கோபம் கொண்டதாய்ப் பின் அறிந்தேன்.

* * *

### பத்து நிமிடமே பேசினேன்

இதே உடுப்பிட்டித் திருவிழாச் சபையில், மற்றொரு சம்பவமும் நடந்தது. சரியாக ஏழு மணிக்கு மேடையேறி, எட்டு மணிக்கு என் உரையை முடித்து இறங்குவதாய் ஒப்பந்தம். எனக்காகப் பெருங்கூட்டம் வந்ததால், ஆலய நிர்வாகத்தினரும் விழா உபயகாரர்களும், மேற்சொன்ன எனது நிபந்தனைக்கு உடன்பட்டிருந்தனர். மிகச்சரியாக மேடையேறி, மிகச்சரியாக பேச்சை முடித்து இறங்குவேன். வசதி மிகுந்த ஓர் உபயகாரருக்கு, எனது நிபந்தனையில் உடன்பாடில்லை. அவர் தனது திருவிழாவன்று, நிறைய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ததோடு, மின்சார அலங்காரம் முதலியவையும் செய்து, தனது திருவிழாவைப் பிரமாதப் படுத்தினார்.

அன்று அவர்களால் குறித்த நேரத்திற்கு, எனது உரையை ஆரம்பிக்க முடியவில்லை. குறித்த நேரத்திற்கு சென்ற நான் காத்திருந்தேன். சரியாக ஏழு ஐம்பது மணிக்குத்தான் அவர்கள் என்னை மேடையேற்றினர். ஒன்றும் பேசாமல் மேடையேறிய நான், எனது சொற்பொழிவைத் தொடங்கினேன். விழாக்காரர் செல்வர் என்றதால், நான் சமரசம் செய்துகொண்டதாகப் பலரும் நினைந்தனர். பேசத் தொடங்கிய நான் சரியாக எட்டு மணிக்கு எனது பேச்சை நிறுத்தி, ''எனது நேரம் முடிந்து விட்டது, நாளை உரை தொடரும்'' எனக்கூறி விடைபெற்றேன். சபை திகைத்து விட்டது.

* * *

### வல்வெட்டித்துறை நிகழ்ச்சியில் பிரச்சினை

இதே போல மற்றொரு நிகழ்ச்சி, வல்வெட்டித்துறையில், 'இந்திரவிழா' என்ற ஒன்றை வருடந்தோறும் கொண்டாடுவார்கள். மிக ஆடம்பரமாக அவ் விழா நடைபெறும் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருமுறை என்னை அவ்விழாவிற்கு அழைத்தார்கள். முன்னரே, அவ்விழாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால், அவ்விழாவிற்கு வரச்சம்மதித்தேன். விழாவன்று வல்வெட்டித்துறைக்குச் சென்றேன். அங்கே, ஒவ்வொரு சந்தியிலும், ஒவ்வொரு நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது. என்னை அழைத்தவர்கள், ஒரு சந்தியில் மேடையிட்டு, அதில் என்னை ஏறிப் பேசச் சொன்னார்கள். அந்தச் சந்திக்கு அடுத்த சந்தியில் வில்லுப்பாட்டு நடந்து கொண்டிருந்தது. முதற்சந்தியில் ஓர் இசைக்குழு பாடிக்கொண்டிருந்தது.

நடுச் சந்தியிலிருந்து அவர்கள் என்னைப் பேசச் சொன்னார்கள். சத்தங்களுக்கு நடுவில் பேசுவதென்பது, என்னால் நினைத்தும் பார்க்க முடியாத விடயம். அந்தச் சத்தங்கள் நின்றாலொழிய என்னால் பேச முடியாது என்றேன். அவர்கள் சற்றுச் சண்டித்தனத்துடன், ''ஒத்துக்கொண்டு வந்த நீங்கள், பேசத்தான் வேண்டும்'' எனப் பிடிவாதம் பிடித்தனர். 'முடியவே முடியாது' என்று சொல்லிக் காரில் ஏறிவிட்டேன். அவர்கள் காரைச் சூழ்ந்து கொண்டனர். எனது கார்க்காரரான மகான், காரிலிருந்த ஓர் இரும்புக் கம்பியை வெளியில் எடுத்துச் சுழற்றிய படி, ''நீங்கள் பயப்படாமல் உள்ளே இருங்கோ'' எனச் சொல்லிவிட்டு, திடீரென கார்க் கதவைத் திறந்து, தான் உள்ளே ஏறிப் பெரிய உறுமல் சத்தத்துடன் காரை 'றிவேசில்' எடுத்தார். கூடி நின்றவர்கள் பயந்து பின்வாங்க, எங்கள் கார் யாழ் நோக்கிப் பறந்தது.

* * *

### கலட்டி அம்மன் கோயில் பிரச்சினை

கலட்டி அம்மன் கோயிலில் எனது இராமாயணத் தொடர் விரிவுரை, மிகச் சிறப்பாக நடந்து முடிந்த சில ஆண்டுகளின் பின், ஆலய நிர்வாகத்திற்குள் பகை மூண்டது. எங்களது ஆதரவாளரான தர்மராஜா என்கின்ற அப்பர் அண்ணையை, சபையிலிருந்து விலக்கிய பின், புதுச் சபையினர் தங்களது செல்வாக்கைக் காட்ட வேண்டும் என்பதற்காக, அவ்வாண்டுத் திருவிழாவில் என்னைப் பேச வைக்க விரும்பினர். எனது மதிப்பிற்குரியவரான எழுத்தாளர் செங்கை ஆழியானும், அப்புதுச் சபையில் இருந்தார். எல்லோருமாக ஒருநாள், எங்கள் கோட்டத்திற்கு வந்து, அவ்வாண்டு நான் பேச வேண்டுமென வலியுறுத்தினர். ''அப்பர் அண்ணை என்னுடைய நண்பர். முதன் முதல் அவ்வாலயத்திற்கு என்னைஅழைத்துச்சென்றவர். அவரை நீங்கள் ஒதுக்கிவிட்டு, என்னை அழைக்கிறீர்கள். அதை ஏற்று நான் அங்கு வந்தால், அது நட்புக்குச் செய்த துரோகமாக இருக்கும். அதனால், நான் வர முடியாது'' எனச்சொன்னேன். அவர்கள் என்னை எப்படியும் வரச் செய்து விட வேண்டும் என்பதற்காக, அக்காலத்திலேயே, ரூபா ஐம்பதாயிரம் வரை தரலாம் எனச் சொல்லி, என்னை ஈர்க்க முற்பட்டனர். எந்தச் சமரசத்திற்கும் வராமல் அவர்களது கோரிக்கையை நிராகரித்தேன். அவர்களில் ஒருவர், பின்னர் எனது நண்பர் ஒருவரிடம், ''அவர் எல்லாருக்கும் பொதுவாய்த் தானே இருக்க வேண்டும், எப்படி அப்பர் அண்ணைக்காக வர முடியாது என்று சொல்லலாம்? அவர் மட்டும் வராவிட்டால் கம்பன் கோட்டவாசலில் வந்து சத்தியாக்கிரகம் நடத்துவோம்'' என்று சொல்லியனுப்பினார். வந்த நண்பரிடம் ''அது அவர்களின் உரிமை, தாராளமாய் அவர்கள் சத்தியாக்கிரகம் நடத்தட்டும், ஆனால், ஒன்றும் நாங்கள் வெளியே சென்று வருவதற்கு இடையூறாய், வாசலில் மட்டும் உட்காரக் கூடாது என்று போய்க்கூறுங்கள்'' எனச் சொல்லியனுப்பினேன். அந்த வர்த்தகர், அதனால் என்மேல் பல காலம் பகை பாராட்டினார்.

* * *

### சாவகச்சேரி ஆலயப் பிரச்சினை

ஒருமுறை சாவகச்சேரி ஆலயம் ஒன்றிற்கு, தேர்த்திருவிழாவிற்காக என்னைப் பேச அழைக்க வந்தனர். தேர்த்திருவிழா அன்று பேச்சுக்கள் சரியாக அமையாது என்று, அனுபவத்தில் தெரிந்து வைத்திருந்ததால், நான் நிகழ்ச்சிக்கு வரமுடியாதென மறுத்தேன். அவர்கள் விடாப்பிடியாக, ''சரியாக எட்டு மணிக்கு சாமி தேரில் ஏறும் ஒன்பதரை மணிக்கு இருப்பிடம் வந்துவிடும், நீங்கள் பத்து மணிக்கு பேசலாம்'' என உறுதிபடக்கூறி அழைத்தனர். அவர்கள் அவ்வளவு உறுதியாய்ச் சொன்னதால் நானும் சம்மதித்தேன். சரியாக ஒன்பதேமுக்கால் மணிக்கு நான் கோயிலடிக்குச் சென்றால் அங்கு ஒருவரையும் காணவில்லை. உபயகாரரை விசாரித்தால், இப்போது தான் சாமிக்கு அலங்காரம் நடக்கிறது. ஒருமணிநேரத்தில் தேர் வெளிக்கிட்டு விடும் என்று எந்தவித பதற்றமும் இன்றி பதில் சொன்னார். கடுமையான ஆத்திரத்தில், பக்கத்தில் போய்த் தேநீர் அருந்திவிட்டு வருவதாய்ச் சொல்லிவிட்டு, வீடு வந்து விட்டேன். அதனால் கடுமையாய்க் கோபம் கொண்ட அவர்கள், பின்னாளில் புலிகளுக்கும் எமக்கும் முரண்பாடு ஏற்பட்ட போது, பிள்ளையாரின் சாபத்தால் தான் அது நடந்தது எனப் பிரசாரம் செய்தனர்.

* * *

### மகான்

சொற்பொழிவு பட்டிமண்டபம் என, நான் இருக்க நேரமில்லாமல் ஓடித் திரிந்த காலமது. யாழ்ப்பாணத்தில் பெற்றோல் இல்லாமல் போனதால், மண்ணெண்ணெயிலேயே வாகனங்கள் ஓடின. அக்காலத்தில் காரைப் பயன்படுத்தியவர்கள் ஒரு சிலர் தான். அந்த நாட்களில் பிரசங்கத்திற்கென, காரில் போனவன் பெரும்பாலும் நானொருவன் தான். அப்போது எனக்கு கார் ஓடியவர், திருநெல்வேலியைச் சேர்ந்த மகான் என்பவர். பழைய திருநெல்வேலிச் சண்டியர் அவர். காரை ஓர் உயிர்ப் பிராணி போல நேசிப்பார். வெறும் ஓட்டுநராய் அன்றி, எனக்கு ஒரு 'பொடிகாட்டாகவும்' செயற்படுவார். கழக உறவுகளில் அவரும் ஒருவராய் இருந்தார். பின்னாளில், புலிகள் இயக்கத்தில் மாத்தையாவால் நிகழ்ந்த குழப்பத்தின் போது, புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டவர், பின்பு என்ன ஆனார் என்று தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை அவரது இழப்பும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய ஒன்றே. * * *

(தொடரும்...)

# சிறிய கட்சிகளைப் புறக்கணிக்கும் நோக்கத்தில் புதிய தேர்தல் முறை

கொழும்பு, ஜன. 04

சிறிய கட்சிகளின் தயவில்லாமல் ஆட்சியமைக்கும் நோக்கத்தில்தான் இந்த புதிய தேர்தல் முறை கொண்டு வரப்பட்டது.

இதன் பாதகங்கள் குறித்து பிரதமரிடமும், ஜனாதிபதியிடமும் பல வருடங்களாக பேசிவருகிறேன். ஆனால், ஜனாதிபதியும் சம்பந்தப்பட்ட அமைச்சரும் இதில் விடாப்பிடியாக இருக்கின்றனர்.

இந்த நிலையில், தற்போதையை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதிக்கு நல்லதொரு நிவாரணியைக் கொடுக்கும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் மு.கா. சார்பாக மரச்சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் தம்பலகாமத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.



அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதிக்கம் அதிக முள்ள இடங்களில் தங்களுடன் சேர்ந்து போட்டியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சி எங்களிடம் பேசிவந்தது.

எங்களது ஆதரவுள்ள சபைகளை யானைச் சின்னத்தில் வென்றுகொடுத்தால், வெளியில் அதை அவர்களது சபையாகக் காண்பிப்பார்கள். இதன் மூலம் ஆட்சியாளர்களிடமிருந்து எங்களுக்கு அனுசரணை கிடைக்கும்.

இதேபோன்று திருகோணமலையில் ஐ.தே.க.வுடன்இணைந்து போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்வதற்கு ஓரிரு நாள்கள் இருக்கும்நிலையில் கூட ரணில் விக்கிரமசிங்க எங்களுடன் பேச்சு நடத்திவந்தார்.

ஐ.தே.க. அமைப்பாளர்கள் கூட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸுடன் இணைந்து போட்டியிடுவதற்கே விருப்பப்பட்டார்கள்.

இந்த நிலையில், மு.கா. மூலம் அரசியல் அதிகாரம் பெற்ற ஓர் அமைச்சர் அதற்கு அடம்பிடித்துக் கொண்டிருந்தார். கடைசியில்நாங்கள்எதிர்பார்த்தமை போலவே நடந்தது. திருகோணமலையில் மூன்று கட்சிகளும் தனித்துப் போட்டியிடுகின்ற ஒரு சூழல் உருவாகியுள்ளது. எங்களது பலத்தை நிரூபிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே நாங்கள் இதைப் பார்க்கிறோம்.


மு.கா. மரச்சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பதே, கட்சி ஆதரவாளர்களின் ஏகோபித்த ஆதரவாகவும் இருந்தது. மு.கா. தனித்துநின்று சபைகளைக் கைப்பற்றும்என்றநம்பிக்கையை வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் தந்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கை கட்சியை மேலும் உற்சாகநிலைக்குக் கொண்டுசென்றுள்ளது.

இயங்கும் அரசியலுக்குள் பெண்களை உள்ளீர்க்கவேண்டியது காலத்தின் தேவையாகும். பெண்களை பெயருக்கு வேட்பாளர்களாக நிறுத்தாமல், ஆளுமைமிக்க பெண்களைத் தேர்தலில் களமிறக்க வேண்டும்.

பெண்களின் அரசியல் வகிபாகம் குறித்து அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்படவேண்டும். தேர்தலின் நிமித்தம் மகளிர் காங்கிரஸ் மாநாட்டை நடத்துவதற்கும் நாங்கள் தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஈழத் தமிழர்களைப் பாதுகாத்ததில் முக்கியபங்கு வகித்தவர் எம்.ஜி.ஆர்!

### தமிழக ஆளுநர் தெரிவிப்பு



ஈழத் தமிழர்களைப் பாதுகாத்ததில் எம்.ஜி. ஆர். முக்கிய பங்கு வகித்தார் என்று தமிழக ஆளுநரும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக வேந்தருமான பன்வாரிலால் புரோஹித் தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழாவையொட்டி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளஅவரதுசிலையை, தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் நேற்றுமுன்தினம்திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தனது எண்ணங்களையும், நோக்கங்களையும் செயற்படுத்திய மாமனிதர் எம்.ஜி. ஆர். அவரது உன்னதமான திட்டங்களால் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் மனதில் நிரந்தரமான இடத்தைப் பிடித்துள்ளார்.

1977 முதல் 1987 ஆம் ஆண்டு வரை முதல்வராக இருந்த அவர் நிறைவேற்றிய சிறந்த திட்டங்களால் இந்தியாவுக்கே தமிழகம் வழிகாட்டியாக அமைந்தது. குறிப்பாக, அவர் கொண்டு வந்த சத்துணவுத் திட்டம் குறிப்பிடத்தக்கது.

தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அமைத்ததற்காக எம்.ஜி. ஆரை மனதாரப் பாராட்டுகிறேன்.

இந்தப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு 30 முதல் 40 ஏக்கர் நிலம் தேவை என பரிந்துரை செய்தது. ஆனால், 1,000 ஏக்கர் நிலத்தை எம்.ஜி.ஆர். ஒதுக்கீடு செய்தார்.

தமிழ் மொழி மீது மிகுந்தபற்றுவைத்திருந்தார்.இதே போல், நாட்டிலேயே முதல் முறையாக மகளிருக்கென தனிப் பல்கலைக்கழகத்தைக் கொடைக்கானலில் ஆரம்பித்தார்.

மத்திய அரசுடன் இணக்கமான உறவு வைத்துக் கொண்டு ஈழத்தில் வாழ்ந்த தமிழர்களைப் பாதுகாத்ததில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

இந்தநாட்டுக்காக அவர் ஆற்றிய சேவைகளை நினைவுகூர்ந்து அவருக்கு மரியாதை செலுத்துகிறேன்என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் ரிஷாத் கட்சிக்குத் தாவல்

கொழும்பு, ஜன. 04

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கிய முஸ்லிம் காங்கிரஸின் நிந்தவூர் பிரதேச பிரமுகர் ஏ.எல். அன்வர்டீன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டுள்ளார்.

அம்பாறை ‘மொன்டி’ ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டஅகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனைச் சந்தித்த அன்வர்டீன், மக்கள் காங்கிரஸுடனான தனது இணைவை உறுதிப்படுத்தியுள்ளார்.

நிந்தவூரைச் சேர்ந்த அன்வர்டீன், கடந்த காலங்களில் பிரதி அமைச்சர்பைசால்காசிபைசாலின் அரசியல் வெற்றிக்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவராவார்.

தனியார் வங்கியொன்றில் முகாமையாளராகக் கடமையாற்றும் அன்வர்டீனை நிந்தவூர் பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடுமாறு பிரதிஅமைச்சர் வேண்டிக் கொண்டார் எனவும் ஆனால் அதனை அன்வர்டீன் மறுத்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தற்போது நிந்தவூர் பிரதேச சபைக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பில் மயில் சின்னத்தில் போட்டியிடுபவருமான எம்.ஏ. எம். தாஹிர் அணியில் அன் வர்டீன் இணைந்து செயற்பட்டு வருகிறார் எனத் தெரிய வருகிறது.





பிரதிஅமைச்சர் பைசல் காசிம் நிந்தவூர் பிரதேச சபைக்கான தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை யானைச் சின்னத்தில் களமிறக்கி வழி நடத்தி வருகின்ற நிலையிலேயே அவருக்கு எதிரான அரசியல் தரப்பினரோடு அன் வர்டீன் கைகோர்த்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் ஊடாக ஒரே நாளில் கிடைத்த அதிகூடிய வருமானம்!

கடந்த வார இறுதியில் இலங்கையின் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் ஊடாக, ஒரு லட்சம் வாகனங்கள் பயணித்துள்ளன என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்போது ஒரு நாள் வருமானமாக 3 கோடி ரூபாவுக்கும் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது 2017ஆம் ஆண்டில் ஒரு வருடத்தில் ஒரு நாளில் பெற்ற அதிக வருமானம் என அதன் செயற்பாட்டு இயக்குநர் எஸ். ஓபநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வீதியில் கடந்த 22ஆம் திகதி மாத்திரம் ஒரு லட்சத்து 10 ஆயிரம் வாகனங்கள் பயணித்துள்ள நிலையில் அதேயளவு வாகனங்களின் எண்ணிக்கை 23ஆம்திகதியும்பயணித்துள்ளன.

கட்டுநாயக்க அதிவேக வீதியின் ஊடாக அதே காலப் பகுதியில் நாளொன்றுக்கு 22 ஆயிரத்துக்கும் 25 ஆயிரத்துக்கும் இடையிலான வாகனங்கள் பயணித்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரண்டு வீதிகளிலும் பொதுவான நாள்களில் 50 ஆயிரம் தொடக்கம் 70 ஆயிரம் வரையான வாகனங்கள் பயணிக்கும் என ஓபநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# கல்விக்கதிரில் வெளியாகிய 6 மாதிரி வினாத்தாள்களுக்கான விடைகள்

## விடைகள்

**வி.தாள் - 1 பகுதி** I - 1) 3 2) 2 3) 1 4) 2 5) 2 6) 3 7) 2 8) 2 9) 2 10) 3 11) 3 12) 3 13) 2 14) 1 15) 3 16) 2 17) 2 18) 1 19) 3 20) 2 21) 2 22) குந்துகாலி 23) 2 24) 1 25) 1 26) 1 27) 2 28) 2 29) 2 30) 6 31) 1 32) 1 33) 1 34) 3 35) 3 36) 2 37) 3 38) 2 39) 1 40) 2. **பகுதி** II- 01.1) மாலை/மாலை வேளை 2) கூடை 3) கொழுந்துகளை நிறுத்துக் கொண்டிருந்தார். 4) சூரியன் மறைந்துகொண்டிருந்தது. 5) மலைப்பிரதேசம் 6) பாதை. 7)1-தம்பணி 2-தொடங்கின. 8) 1-கொழுந்து +கூடை 2-வெறுமை+இலை 9)1-வளி/வீதி 2-மலை உச்சி 10) பாம்பு. 02.1) விற்றமின் C 2) பப்பாளி 3) அலரிமாளிகை 4) மணல்மண் 5) ஆசியா 6) பூ 7) மில்லிலீற்றர் 8) 1, 13 9) பிரார்த்தனை 10) மகிழ்ச்சி 11) வீதி சட்டங்களை கடைப்பிடித்தல் 12) காகம் 13) முள்ளம்பன்றி 14) குதிரை 15) சமநிலை பேண 16) ஆமை 17) சிறுத்தை 18) மீன் 19) பின்னவல 20) இலங்கை 21) மாலைதீவு 22) பம்பரகந்த. 03.1)x 2)✓ 3)x 4)✓ 5)✓ 04.1) கற்பூரம் 2) வித்து 3) சவக்காரம் 4) பற்றரி 5) தேங்காய் எண்ணெய். 05.1) A-திரை 2) B-சுட்டி 3) C-விசை பலகை 4) D-மையசெயலாக்கி. 06.1) 232km 2) 512km 3) காலி, யாழ்ப்பாணம் 4)75 சதுரcm / 75cm² 5) 36 6) 08 7) 172 8) நிமல் 9) 08 10) 3cm 11) 13000 12) 125 13) 32 14) 1/8 15) 12cm. 07.1) வைத்தியர் 2) சிவப்புநிறம் 3) கரும்பலகையை சுத்தம் செய்யுங்கள். 08.1) Garden 2) Sixteen 3) Classroom 4) Principal. 09.1) பல்லா 2) மொனறா 3) பொ(த்)த 4) பென்சல 10. பொருத்தமான வாக்கியம் இருப்பின் புள்ளிகள் வழங்குக.

**வி.தாள் - 2 பகுதி** I - 1) 3 2) 2 3) 3 4) 4 5) 3 6) 1 7) 3 8) 2 9) 3 10) 5 11) 2 12) 3 13) 1-12,2-1 14) 3 15) 2 16) 3 17) 2 18) 1 19) 3 20) 3 21) 2 22) 3 23) 3 24) 1 25) 2 26) 3 27) 3 28) 2 29) 2 30) 1 31) 1 32) 1 33) 2 34) 3 35) 2 36) 3 37) 1 38) 2 39) 3 40) 2. **பகுதி** II - 01. 1) அன்னை 2) பரிதி 3) பாவம் 4) பரிதி முன் பனியே போல 5) ஐந்து 6) முடிதல். 02. 1) மேற்கொண்டோம் 2) கிடைக்கின்றது. 03. 1) அவலம் 2) தழுவிச். 04. 1) மோகன் கடைக்குச் சென்று பொருட்களை வாங்கினான். 2) மாணவர்கள் சுற்றுலாவுக்குச் சென்று தலதா மாளிகை சிவனொளிபாதமலை என்பவற்றை பார்வையிட்டனர். 05. பொருத்தமான வாக்கியங்கள் இருப்பின் புள்ளியிடுக. 06. கருதி வாழ வேண்டும் தந்தை தாயைப் பேணும். 07. 1) ஆளுநர் 2) காய்ச்சல் 3) சனாதிபதி. 08. 1) 12 2) க்+ஓ. 09. 1) அ.்றிணை 10. 1) Tye 2) Balloon 3) Hundred. 11.1) நான் என் நாட்டை நேசிக்கின்றேன்/ நான் என் நாட்டை அன்பு செய்கின்றேன். 2) தயவு செய்து அமருங்கள்/இருங்கள்/ உட்காருங்கள் 3) நான் உள்ளே வரலாமா? 12. 1) இது எங்கள் வகுப்பறை 2) நன்றி தங்கை 3) இது எனது கதிரை. 13. 1) புட்டுவ 2) பென்சில 3) மல. 14. 1 15. 1 16. 12 17. 369 18. ஒன்பதாயிரத்து அறுபத்து ஒன்பது 19.30mm/30 மில்லிமீற்றர் 20. 2 - 2 (வளைந்தது) 21) 4 - 6 22) VI 23. 44cm/ 44 சென்ரிமீற்றர் 24. $\frac{2}{4}$ 25. 12 26. 9cm/ 9 சென்ரிமீற்றர் 27. 0.4 28. 1908/1908 மாணவர்கள் 29. 3 30. 4 31. 2 32. 1 33. 4 34. 2 35. 3 36. 1 37. 4 38. 2 39. 3 40. 1 41. 4 42. 3 43. 4 44. 1 45. 3 46. 4 47. 4 48. 3 49. 4 50. 4 51. 2 53. 2 54. 1 55. 3 56. 4 57. 3 58. 1.


**வி.தாள் - 3 பகுதி** I - 1) 1 2) 2 3) 2 4) 1 5) 2 6) 1 7) 2 8) 3 9) 2 10) 3 11) 2 12) 1 13) 4 14) 1 15) 1 16) 2 17) 3 18) 3 19) 1 20) 2 21) 2 22) 1 23) 3 24) 2 25) 3 26) 3 27) 4 28) 2 29) 3 30) 2 31) 2 32) 3 33) 3 34) 2 35) 2 36) 1 37) 3 38) 3 39) 2 40) 3. **பகுதி** II- 01.1) அண்மைக்காலமாக 2) பாலகர் 3) பச்சைப்பசேல்/வாடி வரண்டு 4) பத்திரிகை 5) முதியவர்கள் 6) நீர் நிலைகள். 02.1) அணி 2) அலை. 03. 1) பற் குத்த உதவும் 2) பழங்கஞ்சி 04. 1) ஆச்சிரமம் 2) கைதி/கைதிகள். 05. 1) பாலர் 2) பருந்து 3) மருந்து 4) பந்து. 06.1) 15 2) Study 07.1) புத்தாண்டு வாழ்த்துக்கள் 2) நான் நாளை வருவேன் 08.1) Umbralla 2) Coconut 09. 1) ஹச 2) ஹெசல்கடி 10. 1) தெமில் பொத்த 2) பாசல/ஸ்கூலய. 11.1) ஹெ(ட்)ட இஸ்கோ நிவாடுய் 2) அப்பி லங்கா கட்டிய. 12. பொருத்தமான வாக்கியம் காணப்படின் புள்ளி வழங்குக. 13.1) 7320 2)666,669,696,969,996,999. 3) மூவாயிரத்து அறுநூற்று அறுபத்து ஆறு 4) $\frac{2}{8}$ 5) $\frac{1}{3}$ 6) 10 ℓ /10லீற்றர்/10,000 mℓ / 10மில்லி லீற்றர் 7) 2 ℓ / 2 லீற்றர் / 2000mℓ /2000மில்லி லீற்றர் 8) கும்பகம் 9) 3 10) 40kg 150g / 40150g 11) 1800 mℓ/1800 மில்லிலீற்றர் 12) 5.00, 55.00. 60.00, 5.00. 13) மல்லிகை 14) 7 பேர் 15) 30 பேர். 14.1) 1 2) 1 3) 0 4) 3 5) 3 6) 1 7) 2 8) 2 9) 4 10) 4 11) 2 12) 1 13) 2 14) 3 15) 4 16) 3 17) 1 18) 4 19) 2 20) 3 21) 4 22) 3 23) 4 24) 3 25) 4 26) 4 27) 2 28) 1 29) 1 30) 3.

**வி.தாள் - 4 பகுதி** I - 1) 4 2) 2 3) 3 4) 3 5) 3 6) 2 7) 2 8) 1 9) 3 10) 3 11) 2 12) 3 13) 3 14) 2 15) 2 16) 3 17) 3 18) 2 19) 3 20) 2 21) 3 22) 1 23) 2 24) 3 25) 3 26) 1 27) 1 28) 3 29) 2 30) 3 31) 1 32) 3 33) 3 34) 2 35) 2 36) 2 37) 3 38) 2 39) 2 40) 1. **பகுதி** II -1) காட்டிற்கு 2) செங்கதிரோன் 3) மெல்ல மெல்ல 4) செங்கதிரோன் 5) அழைத்தார்/நடந்தான் 6) துணிவு + உள்ள. 02.1) வருவோம் 2) மேசை 3) வா 4) அலைந்தன. 03.1) பொருத்தமான வாக்கியம் எனின் புள்ளி வழங்குக. 2) பொருத்தமான வாக்கியம் எனின் புள்ளி வழங்குக. 03.1) வாழ்க்கை 2) பொறாமை 3) மறைந்து. 05.1) தாகம் 2) தலை முழுகு 3) உதிக்கும்/உதிப்பான். 06.1) முயற்சி உடையர் இகழ்ச்சி அடையார் 2) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு. 07.1) Elephant 2) Fish 3) Frock 08.1) மாலை வணக்கம் 2) வீட்டுக்குப் போவோம் 3) தயவு செய்து அமைதியாக இருங்கள். 09.1) உங்கள் சுகம் எப்படி 2) நல்ல சுகம். 10.1) ஒயாகே நம மொக்கத 2) கிரி பொன்ன. 11.1),2),3) பொருத்தமான வாக்கியம் காணப்படின் புள்ளி வழங்குக. 12.1) 9860 2) தொண்ணூறாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்று 3) XIII 4) 1332 5) 45 6) ரூபா.160.00 7) ரூபா.91.00 8) 72m/72மீற்றர் 9) 16 10) 105cm/105 சென்ரிமீற்றர் 11)2 / 2துண்டுகள் 12) 100m/100 மீற்றர் 13) $\frac{3}{6}$ $\frac{1}{2}$ 14) [shaded figure] ஏதாவது ஒரு துண்டுக்கு நிறம் தீட்டப்பட வேண்டும். 15) ரூபா 200.00. 13. 1) 2 2) 3 3) 3 4) 1 5) 4 6) 4 7) 3 8) 3 9) 1 10) 4 11) 2 13) 3 14) 4 15) 2 16) 2 17) 3 18) 2 19) 4 20) 4 21) 3 22) 2 23) 2 24) 3 25) 4 26) 2 27) திசைகாட்டி 28) ஒற்றைச்சில்லு வண்டி 29) காட்டுக்கத்தி 30) புல்லாங்குழல்.

**வி.தாள் - 5 பகுதி** I - 1) 2 2) 2 3) 2 4) 3 5) 2 6) 1 7) 2 8) 2 9) 1 10) 3 11) 1 12) 3 13) 1 14) 2 15) 1 16) 3 17) 3 18) 2 19) 3 20) 1 21) 2 22) 5 23) 2 24) 3 25) 1 25) 1 26) 3 29) 3 30) 3 31) 1 32) 1 33) 3 34) 2 35) 2 36) 1 37) 2 38) 1 39) 2 40) 3. **பகுதி** II -01.1) தோமஸ் அல்லா எடிசன் 2) மிலான் நகரில் 3) பெற்றோர் 4) ஒளிர்ந்தது 5) சேர் ஹம்பிரி டேவி 6) பாராட்டு 7) நீண்ட நேரம். 02. 1) பாரி 2) மகிழ்ந்தனர் 3) அழைக்கின்றோம். 03. பொருத்தமான வாக்கியம் எழுதியிருப்பின் புள்ளி வழங்குக. 04. 1) கல்வி கற்று நன்மை 2) தருமம் ஒன்றே பெரிது. 05. 1) சேய் 2) சந்திரன் 3) வானம் 4) ஈகை 06. 1) சுயசரிதை 2) இணைமொழி 3) சத்திய சோதனை. 09. 1) World 2) Period 3) Cow. 10. 1) சிந்தனை 2) நாற்று 3) கன்று. 11. 1) பொ(த்)த 2) புட்டுவ 3) பென்சல. 12. 1) அந்த பக்கம் 2) தண்ணீர் தாருங்கள் 3) இன்று வரமாட்டார் 4) ரோஜா பூ சிவப்பு நிறம். 13) 763 14) 9085 15) (1) 46 (2) 85 16) XIX 17) 3 18) 45, 35 19) 35cm 20) 3 மாணவர்களுக்கு 21) 9.00 22) 6 23) (1) 1 (2) 3, 1. 24) புதன் 25) [figures] 26) 32 27) [figure] 28) A 29) வல்லாரை 30) பொன்னாங்காணி 31) கோவா 32) மரவள்ளிக்கிழங்கு 33) உருளைக்கிழங்கு 34) கரட் 35) பூசணிக்காய் 36) கத்தரிக்காய் 37) பாகற்காய் 38) பெப்ரோமியா 39) கமுகு 40) சவர்க்காரம் 41) விளாம்பழம் 42) பலா 43) சூரியகாந்தி, நிலக்கடலை, இலுப்பை, வேம்பு. 44) உண்ணி 45) மயிர்கொட்டி 46) நாய் 47) 110 48) கடிகாயத்தினை இளஞ்சுடுநீரால் கழுவுதல். 49) மலர்வு 50) பட்டம் சொல்லி அழைத்தல் 51. கடின உழைப்பின் மூலம் பணம் சம்பாதித்தல் 52. கிளி 53. நத்தை 54) காகம், மைனா, கிளி. 55) நாய் 56) அவுஸ்திரேலியா.

**வி.தாள் - 6 பகுதி** I - 1) 3 2) 2 3) 3 4) 2 5) 1 6) 3 7) 1 8) 3 9) 3 10) 2 11) 3 12) 3 13) 2 14) 1 15) 3 16) 2 17) 2 18) 3 19) 2 20) 2 21) 2 22) 3 23) 1 24) 2 25) 1 26) 2 27) 3 28) 2 29) 3 30) 1 31) 3 32) 3 33) 3 34) 3 35) 2 36) 1 37) 3 38) 1 39) 3 40) 2. **பகுதி** II - 01.1) செல்பேசி 2) அவசியமற்ற அழைப்புக்களை 3) இன்பம்/ மகிழ்ச்சி/ உவகை 4) உலகம் 5) தவிர்த்திடுவாய் 6) கை. 02. 1) சிறந்த புத்தகங்களை வாசிப்பதால் நல்ல அறிவு கிடைக்கும் 2) போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து 03. கம்பி 04. போத்து 05. பிள்ளை 06. 1) ஒழி 2) கரை 07. 1) இசைக்கருவி 2) ஈகை 08. 1) ஜன்னல் 2) நிழல் பிரதி 3) வேலி 09. 1) News 2) Medicine 3) Comb 10. 1) விசி அ(ட்)டய 2) மில அடு கரண்ண பரித 11. 1) கொஞ்சம் பசிக்கிறது 2) நாளை குளிக்கவும் 12. பொருத்தமான வாக்கியம் எனின் புள்ளி வழங்குக. 13. 1) பத்தாயிரம் 2) பத்துக்கள் 3) 1) $\frac{1}{8}$ – $\frac{7}{8}$ 4) [shaded boxes] இத்துடன் மேலும் 2 பெட்டிகளுக்கு நிறம் தீட்டப்பட்டால் புள்ளி வழங்குக. 5) (1) $\frac{3}{10}$ 2) 0.7 6) (1) $\frac{1}{5}+\frac{3}{5}=\frac{4}{5}$ 2) $\frac{2}{3}+\frac{1}{5}=\frac{10+3}{15}=\frac{13}{15}$ 7) 8kg - 300g 8) 4/ 200m 9) 42 cm 10) 9845 தேங்காய்கள் / 9845 11) 60 பேர் 12) 1820 13) (1) [circle] (2) [triangle] 14) (1) 312.50 (2) 400.00 15) ரூ. 28.00 14. 1) 1 2) 3 3) 1 4) 1 5) 3 6) 4 7) 2 8) 3 9) 3 10) 4 11) 3 12) 2 13) 2 14) 4 15) 3 16) 1 17) 1 18) 3 19) 1 20) 1 21) 3 22) 3 23) 1 24) 3 25) 1 26) 1 27) 3 28) 4 29) 2 30) 1.



8)  இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது

1) சிப்பி 2) நட்சத்திர மீன் 3) ஒக்டோபஸ் 4) கடற்குதிரை

9) பின்வருவனவற்றில் ஈருடக வாழி

1) டொல்பின் 2) நாரை 3) கிரேன் 4) பல்லி

10) பின்வருவனவற்றில் மண்ணுக்குள் புற்று அமைத்து வாழாத பிராணி

1) உடும்பு 2) பாம்பு 3) கறையான் 4) சீல்

11) பின்வருவனவற்றில் பத்துக் கால்களினை உடைய பிராணி

1) சிலந்தி 2) அழுக்கணவன் 3) இறால் 4) மரவட்டை

12) பிராணிகளினால் தமக்கே ஆன வாழ்விடங்களை அமைக்கும்போது வாழ்விடத்தின் வாயிலை கீழே வைத்து கூடு கட்டக்கூடியது

1) சிலந்தி 2) தூக்கணாங்குருவி 3) வீட்டுக்குருவி 4) குயில்

13) முலையூட்டியாக உள்ள மீனினம்

1) ஆமை 2) திமிங்கலம் 3) இறால் 4) கணவாய்

14) காலில் குளம்பு இல்லாத பிராணி

1) குதிரை 2) பசு 3) மான் 4) குரங்கு

15) பின்வருவனவற்றில் பறக்கக்கூடிய பறவை

1) தீக்கோழி 2) கிவி 3) நீர்க்கோழி 4) பென்குயின்

16) சுனாமி வருவதை முன்கூட்டியே அறியக்கூடிய பிராணி

1) யானை 2) காகம் 3) ஆமை 4) தும்பி

17. இலைகளின் கீழ்ப்புறத்தில் முட்டையிடும் பிராணி எது?

1) அத்துப்பூச்சி 2) தூக்கணாங்குருவி 3) நாரை 4) எறும்பு

18. " புல்லைத் தின்று வளர்ந்திடுவேன்
பாலை உமக்கும் தந்திடுவேன்
நான் யார்? நான் யார்? "

1) நாய் 2) பால்க்காரன் 3) பசு 4) பூனை

19. பூமியில் உள்ள சமுத்திரங்கள்

1) 5 2) 7 3) 9 4) 6


20. ஆசியாக் கண்டத்தில் காணப்படும் நாடு எது?


1) பிலிப்பைன்ஸ் 2) தாய்வான் 3) நோர்வே 4) சூடான்

இன்று வெளியாக இருந்த பிரபல ஆசிரியர் வே.அன்பழகன் தயாரித்த 5ஆம் தர புலமைப்பரிசில் மாதிரி வினாத் தாள்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் நாளையும் நாளைமறுதினமும் பிரசுரமாகும் என அறியத் தருகிறோம்.


21. சிவனொளிபாத மலையில் உண்டாகும் ஆறு
    1) கும்புக்கன் ஓயா  2) ஜின் கங்கை  3) மகாவலிகங்கை  4) மாதுறு ஓயா

22. செந்நிறக்கோள் என அழைக்கப்படுவது
    1) புதன்  2) புவி  3) செவ்வாய்  4) வியாளன்


23. 
இரவு வானில் இந்த நட்சத்திர கூட்டம் காணப்பட்டது இதன் பெயர்
    1) கார்த்திகை  2) தென் சிலுவை
    3) பெருங்கரடி  4) துலாம்

24. 
இப்படம் பின்வருவனவற்றில் குறிப்பது எது?
    1) ஸ்பிரேயர்  2) மூடி திறத்தல்
    3) காற்றாலை  4) நீர் இறைத்தல்


25. கொம்பு வாத்தியம் எது?


(1)


(2)


(3)


(4)

26. 
இதன் பெயர் என்ன?
    1) திசைகாட்டி  2) காற்றுமானி
    3) திசைகாட்டி  4) அம்புவில்

27. பொருட்களின் விற்பனையை அதிகரிக்க வியாபாரி எடுக்கும் நடவடிக்கை
    1) கடனுக்கு கொடுத்தல்  2) விலையினை கூட்டுதல்  3) விளம்பரம்  4) ஏலத்தில் விற்றல்

28. பின்வருவனவற்றில் ஆணிவேர் கிழங்கு
    1) இஞ்சி  2) மஞ்சள்  3) மரவள்ளி  4) கரட்

29. இலங்கைக்கு அதிக வருமானம் திரட்டித் தரும் தாவரம்
    1) கற்றாளை  2) தேயிலை  3) மிளகு  4) றப்பர்.

30. பாதுகாப்பற்ற மின் பாவனையால் ஏற்படக்கூடியது
    1) உயிரிழப்பு  2) அதிக வருமானம்  3) நஷ்ட ஈடு கோரல்  5) தீக்காயம்



# கல்விக் கதிர் வெளியீடு
## பொது அறிவு வினா – விடை

01. தூய நீரின் சுவை யாது? சுவையில்லை
02. இயற்கை ஒளி முதல் எது? சூரியன்
03. சிறுவர்களுக்கு காணப்படும் பாற்பற்கள் எத்தனை? 20
04. தொலைபேசியை கண்டுபிடித்தவர் யார்? அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல்
05. இலங்கையின் முதற் பெண் பிரதமர் யார்? சிறிமாவோ பண்டாரநாயக்க
06. இலங்கையின் தேசிய விளையாட்டு எது? கரப்பந்தாட்டம்
07. 80ம் ஆண்டு கொண்டாடப்படும் விழா? அமுத விழா
08. இலங்கையின் முதல் ஜனாதிபதி? சேர். வில்லியம் கொபல்லாவ
09. முஸ்லீம்களின் வேதநூல் எது? திருக்குர் ஆன்
10. முக்கனிகள் எவை? மா, பலா, வாழை
11. முத்தமிழ் எவை? இயல், இசை, நாடகம்
12. இலங்கையில் பெரிய மாவட்டம் - அனுராதபுரம்
13. இலங்கையின் மிகப்பெரிய சமுத்திரம் எது? பசுபிக் சமுத்திரம்
14. இலங்கையில் அதிகம் மழையைப் பெறும் இடம் - வட்டவளை
15. ஞாயிற்று தொகுதியில் எத்தனை கோள்கள் உண்டு? 09
16. இசைக்கருவியில் இசைக்கப்படும் ஏழு சுரங்கள் எவை? ஸ,ரி,க,ம,ப,த,நி
17. மனைவியை இழந்தவன் - தபுதாரன்
18. இலங்கையின் தலைநகரம் எது? ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம்
19. புவியின் துணை கிரகம் எது? சந்திரன்
20. இலங்கையில் குறைந்த மழைவீழ்ச்சியை பெறும் இடம் - மறிச்சுக்கட்டி
21. முதலாவது முதன்மை எண் எது? 02
22. வெள்ளரசு மரக்கிளையை இலங்கைக்கு கொண்டு வந்தவர் - சங்கமித்தை
23. இலங்கையின் தேசிய மலர் எது? அல்லி
24. பூமியின் உருவம் யாது? கோளம்
25. லீப் வருடத்தில் எத்தனை நாட்கள் உள்ளன? 366 நாட்கள்
26. இலங்கையில் சனத்தொகை கூடிய மாவட்டம் - கொழும்பு
27. உலகின் சனத்தொகை கூடிய நாடு - சீனா
28. நீளத்தை அளக்கும் சர்வதேச அலகு எது? மீற்றர்
29. இலங்கையில் உள்ள விலங்கு சரணாலயம் எவை? யால, வில்பத்து, குமண
30. இலங்கையின் உயரமான அணைக்கட்டு எது? விக்டோரியா
31. இலங்கையின் புகழ் பூத்த சுவர் ஓவியம்? சிகிரியா
32. சூரியனுக்கு மிக தொலைவில் உள்ள கோள் - புளுட்டோ
33. இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் நூல் எது? மகாவம்சம்
34. பௌத்தர்களின் புனித நூல் எது? திரிபீடகம்
35. வானவில்லின் நிறத்தினை கண்டுபிடித்தவர் யார்? சேர் ஐசேக் நியூட்டன்
36. மிகவும் சிறிய இதயம் கொண்ட மிருகம் எது? சிங்கம்
37. சுக்கிரன் என அழைக்கப்படும் கோள் எது? வெள்ளி
38. உலகின் மிகப் பெரிய நதி - மிசிசிபி
39. பறக்காத பறவை எது? பென்குயின்
40. நீந்த தெரியாத மிருகம் - ஒட்டகம்

# எங்களிடமும் அணுகுண்டு பொத்தான்


ட்ரம்ப் பதிலடி

அணுகுண்டுக்கான பொத்தான் எனது மேசையில்தான் உள்ளது என வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் கூறியிருந்த நிலையில், எங்களிடமும் பெரிய, வலிமையான பொத்தான் உள்ளது என ட்ரம்ப் பதிலடி கொடுத்துள்ளார்.

புத்தாண்டை ஒட்டி தொலைக்காட்சியில் பேசிய வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன், ஒட்டு மொத்த அமெரிக்காவின் நிலப்பரப்பு நமது அணு ஆயுதத்தின் எல்லையில் உள்ளது. அதற்கான பொத்தான் எனது மேசையில்தான் எப்போதும் உள்ளது எனக் கூறியிருந்தார்.

இந்த நிலையில், கிம் ஜாங் உன்னுக்குபதிலடிகொடுத்துள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளவை வருமாறு:- வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் அணுகுண்டுக்கானபொத்தான்அவரது மேசையில் எப்போதும் இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பகுதியி குறைபாடுகளுடன் பட்டினி கிடக்கும் யாராவது அவரிடம் கூறுங்கள், எங்களிடமும் அணுகுண்டு பொத்தான் உள்ளது. ஆனால், இது மிகப் பெரிதாக, வலிமையானதாக இருக்கும். முக்கியமாகஎங்களது பொத்தான் செயற்படும் நிலையில் உள்ளது என்றும் பதிவிட்டுள்ளார்.

சில மாதங்களாக இருவருக்கும் வார்த்தை மோதல்கள் இல்லாமல் இருந்த நிலையில், இந்த ஆண்டின் தொடக்கத்திலேயேவாய்த்தகராறு தொடங்கி விட்டது.

## புத்தாண்டின் ஆடையால் ட்ரம்ப் மனைவி சர்ச்சையில்



வொஷிங்டன்,ஜன.04

புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது ட்ரம்ப் மனைவி மெலானியா ட்டிரம்ப் 2 லட்சம் ரூபா மதிப்புள்ள உடை அணிந்துவந்தசம்பவம் அமெரிக்கர்களுக்கிடையே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் புளோரிடாவில் பால்ம் கடற்கரையில் உள்ள மஸ்-ரா-லாகோ என்ற இடத்தில் புத்தாண்டைக் கொண்டாடினார். அதில் அவரது மனைவி மெலானியா ட்ரம்ப், மகன் பப்ரன் ட்ரம்ப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விழாவில் பங்கேற்ற மெலானியா 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா மதிப்புள்ள கவுண் அணிந்து இருந்தார். இளஞ்சிவப்பு நிறத்தில் ஆன அந்த உடையில் சிவப்பு, நீலம் மற்றும் வெள்ளை நிறத்தில் பூ வேலைப்பாடுகள் இருந்தன.

இந்த உடையை 'எர்டெர்ம்' என்ற ஆடை நிபுணர் வடிவமைத்து இருந்தார். அது அமெரிக்கர்களிடம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## பஸ் - லொறி மோதி விபத்து: பெருவில் 36 பேர் பரிதாபச் சாவு!

லீமா,ஜன.04

பெரு நாட்டின் தலைநகர் லீமா அருகே சுமார் 100 மீற்றர் ஆழப் பள்ளத்தில் பஸ் கவிழ்ந்த விபத்தில் சுமார் 36 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பெரு நாட்டின் தலைநகரான லீமாநகருக்கு வடக்குத்திசையில் சுமார் 70 கிலோமீற்றர் தொலைவில் பசமாயோ என்னும் நகரம் அமைந்துள்ளது. இது கடற்கரை நகரமாகும். இப்பகுதிக்குச் செல்லும் வீதிகள் மிகவும் ஆபத்தானவையாகும். வீதிகளை ஒட்டி சுமார் 100 மீற்றர் ஆழப் பள்ளங்கள் உள்ளன.

இந்த நிலையில், பசமாயோ நகரில் இருந்து ஒரு பஸ் 57 பயணிகளுடன் லீமா நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. வீதியில் பஸ் சென்று கொண்டிருந்த போது ஓர் ஆபத்தான வளைவில் எதிரே வந்த லொறி மீது மோதியது. இந்த விபத்தில்



அந்த பஸ் வீதியை ஒட்டி இருந்த சுமார் 100 மீற்றர் ஆழமுள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது.

இது தொடர்பாகத் தகவல் அறிந்ததும் அப்பகுதிக்கு விரைந்த மீட்புப்படையினர் விபத்தில் சிக்கியவர்களை மீட்கப்போராடினர். ஆனால் பள்ளத்தில் இருந்து மக்களை மீட்பது கடினமாக இருந்தமையால் ஹெலிக்கொப்டர் மூலம் மீட்புப்பணிகள் நடைபெற்றன.

மீட்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் 36 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது. காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றமையால் சாவு எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

## இதயத்தை பையில் சுமந்து கொண்டு உயிருடன் வாழும் அதிசயப் பெண்!

லண்டன்,ஜன.04

பிரிட்டனில் செயற்கை இதயத்தைப் பையில் சுமந்து கொண்டு பெண் உயிர் வாழ்கின்றமை அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த செல்வா ஹூசைன் என்ற பெண்ணின் இதயம் செயலிழந்து விட்டது. அதனால் அவர் ஹரிபீல்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இதயம் முழுவதுமாக செயலிழந்து விட்டமையால் மாற்று அறுவைச் சிகிச்சை மூலமாக செயற்கை இதயம் பொருத்தப்பட்டது. இரண்டு பெரிய பிளாஸ்ரிக் டியூப்கள் அவரது இதயத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். அதனோடு பொருத்தப்பட்டிருக்கும் மோட்டார் மூலம் இயக்கப்படும். இந்த கருவியின் மொத்த மதிப்பு 73 லட்சமாகும்.

இது அடங்கிய கருவியை ஹூசைன் தனது



முதுஇல் மாட்டிக் கொண்டுள்ளார். எங்கு சென்றாலும் அந்த பையை எடுத்து கொண்டு தான் செல்வார். அவர் கூறுகையில், என் குடும்பத்துடன் புத்தாண்டு கொண்டாட உதவிய ஹரிபீல்ட் மருத்துவமனைக்கு நன்றி. நான் உயிருடன் வாழ ஒரு தீர்வை உருவாக்கியது மிகச் சிறப்பானதாகும் எனக் கூறியுள்ளார்.

## சீனாவில் டைனோசர் முட்டைப் படிமங்கள்



சீனாவில் 13கோடி ஆண்டுகள் பழைமையான 30 டைனோசர் முட்டைகளின் படிமங்கள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தின் குவாங்சு நகரில் டைனோசர் முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் தொழிலாளர்கள் கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்தபோது இந்த முட்டைப் படிமங்கள் கிடைத்துள்ளன. இந்த முட்டைகள் 13 கோடி ஆண்டுகள் பழைமையானவை ஆகும். பாறைகளின் நடுவில் இருந்த 30முட்டைகளைஉடைக்காமல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் எடுத்தனர். முட்டையின் ஓடு 2 மில்லி மீற்றர் வரை தடிமன் கொண்டுள்ளது.

இந்த முட்டைகளை ஆய்வு செய்வதற்காக தேசிய அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. (ப)

## விண்வெளியில் சோதனை செய்யப்பட்ட முதல் நுண்ணுயிரி



விண்வெளியில் கண்டறியப்பட்ட நுண்ணுயிரியை முதல்முதலாக விண்வெளியில் உள்ள ஆய்வு நிலையத்திலேயே சோதனை செய்து உறுதி செய்துள்ளனர்.

விண்வெளியில் ஐ.எஸ்.எஸ். என்று அழைக்கப்படுகிற சர்வதேசவிண்வெளி நிலையத்தை அமைத்து, பன்னாட்டு விஞ்ஞானிகள் ஆய்வுப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மிதக்கும் விண்வெளி நிலையம், பூமியில் இருந்து சுமார் 400 கிலா மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில், முதல் முறையாக நுண்ணுயிரியை விண்வெளியிலேயே ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துள்ளனர். இது வரை விண்வெளியில் கிடைக்கும் நுண்ணுயிரியை பூமிக்கு அனுப்பி ஆராய்ச்சி செய்த பிறகே உறுதிப்படுத்துவர். ஆனால், இந்த உயிரை விண்வெளியிலேயே சோதனை செய்து உறுதி செய்தனர்.

மின்யான் கருவிகளை பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அதன் மாதிரிகள் பூமிக்கு அனுப்பப்பட்டு மீண்டும் ஆய்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தினகரன் சட்டசபை வருவதால் எந்தவொரு தாக்கமும் ஏற்படாது

சென்னை,ஜன.04

தினகரன் சட்டசபைக்கு வருவதால் எந்தத் தாக்கமும் ஏற்படாது. அ.தி.மு.கவின் ஆட்சி 100 ஆண்டு காலம் வளரும் என்று அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.கட்சியின் எம்.எல்.ஏக்கள் கூட்டம் முடிந்ததும் அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களிடம் கூறிவை வருமாறு:-


அமைச்சர் ஜெயக்குமார்

தினகரன் முதன்முறையாக வெற்றி பெற்றுச் சட்டசபைக்கு வருகிறார். அதனால் ஒரு தாக்கமும் இருக்காது. நாம் ஒருவர் நமக்கு ஒருவர் கதைதான் அது. முழுமையான அளவுக்கு அம்மா சட்டசபையில் எடுத்துச் சொன்னமை. போல் அ.தி.மு.கவும், ஆட்சியும் 100 ஆண்டு காலம் தழைக்கும், ஓங்கும், வளரும்.

இந்த இயக்கத்தை யாராலும் அசைக்கவும் முடியாது ஆட்டவும் முடியாது. அம்மா ஆட்சி சிறப்பாக நடக்கிறது. யார் நினைத்தாலும், மு.க.ஸ்டாலின், தினகரன் நினைத்தாலும் கூட அம்மா அரசைக் கவிழ்க்கவோ, ஆட்சிக்கு ஊறு விளைவிக்கும் செயலிலோ ஈடுபட எந்தவித நடவடிக்கையும் எடுக்க முகாந்திரமும் இல்லை.

ஏனென்றால் அனைத்து எம்.எல்.ஏக்களும் ஒற்றுமையாகச் செயற்பட்டு இந்த 5 ஆண்டு காலம் மட்டுமல்ல எதிர்வரும் காலங்களிலும் இந்த ஆட்சி தொடரும் என்று தெரிவித்துள்ளார். (ப)

## உலகம் முழுவதும் புத்தாண்டில் 4 லட்சம் குழந்தைகள் பிறப்பு

### இந்தியாவுக்கு முதலிடம்




புதுடில்லி,ஜன.04

உலகம் முழுவதும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அன்று 3 லட்சத்து 86 ஆயிரம் குழந்தைகள் பிறந்துள்ளன எனவும் அதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது எனவும் யுனிசெப் அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் 2018 புத்தாண்டு தினமான ஜனவரி முதலாம் திகதி அன்று 3 லட்சத்து 86 ஆயிரம் குழந்தைகள் பிறந்துள்ளன. இதில் பாதி அளவு குழந்தைகள் வளரும் மற்றும் பின் தங்கிய நாடுகளில் பிறந்துள்ளன.

குழந்தைகள் பிறப்பு விகிதத்தில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. புத்தாண்டு தினத்தில் இந்தியாவில் மட்டும் 69 ஆயிரத்து 70 குழந்தைகள் பிறந்தன. உலகிலேயே அதிக சனத்தொகை கொண்ட சீனாவில் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. அங்கு புத்தாண்டு தினத்தில் 44ஆயிரத்து 760 குழந்தைகள் பிறந்தன.

நைஜீரியா 3ஆவது இடத்தில் உள்ளது. அங்கு புத்தாண்டில் 20 ஆயிரத்து 210 குழந்தைகள் பிறந்துள்ளன என்று யுனிசெப் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பு)

## தினகரன் நன்றி அறிவிப்பு: ரூ. 10 ஆயிரம் கிடைக்குமா?

நன்றி தெரிவிக்க தினகரன் வருகின்றமையால் 20 ரூபாய் ரோக்கனுக்கு பணம் கிடைக்கும் என, ஆர்.கே.நகர் தொகுதி மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

சென்னை, ஆர்.கே.நகர் தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில், சுயேச்சையாகப் போட்டியிட்ட தினகரன் வெற்றி பெற்றார். இவர், கடந்த மாதம் 29ஆம் திகதி எம்.எல்.ஏ ஆகப் பொறுப்பேற்றார்.

வாக்காளர்களுக்குத் திறந்த வானில் சென்று நன்றி தெரிவிக்கவுள்ளார். இந்த நிலையில் தினகரன் தரப்பினர், கடைசி நேரத்தில், வாக்குக்காக 20 ரூபாய் ரோக்கன் கொடுத்து, வெற்றி பெற்றதும், 10 ஆயிரம் ரூபாய் தருவோம் என உறுதி அளித்தனர் எனக் குற்றச்சாட்டு எழுந்தது. 20 ரூபாய் பெற்ற மக்கள், எப்போது பணம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## ஆன்மீக அரசியல் தவறாகப் போய் முடியும்


டி.டி.வி. தினகரன்

சென்னை,ஜன.04

நடிகர் ரஜனிகாந்த் தனிக் கட்சி தொடங்கி ஆன்மீக அரசியல் செய்யப்போகிறேன் என அறிவித்துள்ள நிலையில், இது தவறாகப் போய் முடியும் எனத் தினகரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜனிகாந்த் தனிக் கட்சி தொடங்கி ஆன்மீக அரசியல் செய்யப்போகிறேன் எனக் கடந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி அறிவித்தார். தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்த அறிவிப்புத் தொடர்பாகப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்தநிலையில், ஆன்மீக அரசியல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள ஆர்.கே நகர் சட்டமன்ற உறுப்பினர் தினகரன், ஆன்மீக அரசியல் தவறாகப் போய் முடியும் என்று கூறியுள்ளார். கண்மூடித்தனமாக எதையும் எதிர்ப்பது எனது குணம் அல்ல. அவர் அரசியலில் இறங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.

ஆர்.கே நகர் மக்களுக்கு மட்டுமல்ல தமிழக மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் சட்டமன்றத்தில் குரல் கொடுப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரஜனி – கலைஞர் சந்திப்பு

ரஜனிகாந்த் நேற்று முன்தினம் தி.மு.க. தலைவர் கருணாநிதியை சந்தித்துப் பேசினார்.

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வரப் போகிறேன் எனவும் தனிக்கட்சி தொடங்கப் போகிறேன் எனவும் அறிவித்துள்ளார்.

வருகிற சட்டசபைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தப் போகிறேன் எனவும், கூறியுள்ளார்.

இந்த நிலையில் ரஜினிகாந்த் நேற்று முன்தினம் தி.மு.க. தலைவர் கருணாநிதியை சந்தித்துப் பேசினார். அப்போது கருணாநிதியிடம் உடல்நலம் விசாரித்தார் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்தையும் தெரிவித்தார்.

புதுக்கட்சி தொடங்கும் நிலையில் ரஜனி, கருணாநிதியைச் சந்திக்கின்றமை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.



*கால்நடைத் தீவன ஊழல் வழக்கு:*

## லாலு பிரசாத் உள்ளிட்டோருக்கான தண்டனை இன்று அறிவிப்பு!



கால்நடைத் தீவன வழக்கில் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் உள்ளிட்டோருக்கான தண்டனை விவரம் இன்று அறிவிக்கப்பட உள்ளது.

லாலு பிரசாத் உள்ளிட்டோருக்கு நேற்றுத் தண்டனை விவரம் அறிவிக்கப்படும் என எதிர்பார்த்த நிலையில், வழக்கறிஞர் விண்டேஸ்வரி பிரசாத் மரணம் அடைந்தமையால், தண்டனை விவரம் இன்று அறிவிக்கப்படும் என்று ராஞ்சி சி.பி.ஐ. சிறப்பு நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

கால்நடைத் தீவன ஊழல் வழக்கில், பீகார் மாநில முன்னாள் முதல்வரும், ராஷ்ட்ரீய ஜனதா தளம் (ஆர்ஜேடி) கட்சித் தலைவருமான லாலு பிரசாத் உள்ளிட்ட 16 பேர் குற்றவாளிகள் என்று ராஞ்சி சி.பி.ஐ. சிறப்பு நீதி மன்றம் தீர்ப்பளித்திருந்தது.

அவர்களுக்கான தண்டனை விவரம், ஜனவரி மாதம் 3 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது. ஆனால், மூத்த வழக்கறிஞர் ஒருவர் மரணம் அடைந்தமையால் தண்டனை விவரம் இன்று அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## ரஜனியின் காவலனாக அரசியலில் லோரன்ஸ்



சென்னை,ஜன.04

ரஜனிகாந்தின் காவலனாக இன்று 4 ஆம் திகதி தனது பயணத்தைத் தொடங்கவுள்ளேன் என நடன இயக்குநரும் நடிகருமான ராகவா லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

ரஜனி அரசியலுக்கு வருவாரா? மாட்டாரா? என்று பல ஆண்டுகளாக, ரசிகர்கள் பலரும் எதிர்பார்த்து வந்த நிலையில், 2017 ஆம் ஆண்டின் கடைசி நாளில் அதற்கான விடை கிடைத்தது.

ரசிகர்கள் சந்திப்பின் கடைசி நாளின் போது ரசிகர்கள் முன்பு பேசிய ரஜனிகாந்த், நான் அரசியலுக்கு வருகின்றமை உறுதி. விரைவில் தனிக்கட்சி தொடங்குவேன் என்றார். வருகிற சட்டசபைத் தேர்தலில், தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் போட்டியிடுவோம் என்று ரஜனி அறிவித்தார்.

ரஜயின் இந்த அறிவிப்பால் அவரது ரசிகர்கள் மகிழ்ச்சியில் இருக்கின்றனர். சினிமாத் துறையில் அவரது தீவிர ரசிகனாக இருக்கும் நடிகர் ராகவா லோரன்ஸும் ரஜனியின் அரசியல் பிரவேசத்துக்கு வரவேற்பு தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலையில் அரசியலில் ரஜனியின் தீவிரத் தொண்டனாக, ஒரு காவலனாக இருப்பேன் என்று கூறியிருக்கிறார்.எனவே, இன்று 4 ஆம் திகதி லோரன்ஸ் தனது அரசியல் தொடர்பான அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# குற்றவாளிகள் சகலருக்கும் தண்டனை!

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பரிந்துரைக்கின்றது. அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள்**

இலங்கை மத்திய வங்கியில் எதிர்காலத்தில் இவ்வாறான செயல்கள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கும் ஆணைக் குழுவின் தற்கால பரிந்துரைகளைச் செயற்படுத்தக்கூடிய வகையிலும் பழைய சட்ட மூலத்தை இரத்துச்செய்து புதிய நாணயச் சட்ட சட்டமூலத்தை (Monetary Law Act) அறிமுகப் படுத்தவேண்டுமெனவும் பரிந் துரைக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட பங்குப் பத்திரங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களில் மாற்றங்களை ஏற் படுத்தவேண்டும்.

நாணயச் சபை உறுப்பினர் களையும் மத்திய வங்கி ஆளு நரையும் நியமிப்பதற்குச் சட்ட சபையின் ஒப்புதலைப் பெற்று கொள்ளவேண்டும், அதற்கேற்ற வகையில் சட்டதிட்டங்களில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

அரச கடன் திணைக்களத் தின் செயற்பாடுகளைக் கடும் கண்காணிப்புக்குள்கொண்டுவர வேண்டும்.

மத்திய வங்கியின் கணக் காய்வுச் செயற்பாடுகள் உரிய முறையில் நடைபெறாதிருப்ப தால், அதன் கணக்காய்வுப் பிரிவை முற்றிலும் மாற்றிய மைக்கவேண்டும்.

மத்திய வங்கிக்கென பிரத் தியேக சட்டப் பிரிவை ஸ்தாபித்து அதனை வினைத்திறன் மிக்க தாக ஆக்கவேண்டும் எனப் பரிந் துரைக்கப்பட்டுள்ளது.

2008 முதல் 2015 வரையில் இடம்பெற்ற பிணைமுறி வழங் கல்தொடர்பில் ஆராய்வதற்கான உரிமை இவ்வாணைக்குழுவுக் குக் கிடைக்கப்பெறாமையால் அதைப்பற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டு மெனபரிந்துரைக்கப்படுகின்றது.

பான் ஏசியா வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அதன் முன்னாள் தலைவரின் செயற்பாடு ஆகியன ஆராய்ந்து பார்க்கப்படவேண்டுமென பரிந் துரைக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத் தின் செயற்பாடுகளை முறை யான ஆய்வுக்குட்படுத்துவதுடன், இந்நிதியத்தின் செயற்பாடுகளை சரியான வழிக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை களை முன்னெடுத்தல் வேண்டும் என்பதுடன், ஊழியர் சேமலாப நிதியத்தை மீள்கட்டமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மத்திய வங்கி அதிகாரி களுக்கு ஒழுக்கவியல் கோவையை அறிமுகப்படுத்தவேண்டியதுடன், கீழ்நிலை பிணைமுறி கொள் வனவாளர்களுக்கான ஒழுக்க வியல் கோவையை செப்பனிட வேண்டும்.

சட்டமா அதிபர் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகியன இவ்வறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்து வதற்கு தேவையானநடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாகக் குறிப்பிட்ட பணத்தை மீளப்பெறுதல் வழமை யான சட்டத்தின்கீழே செயற் படுத்தப்படுகின்றது. ஆயினும் அதிக காலம் எடுப்பதால் அதற்கு மாற்றுவழியாக இந்தப்பணத்தை மீளப்பெறுவதற்கு நாடாளு மன்றத்தில் சட்டமூலமொன்று நிறைவேற்றவேண்டும். அதற் கான நாடாளுமன்ற அங்கீகா ரத்தைப் பெற்று துரிதமாக பணத்தைமீளப்பெற்றுக்கொள்ள முடியுமென இவ்வாணைக்குழு பரிந்துரைக்கிறது.

நாம் இதனுடன் உடன்படுகி றோம்.

ஆணைக்குழுவை முன்னெ டுத்துச்செல்வதற்கானஅனைத்து செலவினங்களையும் பெர் பெச்சுவல் நிறுவனத்திடமிருந்து அறவிடப்படவேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைக்கின் றது.

ஏற்கனவே நான் இவ்வறிக் கையின் ஒரு பிரதியைச் சட்டமா அதிபரிடம் கையளித்திருக் கின்றேன். சட்டரீதியாக செயற்பட வேண்டியவர்களை இனங்கண்டு இது தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைக் குற்றவியல் அல்லது சிவில் சட்ட நடைமுறை யின்கீழ் அவர் முன்னெடுப்பார்.

ஆணைக்குழுவின் பரிந்து ரைகளுக்கமைய வழக்குத் தொடுப்பதற்கு இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் சட்டமூலத்தில் ஏற்படுத்தவேண் டிய ஒரு சிறிய மாற்றத்தைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதுதொடர்பில் ஏற்கனவே சட்ட மூலங்களைத் தயாரித்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதி காரிகள் அதற்கான நடவடிக் கைகளை முன்னெடுத்து வருகிறார்கள். அவற்றை துரித மாக மேற்கொள்வதற்குத் தேவை யான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என் பதை இங்கு குறிப்பிட விரும்புகி றேன்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவைப் பலப்படுத்தி அதன் செயற்பாடுகளை விரிவு படுத்துவதற்கான நடவடிக்கை களை நீண்டகாலத்திற்கு முன்பே எடுக்கவேண்டியிருந்தபோதிலும் தற்போதே அதற்கான நடவ டிக்கைகள் எம்மால் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியின் இரகசியத் தன்மை செயற்பாட்டு முறைமை, கணக்காய்வு முறைமை ஆகியன மிகவும் பலவீனமாக இருந்து வந்திருக் கின்றது. தொலைபேசி உரை யாடல் பதிவுமுறை, கண்காணிப்பு கமரா முறைமை ஆகியன எதுவுமே மத்திய வங்கியினுள் இருந்திருக்கவில்லை. அக் குறைபாடுகளை நிவர்த்திசெய்வ தற்கு தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் தேவையான நடவடிக் கைகளைமேற்கொண்டிருக்கிறார்.

இந்த ஆணைக்குழு விசார ணைகளின் மூலம் வெளிப்படுத் தப்பட்ட மத்திய வங்கியின் ஊழியர்கள் சிலருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத் திய வங்கி ஆளுநர் தெரிவித்தி ருக்கிறார்.

ஆணைக்குழுவின் தீர் மானங்களுக்கும் பரிந்துரை களுக்கும் அமைய இலங்கை மத்திய வங்கியினுள் ஏற்படுத்த வேண்டியிருக்கின்ற மாற்றங் கள்பற்றி எதிர்வரும் தினங்களில் மத்திய வங்கி ஆளுநர் விசேட அறிக்கையை வெளியிடுவா ரென நான் எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறான முறைகேடுகள், ஊழல்கள் ஆகியன எதிர்காலத் தில் மத்திய வங்கியினுள் இடம் பெறுவதைத் தவிர்ப்பதற்கு ஆணைக்குழுவால் முன் மொழியப்பட்டுள்ள மூன்று சட்ட வாக்கங்களை விரைவாகத் தயாரித்து அவற்றை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்க நடவ டிக்கை எடுக்குமாறு சட்டமா அதி பரையும் நீதியமைச்சரையும் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பிட்ட நபர்களுக்கு எதி ராக வழக்கு தொடுத்தல் மற்றும் ஆணைக்குழுவின் அனைத்து பரிந்துரைகளையும் தாமதமின்றி விரைவாக செயற்படுத்துவதற்கு குறிப்பிட்ட துறைகளின் சம் பந்தப்பட்ட அதிகாரிகள் மேற் கொள்ளும் நடவடிக்கைகளின் முன்னேற்றம்பற்றி மாதாந்தம் கூடி ஆராய்ந்துபார்க்கும் பொறுப்பை எனது செயலாளரி டம் ஒப்படைத்திருக்கிறேன் என் பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற நட்டமான 11,145 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை மீள் அறவீடு செய்வதற்குத் தேவையான நடவ டிக்கைகளை மேற்கொள்வதற் கும் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனைகளை வழங்குவதற் கும் எந்தவிதத்திலும் நான் பின்வாங்கமாட்டேன் என்றும் இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தின் மொத்த தொகையான 11,145 மில்லியன் ரூபாவில் ஊழியர் சேமலாப நிதி, மஹாபொல புலமைப்பரிசில் நிதி, தேசிய சேமிப்புவங்கியின்நிதி, இலங்கை காப்புறுதி நிறுவன காப்புறுதி கூட்டுத்தாபன நிதியம் ஆகிய வற்றின் தொகை 8,529 மில் லியன் ரூபாவாகும். அதாவது, 8.5 பில்லியன் ரூபாவுக்கும் அதி கமான நிதி மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் நிதி என்றும் எஞ்சிய தொகை தனியார் துறை யினருக்குச் சொந்தமானது என் றும் ஆணைக்குழு அறியத் தந் திருக்கின்றது.

பெர்பெச்சுவல் நிறுவனம் பெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தப் பெருந்தொகை வரு மானமான 11,145 மில்லியன் ரூபாவை ஐந்து மாதங்களுக் குள்ளேயே ஈட்டியிருக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதியாக இங்கு குறிப்பிட வேண்டியது யாதெனில், இவ் வறிக்கைகளை நாடாளுமன் றத்தில் சமர்ப்பித்து மக்களுக்கு வெளிப்படையானஅறிக்கையாக முன்வைப்பதற்கும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உரிய முறையில் துரிதமாக முன்னெடுப்பதற்கும் சட்டமா அதி பரின் ஆலோசனைகளுக் கமைய தேவையான நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கையில் அந்த வழக்குகளுக்குப் பாதகத் தன்மையை ஏற்படுத்தாத வகை யில் இந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் தகவல்களின் வெளிப்படைத்தன்மை பற்றியும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

அத்தோடு, இந்த ஆணைக் குழுவுடன் தொடர்புபடாத, என் னால் இதற்குமுன் நியமிக்கப்பட்ட இன்னுமொரு ஆணைக்குழு வின் அறிக்கையும் என்னிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

பாரிய ஊழல் மோசடிகள் மற் றும் அரசவள துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரணை செய்வ தற்காக நியமிக்கப்பட்ட ஜனாதி பதிஆணைக்குழுவேஅதுவாகும்.

இந்த ஆணைக்குழு கடந்த இரண்டரை வருடங்களாக பணி யாற்றியிருக்கின்றது. இந்த ஆணைக்குழுவின் அங்கத் தவர்களாக இருந்த மேல்நீதி மன்ற நீதிவான்கள் உள்ளிட்ட செயலாளர், பணிக்குழாமின் அங்கத்தவர்கள், அந்த நடவ டிக்கையின்போது ஒத்துழைப்பு வழங்கிய நிறுவனங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

இந்த ஆணைக்குழுவின் 34 விசாரணை அறிக்கைகள் என்னிடம் கையளிக்கப் பட்டிருக் கின்றன. அதில் 17 அறிக்கைகள் ஏற்கனவே என்னிடம் கையளிக் கப்பட்டிருப்பதுடன், அவற்றைச் சட்டமா அதிபரிடம் மேலதிக நடவ டிக்கைகளுக்காக கையளித்தி ருக்கின்றேன். அவை மீதான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு, பொலிஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் ஏற் கனவே வழக்குகளைத் தொடுத் திருக்கின்றன. அதேபோல் இரண்டு தினங்களுக்கு முன் என்னிடம் கையளிக்கப்பட்ட எஞ்சிய 17 அறிக்கைகளையும் இந்த வாரத்துக்குள் நான் சட்டமா அதிபரிடம் கையளிப்பேன் என்பதையும் கூறிக்கொள்கி றேன். அவைபற்றிய விசார ணைகளும்முன்னெடுக்கப்படும்.

பாரிய ஊழல் மோசடிகள் மற் றும் அரசவள துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரணை செய்வ தற்கு நியமிக்கப்பட்ட ஆணைக் குழு முன்வைத்த அறிக்கை தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

பாரிய ஊழல் மோசடிகள் மற் றும் அரச வள துஷ்பிரயோகம் பற்றிய விசாரணை நடத்துவதற் கான ஆற்றலையும் அறிவையும் அனுபவங்களையும் கொண்ட உத்தியோகத்தர்களின் பாரிய தட்டுப்பாடு நிலவுவதால் அந்த நடவடிக்கைகளை மேற்கொள் ளத்தக்க தகுதிவாய்ந்தவர்களை அந்தந்த நிறுவனங்களுக்கு நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்படவிருக்கின்றன என்பதை யும் தெரிவித்துக்கொள்கிறேன். நமது நாட்டில் அந்தப் பயிற்சி பெற்ற தகுதிவாய்ந்த அதிகாரி களின் பற்றாக்குறை இருப்ப தனால், அந்த உத்தியோகத் தர்களுக்குப் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்து அதற்கான தகுதிவாய்ந்த அதிகாரிகளை நியமிக்கவேண்டியிருக்கின்றது.

திணைக்களங்கள், அதி காரசபைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் முக்கிய பதவி களுக்கான நியமனங்களின் போது அதற்கான தகுதி பெற்ற வர்கள் நியமிக்கப்பட்டிருக் கவில்லை என்றும் அவ்வாறான உயர் பதவிகளுக்கு நியமிக்கப் படுபவர்கள் உரிய தகைமை களை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதை திட்டவட்ட மாக இவ்வாணைக்குழு எடுத் துரைத்திருக்கின்றது.

பாரிய ஊழல் மோசடிகள் மற் றும் அரச வள துஷ்பிரயோகம் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவை கொண்டு நடத்துவதற்காக அரசு இதுவரை மேற்கொண்ட செலவினத்தை விட அதிகமான இலாபத்தை அரசுக்குப் பெற்றுக்கொடுத்தி ருப்பதாக இவ்வாணைக்குழு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலஞ்சம் தொடர்பான வழக் குகளை கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட நீதிமன்றங் களில் முறையீடு செய்வதன் மூலம் உரிய பலன் கிடைக்க வில்லை, சாட்சியாளர்கள் தூரப் பிரதேசங்களிலிருந்துவரவேண்டி யிருப்பதே அதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது. இதனால் இக்குறையை நிவர்த்தி செய்துகொள்வதற்கு குறைந்த பட்சம் மாகாண ரீதியில் இவ் வாறானநீதிமன்றங்களைசெயற் படுத்தவேண்டுமென இந்த ஆணைக்குழு பரிந்துரைத்தி ருக்கின்றது.

இந்த இரண்டு ஆணைக் குழுக்களின் விசாரணை அறிக் கைகளைப் பற்றிய எனது அறிவித்தலை நிறைவுசெய்து கொள்வதற்குமுன், இன்னு மொரு விடயத்தையும் குறிப் பிட வேண்டும். இந்த ஆணைக் குழுக்களை நியமிப்பது தொடர் பிலும் அதன் செயற்பாடுகள் தொடர்பிலும் பொதுமக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் இருந் ததுடன், இதன் செயற்பாடு களைப்பற்றி அறிந்துகொள்வ தற்கான ஆவலை இச்சமூகம் வெளிப்படுத்தியிருந்தது. இந்த ஆணைக்குழுக்களை நியமிப் பதற்கு முன்பாக குறிப்பாக, இலங்கை மத்திய வங்கி பிணை முறி விசாரணை ஆணைக் குழுவை நியமிக்கும்போது இந்த ஆணைக்குழுவுக்கும் இதற்கு முன் இவ்வாறு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களுக்கும்நேர்ந்த கதியே நேருமென சிலர் கூறி னார்கள். அத்தோடு, காலத்தை கடத்துவதற்காகவே இவ்வாறு ஆணைக்குழுக்கள் நியமிக் கப்படுவதாகவும் இன்னும்சிலர் கருத்துத் தெரிவித்தார்கள். இவ்வாறான கருத்துகள் நாடா ளுமன்றத்திலும் ஊடகங்களி லும் வெளியிடப்பட்டன. இருப் பினும், இந்த ஆணைக்குழுக் களின் செயற்பாடுகளைப்பற்றி நாம் மனமகிழ்ச்சியடையவேண் டும். அதனால் ஆணைக்குழு வின் தலைவர் உள்ளிட்ட அனைத்து அங்கத்தவர்களுக் கும் அதற்கு பங்களிப்புசெய்த அனைவருக்கும் எனது நன்றி யைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தோடு, இந்த ஆணைக் குழுக்களை நியமித்ததைப் பற்றி சில தரப்பினர்கள் வெளியிட்ட விமர்சனங்களைப் பற்றியும் நான் குறிப்பிடவேண்டும். இந்த ஆணைக்குழுக்கள் எந்தவொரு அரசியல் கட்சியையும் குறி வைத்து முன்னெடுக்கப்பட வில்லை. அத்துடன், இந்த இரண்டு ஆணைக்குழுக்களி னதும் அறிக்கைகளின் அடிப் படையில் அதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்படும்போதும், சட்டநடவடிக்கைகளின்போதும், வழக்கு தொடுக்கப்படும்போதும் இரண்டு பிரதான கட்சிகளினதும் உறுப்பினர்கள் இவற்றிற்கு முகம்கொடுக்கவேண்டிய குற்றம் சுமத்தப்பட்டவர்களாக இருக்கின் றார்கள் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். அதனால் எந்தவொரு கட்சியையும் இலக் காகக்கொண்டு இந்த நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்பட வில்லை; முன்னெடுக்கப்படாது என்பதை தெரிவித்துக்கொள்ள வேண்டும். அதேபோன்று இந்த ஆணைக்குழுவின் பரிந்துரை களை சிறந்த முறையில் நிறை வேற்றுவதற்கு அனைத்து ஒத்து ழைப்புகளும் பெற்றுக்கொடுக் கப்படும் என்பதையும் தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன். – என்றார்.

(ஐ)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகள்மூலம்பூரணகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுமக்கள்வீண்அச்சம் கொள்ள தேவையில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சமுதாய வைத்தியநிபுணர்மருத்துவர்ஆர்.கேசவன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக் காலமாக காய்ச்சலால் இறப்புக்கள் ஏற்பட்டன. இதுதொடர்பில்வடக்குமாகாண சமுதாய வைத்திய நிபுணர் ஆர். கேசவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு நேற்று நேரில்சென்றுஅங்குநிலைமைகளைப் பார்வையிட்டார்

இதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக் காலமாக 10 இறப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இது பற்றி மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டிய கடப்பாடு உள்ளது.

இந்த இறப்புக்கள் அனைத்துக்கும் காரணம் இன்புளுவன்ஸா 'பி' என்றவைரஸ். இந்த வைரஸ் சாதாரணமாகக் காய்ச்சலை தோற்றிவிக்கும் வைரஸாகக் காணப்படுகின்றது. இது பயங்கரமான வைரஸ் அல்ல. ஆனால்வேறு வருத்தம் உள்ள நோயாளிகள், வயது போனவர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகளை இந்த வைரஸ் தாக்கும் போதுசிலவேளைகளில்கடுமையான நோயை உண்டுபண்ணும். நுரையீரல்அழற்சி, காய்ச்சலைத் தொடர்ந்து மரணம் சம்பவிக்க இடமுள்ளது. ஆனால் சாதாரணமாக இந்த வைரஸ் தொற்றுபவர்களுக்குத் தடிமன் காய்ச்சலாகவந்துபோய்விடும். ஆகவே மக்கள இதைப் பற்றிப் பீதியடையத் தேவையில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 மரணங்களுக்குப் பிறகு முல்லைத்தீவு மருத்துவமனை மற்றும் வடக்கு மாகாண மருத்துவ நிர்வாகம் இணைந்து தகுந்த நடவடிக்கை மேற்கொண்டதன் பயனாக இந்தக் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

இதன் பின்னரும் நிறைய நோயாளர்கள் மருத்துவமனைக்கு வந்துள்ளார்கள். ஆனால் அனைவரும் குணம் அடைந்து வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். தற்போது முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில்10நோயாளிகள்வரை தங்கிச்சிகிச்சைபெற்றுவருகின்றார்கள். இவர்களும் தகுந்த முறையில்சிகிச்சையளிக்கப்பட்டுக்குணமடைந்துகொண்டிருக்கின்றார்கள்.

இப்போது இந்த நோய் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மக்கள் பீதியடையவேண்டிய அவசியம் இல்லை.

இதனைவிட, அண்மையாக யாழ்ப்பாணத்தில் சில மரணங்கள் மர்மமான முறையில் நடந்துள்ளன என்று சில செய்திகள் வெளிவந்தன. இது தொடர்பில் வடக்குமாகாணசபைசுகாதாரப் பிரிவினர்முழுமையானஆய்வை மேற்கொண்டுள்ளார்கள்.

யாழ் நகரில் உள்ள ஒரு சிற்றங்காடியில் 280 கடைகள் உள்ள பகுதியில் இரண்டு மாத இடைவெளியில் 6 மரணங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் இரண்டு மரணங்கள் மாரடைப்பினாலும், இரண்டுமரணங்கள் புற்றுநோய், சிறுநீரக நோயினாலும், ஒருவர்தற்கொலைசெய்தும், ஒருவர் வயது முதிர்ந்தும் இறந்துள்ளார்கள். இவர்களுக்கிடையில்எந்ததொடர்பும்இல்லை. ஒரே குடும்பமும் இல்லை. ஒரு தொற்று நோயும் இல்லை. இது சாதாரணமாக சமுதாயத்தில் நாங்கள் எதிர்பார்க்கக்கூடிய மரணங்கள். இவை ஓர் அதிகப்படியான மரணங்களோ அசாதாரண மரணங்களோ அல்ல. எனவே இதைப்பற்றிமக்கள்பீதி கொள்ளத் தேவையில்லை – என்றார். (ஐ-81)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் சிங்களவர்களை ஏமாற்றுவதாகவும், தமிழ் மொழியில் தமிழர்களை ஏமாற்றுவதாகவும், இரண்டு மொழிகளிலும் முஸ்லிம்களை ஏமாற்றுவதாகவும் இடைக்கால அறிக்கை அமைந்துள்ளது.

இவ்வாறு கைத்தொழில் மற்றும்வாணிப அமைச்சர்ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிசாத் பதியுதீன், தனது கட்சி சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை அறிமுகப்படுத்தும் நிகழ்வுக்காக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

இந்த நிகழ்வின் இறுதியில் ஊடகவியலாளரிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

எந்தவொரு தீர்வாக இருந்தாலும் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும். குருட்டுத்தனமாகவும்இருட்டுத்தனமாகவும்அமையக்கூடாது. நாடாளுமன்றத்தில் அண்மையில் சில தீர்மானங்கள்இரவோடுஇரவாகநிறைவேற்றப்பட்டன. அவை போன்று ஓர் தீர்வுத்திட்டத்தைக்கொண்டுவர முடியாது. இந்தநாட்டுமக்களின் ஆணையைப் பெறுவதற்கு பொதுவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

இந்தத் தீர்வுத் திட்டத்தில் நிறைய ஒழிவு மறைவுகள் உள்ளன. குறிப்பாகத்தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் என மூவின மக்களையும் சந்தேகம் கொள்வைக்கும் வகையில் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை அமைந்துள்ளது.

எனவே எல்லா இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும். எந்தவொரு இனமும் ஏனைய இனங்களால் அடக்கப்படாமல் – ஒடுக்கப்படாமல்தனமானத்துடன் வாழுகின்ற நிலையை உறுதிப்படுத்தும்தீர்வாக அது அமையவேண்டும்.

அரசியல் தீர்வைக் கேட்டு நிற்கின்ற அல்லது அரசியல் தீர்வைப்பெற்றுத்தருவோம்என்று மக்களிடம்ஆணையைப்பெற்று கடந்த உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைஆட்சியைக்கைப் பற்றியவர்கள் – அதேபோன்று கடந்தகால எல்லாத் தேர்தல்களிலும் மக்களிடம் ஆணையைத்தமிழ்தேசியக்கூட்டமைப்பினரே பெற்றனர்.

அவர்கள் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இறுதிவடிவம் காண முன்னர், வடக்கு – கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம் சமூகத்துக்கு உள்ள சந்தேகங்களைக்களையவேண்டும். முஸ்லிம் மக்களின் விருப்புக்களை அறிந்து இணக்கப்பாட்டுடன் செயற்படுகின்றபோது மாத்திரம் தான் அரசியல் தீர்வு வெற்றி பெறமுடியும்.

அரசிடம் தீர்வைக் கேட்டு நிற்கும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, ஆயுதம் ஏந்தாமல் பல அழிவுகளைச் சந்தித்திருக்கும் முஸ்லிம் இனத்தின் பிரதிநிதிகளுடனும்நியாயபூர்வமான விட்டுக்கொடுப்புகளுடன் பேசியிருக்க வேண்டும். இதுவரை அவ்வாறானதொரு பேச்சு முன்னெடுக்கப்படவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பேச்சுக்கு வருமாறு நாம் பகிரங்க அழைப்பை விடுத்திருந்தபோதும் அது நடக்கவில்லை.

அண்மையில்மாகாணசபைத் தேர்தல் திருத்தம் நாடாளுமன்றுக்குவந்தபோது, சிறுபான்மை மக்களை அது பாதிக்கும் என நாம் கடுமையாக எதிர்த்தோம். எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிறுபான்மையினரின் குரலைக் கேளாது, அதனை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தனர்.

கடந்த 70 ஆண்டுகளாக தீர்வைப்பெற்றுத்தருவோம்என்று கூறியே தமிழ் தலைவர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் மக்களிடம்ஆணையைப்பெறுகின்றனர். இவ்வாறானவர்கள்மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களைப் பாதிக்கும் தேர்தல் முறை மாற்றத்துக்கு எதிராகக் குரல் எழுப்பவில்லை.

இவ்வாறான சின்னச் சின்ன விடயங்களுக்கே உதவி செய்யாதவர்கள், தமிழ் மக்களின் நிரந்தரத் தீர்வைப் பெறும் விடயத்தில்எவ்வாறுஉண்மைத் தன்மையுடன் செயற்படுவார்கள் என்ற கேள்வியை எழுப்புகிறது – என்றார். (ஐ-7)

## 2020 ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீடிக்கும் என்று அரசு நேற்று அறிவித்துள்ளது.

இவ்விருகட்சிகளுக்கும்இடையில்ஏற்படுத்தப்பட்டகூட்டுஅரசு ஒப்பந்தம் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துள்ளநிலையில்இந்தஅறிவிப்பு நேற்று வெளியாகியது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியாளர்சந்திப்புகொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் நடைபெற்றது.

இதில்கலந்துகொண்டஅமைச்சரவை இணைப் பேச்சாளர் தயாசிறி ஜயசேகரவிடம், கூட்டு அரசின் எதிர்காலப் பயணம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தேசிய அரசு உருவாகுமா அல்லது கலையுமா என்பது குறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. தற்போது தேர்தல் காலம், தேர்தல் காலத்தில் பிரதான இரண்டு கட்சிகளும் தனித்துத் தேர்தலில் வெற்றி பெறும் நோக்கத்தில் கருத்துக்களை முன்வைக்க முடியும்.

கடந்த 2015ஆம் ஆண்டு அடுத்த 5 ஆண்டுகளுக்கான தேசிய அரசே உருவாக்கப்பட்டது. கடந்தபொதுத்தேர்தலின் பின்னர் தேசிய அரசு அமையப்பெற்ற நிலையில் ஜனாதிபதியும், பிரதமரும் ஒரே வாக்குறுதியைக்கொடுத்தனர். அதாவது 2020ஆம் ஆண்டுவரை தேசிய அரசை முன்னெடுத்துச் செல்வதாக அவர்கள் கூறினர். ஆகவேஅதற்கமைய2020ஆம் ஆண்டு வரை தேசிய அரசு முன்னெடுக்கப்படும். அதன்பின்னர் தேர்தலின்போது நாங்கள் அடுத்தகட்டநகர்வுகள்குறித்துச் சிந்திக்க முடியும் – என்றார். (ஐ)

## சபையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும், முன்னாள்ஜனாதிபதி மஹிந்தஆதரவுநாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன மஹிந்த அணி சார்பில் நாடாளுமன்றத்தைஅவசரமாக கூட்டுமாறு சபாநாயகரிடம் விடுத்த கோரிக்கை தொடர்பாக நேற்றுச் சபாநாயகர் அலுவலகம் வெளியிட்ட தகவலிலேயே மேற்கண்டவிடயம்குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் பொருளாதார நிலைமைகள், சமகால அரசியல்பிரச்சினைகள், நடப்புகள்சார்ந்தவிடயங்களைஆலோசிக்கவே குறித்த கோரிக்கை தினேஷ் குணவர்தன மூலமாக விடுக்கப்பட்டது.

அதன்படிமஹிந்தஅணியின் கோரிக்கை தொடர்பான தற்போது அவதானம்செலுத்தப்பட்டுள்ளதுஎனவும்சபாநாயகர்அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைஎடுக்கப்படும்என்று விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச் சரவை இணைப் பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கூட்டு எதிரணியினர் தேர்தல் பிரசாரங்களின் போது முன்னாள் அமைச்சரான ஜி.எல். பீரிஸின்புகைப்படத்தைப்பயன்படுத்தாமல் இருப்பது தனக்குக் கவலையளிக்கிறது என்றும் அவர் கிண்டலடித்தார்.

இந்த வருடத்துக்கான முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது, கூட்டு எதிரணியினர்முன்னாள்ஜனாதிபதியின் புகைப்படத்தைப் பயன்படுத்துவது குறித்து ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப்பதிலளிக்கும்போதே அமைச்சர் தயாசிறி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

அதாவது, அந்தக்கட்சிக்காரர்கள் (ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன) கட்சித்தலைவரானஜி.எல். பீரிஸின் புகைப்படத்தைப் பிரசாரநடவடிக்கைகளின்போது பயன்படுத்தாமல் இருப்பது உண்மையில் எமக்கு கவலையளிக்கிறது. கட்சியின்தலைவர் என்னும் ரீதியில் அவருடைய படத்தையேபயன்படுத்தவேண்டும்.

ஆனால், அவர்களோமஹிந்தவின் படத்தை வாடகைக்கு எடுத்து தற்போது பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். முன்னாள்ஜனாதிபதிமஹிந்ததனித்துச் செயற்பட்டாலும், சுதந்திரக் கட்சியின்ஆலோசகர்களில்ஒருவராகவே தொடர்ந்தும் கருதப்படுகிறார்.

எமதுகட்சிசார்முன்னாள்ஜனாதிபதிகளின்வரிசையில்அவரும் உள்ளமையால்தான் நாம் அவரதுபுகைப்படத்தையும்இதுவரைபயன்படுத்திவருகிறோம். இந்நிலையில், இதனை அவர் ஏற்றுக்கொள்ளாவிடின் கடிதம் ஊடாகஎமக்குத்தெரியப்படுத்த முடியும். நாமும் அவரது கருத்துக்கு மதிப்பளித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கத்தயாராகவே இருக்கிறோம் – என்றார். (ஐ)

## கூட்டணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிடும்தமிழ்த்தேசியவிடுதலைக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம்நேற்றுக்காலைநல்லூரில்வெளியிட்டுவைக்கப்பட்டது. இதன்போது வேட்பாளர் அறிமுக நிகவும் இடம்பெற்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ்பிறேமச்சந்திரன்தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைக்கத்தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பெற்றுக் கொண்டார்.

இதன் பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணியின்யாழ்.மாவட்ட வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எவ்), ஈரோஸ், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கட்சி, ஜனநாயக தமிழரசுக் கட்சி மற்றும்பொதுஅமைப்புக்களையும் இணைத்து தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில்தேர்தல்கூட்டாக ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கூட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றது.

இந்தநிகழ்வில்நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்திஆனந்தன், வடக்குமாகாணக்கல்விஅமைச்சர் சர்வேஸ்வரன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்னேஸ்வரன்.

இருவரும் ஒரே விடயத்துக்கு – பதில் கூறும் சமய சந்தர்ப்பம் வந்திருக்கின் றமை அபூர்வமானவிவகாரம். கட்சித்தலைமை பற்றிய கருத்து ரைதான் அது.

*"(உங்களுக்குப் பின்னர்) தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமை குறித்து நீங்கள் சிந்தித்தமை உண்டா?"* – என்று சம்பந்தனிடம் 'த ஹிண்டு' செய்தியாளர் கேட்டார்.

*"உண்மையில் நான் அது குறித்து எந்தத் திட்டமிடலையும் செய்யவில்லை. அல்லது (இவ் விடயத்தில்) எவரின் மீதோ அல்லது எத்தகைய நடவடிக்கைத் திட்டத்தின் மீதோ நான் சிரத்தை வைக்கவும் இல்லை. ஒரு கால நகர்வில் அது செய்தாகப்பட வேண்டும் – அதுவும் இயன்ற விரைவில். இப்படியே விடயங்கள் நகரும்போது என்ன நடக்கின்றது என்று பார்ப்போம். நான்எப்போதுமே(தலைவராக) இருக்க முடியாது. (என்னிடமிருந்து) பொறுப்பேற்க எமக்கு ஒருவர் அவசியம். அது (அப்படி ஒருவரைத் தேர்வு செய்வது) இலகுவான விடயம் அல்ல. (அவ்விடயத்தில்) நாம் எச்சரிக்கையாக நகர வேண்டும்; பொறுமை பேண வேண்டும். அதற்காக எல்லோரையும்திருப்திப்படுத்தவும் முயலக்கூடாது. (அப்படித் திருப்திப்படுத்துவது) சாத்தியமும் அற்றது"* – என்று பதிலளித்தார் சம்பந்தன்.

அடுத்த தலைவரைத் தயார் படுத்துவதில் சம்பந்தன் இன்னும் சிரத்தை கொள்ளவில்லை என்பதுதான் இப்பதிவின் கருத்து.

ஆனால், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் சபைத் தலைமை வேட்பாளரை தேர்தலுக்கு முன்னர் அறிவிப்பதில்லை என்பதுதான் சம்பந்தனின் முடிவு; தீர்மானம்; வழிகாட்டல். ஆனால்அதைஎல்லாம் மீறி, யாழ் மாநகரசபைக்கான முதல்வர் வேட்பாளர் முற்கூட்டியேஅறிவிக்கப்படவில்லையா? அதுபோல, சம்பந்தனையும் மீறிசம்பந்தன்இருக்கும்போதே அவருக்கு அடுத்த தலைவர் அறிவிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதேசமயம்இவ்விடயத்தை ஒட்டி முதல்வர் விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள கருத்தும் கவனிக்கத்தக்கது.

*"தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி தம்பி மாவைக்குச் சென்றடைந்ததே எனது மனமாற்றத்திற்குக் காரணம் என்கின்றார். (துரைராஜசிங்கம்) கட்சிஅரசியலின்வெறுப்புமிக்க செயற்பாடுகளைக் கண்டு வந்தவன்நான். அரசியலுக்குப்புதியவன். ஏற்கனவே நல்ல பதவிகளை வகித்திருந்தவன். கேவலம் ஒரு கட்சியின் தலைமைத்துவத்திற்காகக் கனாக் காண நான், என் சில மாணவர்கள் போன்றவனா?*

*"மாண்புமிகு முதலமைச்சர் பதவியில் இருந்து கொண்டு கட்சித் தலைவர் பதவியைப் பெற ஆசைப்பட்டதாகக் கூறுவது நண்பரினதும் நண்பருக்கு இந்தக் கடிதத்தை வெளியிடுமாறு பணித்தவருக்கும் இருக்கும் பதவி மோகத்தையே எடுத்துக் காட்டுகின்றது. தாம் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று கனாக் காணும் பதவி மேல்எனக்கு மோகம் இருந்தது என்று கூறுவது அவர்களின் வங்குரோத்து அரசியலையே வெளிக்காட்டுகின்றது. அவர்களுக்காக நான் அனுதாபப் படுகின்றேன்."*

முதலமைச்சர் விக்னேஸ்வரன் இப்படி யாரைக் குறிப்பிட்டு கின்றார், சம்பந்தன் யாரைக் குறிப்பிடாமல் தவிர்க்கின்றார் என்பவற்றை வாசகர்களின் ஊகத்துக்கே விட்டு விடுகிறேன்.

**- மின்னல்.**

# முல்லைத்தீவு மாவட்ட மீனவர் பிரச்சினைக்கு இதுவரை சரியான முடிவுகள் எட்டப்படவில்லை!

முல்லைத்தீவு,ஜன.04

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பல ஆண்டுகளாக இரு அரசுகளும் பேசிக்கொண்டிருக்கின்ற போதிலும் இதுவரை சரியான தீர்வுகள் எவையும் எட்டப்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், எங்களை ஏமாற்றுவதற்காக முன்னெடுக்கும் ஒரு நாடகமாகவே இது காணப்படுகின்றது என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் தொடக்கம் பேய்ப்பாறைப்பிட்டி வரைக்குமான சுமார் 73 கிலோமீற்றர் நீளமான கரையோரப் பகுதிகளில் வாழும் 5,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு கடற்றொழில் வாழ்வாதாரமாக காணப்படுகிறது.

இருப்பினும், கடற்றொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை சுதந்திரமாக செய்ய முடியாதுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்ட யுத்தம், 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம், 2009ஆம் ஆண்டு ஏற்பட்ட இறுதியுத்தம் என்பன எங்களது தொழில் நடவடிக்கைகளை முழுமையாகப் பாதித்தன.

கடந்த 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் சுதந்திரமாக தொழில் செய்யும் உரிமை கிடைக்கும் என நம்பியபோதும், எந்தவித பலனும் கிடைக்கவில்லை என



குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மீனவ சங்க பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்–

கடந்த 2012 ஆம் ஆண்டில் வெளி மாவட்ட மீனவர்களின் வருகை 32 ஆகக் காணப்பட்டது. இதன் பின்னர் கடந்த 2017ஆம் ஆண்டில் 377ஆக அதிகரித்துள்ளது.

குறிப்பாக, வெளிமாவட்ட மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்வதற்கான அனுமதிகளை மத்திய கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் வழங்கியுள்ளது.

இந்த ஆண்டில் இதற்கான அனுமதிகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், உழவு இயந்திரத்தின் மூலம் கரை வலை இழுத்தல் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் என்பன தடுக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ள இந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய எல்லைதாண்டிய மீன்பிடியால் தங்களது தொழில் வளம் பாதிக்கப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்திய இழுவைப்படகுகள் தொடர்பில் கடந்த பல ஆண்டுகளாக இரு நாட்டு அரசுகளும் பேசிவருகின்றன எனக் கூறுகின்றபோதும், எந்தவிதமான தீர்வையும் பெற்றுத் தரவில்லை என குறிப்பிடுகின்றனர்.

மேலும், இது எங்களை ஏமாற்றும் ஒரு செயலாகவே அமைந்துள்ளது என மீனவ சங்கப் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# காட்டு யானைகளால் கிராம மக்கள் அச்சம்!

மட்டக்களப்பு, ஜன. 04

மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நெடியமடு, உன்னிச்சைக் கிராமங்களுக்குள் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரை காட்டு யானைகள் நடமாடித் திரிந்ததால் கிராம மக்கள் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

கற்பானை, மதுரங்கண்டடிச் சேனை, நெடியமடு களிக்குளம் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 210 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

காட்டு யானைகள் குட்டிகளோடு வருகின்றமையால் தாய் யானைகள் மிகவும் மூர்க்கத்துடன் காணப்படுகின்றன என்றும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் சில நாள்களாக காட்டு யானைகளின் ஊடுருவலால் ஏற்பட்டுள்ள உயிராபத்துக் குறித்து கிராம மக்கள்கருத்துத்தெரிவித்தனர்.

உன்னிச்சை தொடக்கம் கற்பானை வரையான நீண்ட வனப் பிரதேசங்களில் இருந்து மக்கள் வாழும் விவசாயக் குடி நிலப் பகுதிகளுக்குள் காட்டு யானைகள் நுழைவதைத் தடுப்பதற்காக காட்டோரங்களில் மின்சார அதிர்ச்சித்



தடுப்பு வேலிக்கான மின்சாரத்தை வழங்கும் செயலூக்கியைசமூக விரோதிகள் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர்திருடிச் சென்று விட்டனர்.

இதனால், யானைகள் மின்சார அதிர்ச்சி வேலிகளை ஏறி மிதித்துக் கொண்டு கிராமங்களுக்குள்நுழைய ஆரம்பித்து விட்டன.

திருடப்பட்ட மின்சாரத்தை வழங்கும் செயலூக்கியை மீண்டும்அதிகாரிகள்பொருத்தவில்லை என்றும் கிராம மக்கள்கவலைதெரிவிக்கின்றனர்.

இது பெரும்போக நெற்செய்கை மற்றும் சேனைப் பயிர்ச் செய்கைக் காலம் என்பதாலும் மாரிமழை காலம் என்பதாலும் காட்டு யானைகளில் இருந்து பாதுகாப்புப் பெறுவது தமது வாழ்வாதார மற்றும் உயிர்ப் போராட்டம் என்றும் கிராம மக்களும், விவசாயிகளும் தெரிவிக்கின்றனர்.

# குப்பைகள் கொட்டுவதை எதிர்த்து நேற்று வீதிக்கு இறங்கிய மட்டக்களப்பு மக்கள்!

மட்டக்களப்பு,ஜன.04

மட்டக்களப்பு - போரதீவுப் பற்று, திருப்பழுகாமத்தில் குப்பைகள் கொட்டப்படுவதற்கு எதிராக நேற்று பிரதேச மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

அத்துடன், இதன்போது குப்பைகள் கொண்டு வந்த டிராக்டர்களையும் மறித்துத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகையில்–

2008 ஆம் ஆண்டு போரதீவுப்பற்று பிரதேச சபையினால் திருப்பழுகாமம், வள்ளுவர்மேடு பகுதியில் சேதனப் பசளை தயாரிப்பதற்கென இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

எனினும் இந்தப் பகுதியில் குப்பைகள் கொட்டும் நடவடிக்கை மட்டுமே மேற்கொள்ளப்பட்ட நிலையில் அந்த பகுதியானது குப்பைகள் கொட்டும் இடமாக மட்டுமே பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

குப்பைகளை தரம் பிரித்து சேதனப்பசளைசெய்வதற்காக அமைக்கப்பட்ட நிலையம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதுடன், அந்த பகுதியில் கடந்த 9 வருடங்களாக குப்பைகள் கொட்டப்



பட்டு வருகின்றன.

எனினும், இவ்வாறு குப்பைகள் தொடர்ச்சியாக கொட்டப்பட்டு வருவதால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதுடன், நீர்நிலைகளும், இயற்கைச் சூழலும் பாதிக்கப்பட்டு, குடியிருப்பாளர்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், இந்த பகுதிகளில் கால்நடைகள் வளர்க்கப்படுவதன் காரணமாக கால்நடைகளும் பாதிக்கப்படும் நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், சம்பவ இடத்திற்கு வருகைதந்த போரதீவுப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடி ஒருமாத காலம் தமக்கு அவகாசம் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் அதனை நிராகரித்த மக்கள், இப்பகுதியில் குப்பை கொட்டுவதற்கு இனியொரு போதும் அனுமதிக்க மாட்டோம் என தெரிவித்ததுடன், தமது பிரச்சினைகள் தொடர்பில் பல தடவைகள் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்ட போதும் பிரதேச சபைஎந்தவிதநடவடிக்கையும் எடுக்கவில்லையென குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த பகுதியில் குப்பை கொட்டுவதை தற்காலிகமாக நிறுத்துவதாகவும், இதனால் திருப்பழுகாமம், கோவில்போரதீவு, பெரியபோரதீவு, முனைத்தீவு உட்பட ஆறு பகுதிகளில் குப்பைகள் சேகரிப்பதை தற்காலிகமாக நிறுத்துவதாகவும், நாளை (இன்று) காலை விசேட கூட்டம் ஒன்றை கூட்டி இந்த பிரச்சினை தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் பிரதேசசபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

# கடந்த வருடத்தில் கைப்பற்றப்பட்டுள்ள போதைப் பொருளின் பெறுமதி 990 கோடி!

கொழும்பு,ஜன.04

பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவினரால் கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 990 கோடி ரூபா பெறுமதியான 332 கிலோவும் 500 கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இந்த ஹெரோயின் போதைப் பொருளுடன் 29 ஆயிரத்து 690 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 36 பேர் வெளிநாட்டுப் பிரஜைகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பல்லிளித்து...**

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு விளக்கிவருகிறார் எனக் குறிப்பிடுகின்றார். கூட்டாட்சிக்கு வித்திடாத ஒரு செயற்றிட்டத்தை வைத்துக் கொண்டு கூட்டாட்சி பற்றிப் பேசியதாகக் கூறியது எமக்கு ஆவலை எழுப்புகின்றது. எதைச் சுமந்திரன் கூறினார் என்பது முக்கியம். அவர் சிங்கள மக்களுடன் பேசினார் என்பது ஓர் அலகே. எதைப்பேசினார் என்பது மறு அலகு. எந்த சோபித தேரர் என்பதும் குறிப்பிடப்படவில்லை. ஒருவர் காலமாகி பல மாதங்கள் ஆகிவிட்டன.

20. மற்றவர்கள் தமது தயவின் அடிப்படையில் தருவனவற்றை ஏற்று அவற்றிற்கு நன்றிக் கடன் படுபவர்களை எலும்புத் துண்டுகளைப் பெறுவன வற்றுடன் ஒப்பிட்டது ஒரு தவறாக இருக்கலாம். அவ்வாறான உயிரினங்கள் கூட தமது வாலை மிதித்துவிட்டால் சத்தம் போட்டாவது எதிர்ப்பை வெளிக்காட்டுவன. காணிபறிபோகின்றது. வாழ்வாதாரங்கள் பறிபோகின்றன. வாணிபம் பறிபோகின்றது. சுற்றுலாவும் எமது வளங்களும் சுமந்துசெல்லப்படுகின்றன. குடியேற்றம் குயுக்தியுடன் ஈடேற்றப்படுகின்றன. காணாமற்போனோர் பற்றி கடுகளவுஞ் சிந்தனை இல்லை. பெண் தலைமைக் குடும்பங்கள்படும்பாடுபற்றிஆராயஆர்வமில்லை. இவற்றிற்காக ஒரு திடமான குரல் கூடக் கொடுக்காது தருவதை ஏற்போம் என்பது நண்பருக்குச் சரியாகப்படுகின்றனவா? அவரே பதில் தரட்டும்!

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

காலைக்கதிர் Kalaikkathir


# பொய் கூறி அரசியல் நடத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## கடுமையாகச் சாடுகிறார் சுரேஷ்

(எஸ்.நிதர்ஷன்)

இடைக்கால அறிக்கை, ஒற்றையாட்சி என்று ஜனாதிபதியும் பிரதமரும் உண்மை கூறியிருக்கின்றனர். ஆனால் இடைக்கால அறிக்கை சமஷ்டி தான் என்று சம்பந்தனும் சுமந்திரனும் பொய் கூறுகின்றனர்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுரேஷ் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

புதியஅரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் எல்லாமே இருக்கிறது. ஆனால் அதனை எவரும் படிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகிறார்.


அவருடைய கருத்து பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் படிப்பறிவில்லாதவர்கள், சிவில் சமூகத்தினர் படிப்பறிவில்லாதவர்கள், மக்கள் படிப்பறிவில்லாதவர்கள், முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் படிப்பறிவில்லாதவர். ஒட்டுமொத்தத்தில் நாங்கள் அனைவரும் அடி முட்டாள்கள் என்றும், தான் மட்டுமே படித்தவன், மேதை என அவர் நினைக்கிறார்.

அவர் கூறுகிறார் சமஷ்டிப் பெயர்ப் பலகை இல்லை. ஆனால் சமஷ்டி இருக்கிறது என்று. நன்றாகப் புகுந்து பார்க்கவேண்டுமாம். சுமந்திரன் மக்களை எந்த நிலையில் வைத்துப் பார்க்கிறார் என்பதற்கு இது சிறந்த உதாரணம்.

வடக்கு–கிழக்குஇணைப்பைப் பற்றிப் பேசுகிறார். அதாவது வடக்கு – கிழக்கு இணைப்புக்கு 3 யோசனைகள் கூறப்பட்டுள்ளதாம். அதுதான் வடக்கு–கிழக்கு இணைப்புக்கான வழி. ஜனாதிபதியும், பிரதமரும் மிகத் தெளிவாகச் சொல்கிறார்கள். வடக்கு – கிழக்கு இணைப்பு தொடர்பாக 73 தடவைகள் கூடிய வழிகாட்டல் குழுவில் ஒன்றுமே பேசப்படவில்லை என்று. ஆனால் வடக்கு – கிழக்கு இணைப்புக்கு 3 யோசனைகள் உள்ளதாம். சுமந்திரன் சொல்கிறார்.

எங்கள் பார்வையின்படி ஜனாதிபதியும் பிரதமரும் தங்கள் மக்களுக்கு உண்மை சொல்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்குப் பொய்யை மட்டுமே சொல்கிறார்கள்.

புதிய அரசமைப்பு உருவாக்கப் பணியில் அரைவாசித் தூரம் பயணித்து விட்டார்களாம். அரைவாசித் தூரம் பயணித்து என்ன சாதித்தீர்கள்? கொழும்பு – 07 இல் உல்லாச பங்களா, எஸ்.ரி.எவ். பாதுகாப்பு, பிள்ளைகளுக்கு அரச வேலை, இதுதான் சாதித்தது. மக்கள் இதனால் அடைந்த பயன் ஒன்றுமில்லை. எனவே மக்கள் இந்தத் தடவை மாற்றம் ஒன்றை நிச்சயமாக கொண்டுவரவேண்டும் – என்றார். (ஐ –7)




# கூட்டணி உடைந்திராவிடின் இருந்திருப்பார் பிரபாகரன்

## கூறுகின்றார் ஆனந்தசங்கரி

(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சிலர் தம் சுயநலனுக்காக உடைத்திருக்காவிட்டால் பிரபாகரன் என்னும்இலட்சியப்போராளி இன்று இருந்திருப்பார். 2004ஆம் ஆண்டே போர் நிறைவடைந்திருக்கும். பல லட்சம் மக்கள், பல ஆயிரம் போராளிகள் உயி ருடன் இருந்திருப்பார்கள். 3 சுயநலவாதிகளே இத்தனை அழிவுகளுக்கும் பிரதான காரண கர்த்தாக் கள் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின்தலைவர்வி.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கடந்த 2004ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சிலர் தங்கள் சுயநலனுக்காக உடைத்திருக்காவிட்டால் 2004ஆம் ஆண்டே போர் நிறைவடைந்திருக்கும். அப்போது போரை நிறைவுக்கு கொண்டுவருவதற்குப் புலிகளும் சாதகமான சமிக்ஞையைக்காண்பித்தார்கள். ஆனால் சிலருடைய சுயநலன் சார்ந்த செயற்பாடுகளினால் போர் மேலும் 5 வருடங்கள் நடைபெற்றது.

இதனால் பல ஆயிரக் கணக்கான இலட்சியப் போராளிகள் உயிரிழந்தார்கள். பல லட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். இது தவிர்க்கப்பட்டிருந்தால் பிரபாகரன் என்றொரு இலட்சியப் போராளி, இலட்சிய வீரன் இன்று இருந்திருப்பார். பல கோடி மதிப்பிலான சொத்துக்கள் பாதுகாக்கப் பட்டிருக்கும்.

இத்தனை அழிவுகளுக்கும் சில சுயநலவாதிகளே பிரதான காரணம். 3 சுயநலவாதிகளை நான் அடையாளப்படுத்துவேன். அவர்களுடைய பெயரை நான் இங்கே கூற விரும்பவில்லை. வேறு யாரும் கூற விரும்பினால் கூறுங்கள்.

இப்போது சமஷ்டி பற்றி பேசுகிறார்கள். 2005ஆம் ஆண்டே சமஷ்டி எங்கள் கதவுகளைத் தட்டியது. ஆனால் அதனை நாங்கள் கண்டுகொள்ளவேயில்லை. அதற்கும் காரணம் தமிழ் மக்களை வழிநடத்திய தீயவர்களே. – என்றார். (ஐ –7)

# ராஜபக்ஷாக்களின் டுபாய் வங்கி கணக்குகள் விரைவில் அம்பலம்

## கூறுகின்றார் அமைச்சர் ராஜித



ராஜபக்ஷாக்கள் டுபாய் வங்கிகளில் வைத்துள்ள கணக்குகள் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகச் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவை விரைவில் மக்களுக்கு அம்பலப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வாரம் நிதி மோசடி விசாரணைப் பிரிவு அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான காரணங்களைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமெனவும் அவர் கோரியிருந்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த பல நாள்களாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள அதிகாரிகள் அங்கு பல தகவல்களைத் திரட்டியுள்ளனர் எனவும், அது தொடர்பான தகவல்கள் சில நாள்களில் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாமலுக்குக் கனவிலும் தனது டுபாய் வங்கிக் கணக்குகள் தொடர்பில் பயம் ஏற்பட்டுள்ளதாகவும் ராஜித குறிப்பிட்டார். (ஐ)

# உரத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு

கொழும்பு, ஜன .04

உரத்துக்கான தட்டுபாட்டுப் பிரச்சினை இன்று இரவு (நேற்று) தீர்க்கப்பட்டுவிடும் என்று அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

பாகிஸ்தானில் இருந்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் துறைமுகத்தில் இருந்து நாட்டில் உரம் தேவைப்படும் பிரதேசங்களுக்கு 200 லொறிகள் மூலம் விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரத்தைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே உரத் தட்டுப்பாடு நிலவியது. இதற்குக் காரணம் அந்த நாட்டில் நிலவிய உரத்தை ஏற்றுமதி செய்வதற்கான தடையே – என்றார். (ஐ)



இலங்கை மின்சார சபையின் யாழ்.மின்பாவனையாளர் நடத்திய ஒளிவிழா நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது. இதில் மின்சார சபையின் யாழ்.மாவட்ட பிரதம மின் பொறியியலாளர், பொறியியலாளர், மின் அத்தியட்சகர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# வீணைச் சின்னத்தின் வெற்றியை உறுதிப்படுத்த ஒன்றுபடுவோம்

## வேட்பாளர்கள் மத்தியில் டக்ளஸ் எம்.பி.



யாழ்ப்பாணம், ஜன .04

வீணைச் சின்னத்திலான எமது கட்சியின் வெற்றியை உறுதி செய்வது மட்டுமன்றி, அந்த வெற்றியை வலுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களுடனான சந்திப்பில் உரையாற்றுகையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வேட்பாளர்களுடனான சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இன்றுள்ள சூழ்நிலை எமக்குச் சாதகமாக உள்ள நிலையில், அதனை நாம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் நாம் பெற்றுக்கொள்ளவுள்ள வெற்றியானது எமது மக்களின் வாழ்வியல் விடியலுக்கான ஆரம்பமாகப் புள்ளியாகவும் அமையும்.

கடந்த காலங்களில் நாம் பல சவால்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு மக்களின் நலன் சார்ந்த பல்வேறு செயற்றிட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்திக் காட்டியுள்ளோம்.

இந்தத் தேர்தலில் நாம் ஒன்றிணைந்து எமது அர்ப்பணிப்புடனான உழைப்பைப் பயன்படுத்தி வெற்றியையே எமது இலக்காகக் கொண்டு செயற்படுவோம். அந்த வகையில் வீணையின் வெற்றி மக்களின் வெற்றியாக அமையப்பெற மக்களிடம் எமது கருத்துக்களைக் கொண்டு செல்ல வேண்டும்.

குறிப்பாக ஒவ்வொரு வாக்கும் பெறுமதியானவை என்பதுடன், வாக்களிப்பதன் அவசியத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டியதும் மக்களுக்கு வலியுறுத்த வேண்டும்.

அந்த வகையில் வீணைச் சின்னத்திலான எமது கட்சியின் வெற்றி உறுதி செய்யப்படும் பட்சத்தில், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகள் தொடக்கம் அனைத்துவிதமான தேவைப்பாடுகளையும் துரிதகதியில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க எம்மால் முடியும். –என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2018 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.